
# நீயே தான்
# என் மனைவி

அருணா நந்தினி



# நீயே தான் என் மனைவி

1

''வினயா... ஏய்... இன்னுமாடி ரெடியாகலை?'' கடைசிமுறையாய் தன் அழகை கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருந்த வினயா பரபரப்புடன் வெளியே வந்தாள்.

''போகலாமா... நான் தயார்... மம்மி... புறப்படு இறேன்... மீரா வீணையை எடுத்துப்போகணுமே. ஆட்டோவில் முடியுமா?'' தன் தோழியைக் கேட்டாள் வினயா.

''ஆட்டோவெல்லாம் வேண்டாம்மா வினயா... சொல்வதைக் கேள்... அவ்வளவு காசு கொடுத்து வாங்கின தஞ்சாவூர் வீணை. பத்திரமா டாக்ஸியில் எடுத்துக் கொண்டு போய், கொண்டு வா... கூட வேணும்னா உன் அண்ணனை அழைத்துப்போ...'' கையை முந்தானையில் துடைத்தவாறு வந்த ஜெயம் கூறினாள்.

அம்மா சொல்றதும் உண்மைதான். பார்த்து பார்த்து வாங்கிய வீணை. ஆட்டோவில் கொண்டுபோய் லேசாய்



ஏதாவது உராய்ந்தாலும் போதும்... மனமே உடைந்து போய்விடும்.

ஆனால் அண்ணன்....? அய்யோ...

''வேண்டாம் அம்மா... உன் சிடுமூஞ்சி பிள்ளையை அழைத்துப் போவது மடியில் பூனையைக் கட்டிக் கொண்டு போற மாதிரிதான். 'நொய் நொய்' என்று ஏதாவது முனகிக் கொண்டு இருப்பான். கடுகளவு பொறுமையும் கிடையாது... எப்போதும் எரிச்சல் தான்...'' வீணையைத் துடைத்தவாறு சொன்னாள் மகள்.

''போகட்டும் வரும்போதாவது அவன் கூட வரட்டும். காலம் கெட்டுக் கிடக்கும்மா... வினயா'' அம்மா விடாமல் சொன்னாள்.

''சரி... அனுப்பிவை... அதுவும் அவன் வந்தால்... ஆனால் ஒண்ணு.. அங்குவந்து சிடு சிடுன்னு பேசினால் அவ்வளவுதான்.''

''அவனோட சுபாவம்... அது தெரிந்ததுதானே''

''சுபாவமா.... நம்மிடம்தான் 'குர்' முகம். நாளைக்கு பொண்டாட்டியிடம் இளிப்பான் பார்... இளித்த வாய் அப்படியே நின்றுவிடும்... வா... மீரா... இந்த 'பேக்' கை பிடி.... ம்ம்... குறைந்தபட்சமாய் என் அண்ணா டாக்ஸி அழைத்து வந்து உதவி பண்ணலாம்.... ம்ம்... பெயருக்கு அண்ணா... பைசா பிரயோசனம் இல்லை...'' அவள் முடிக்கும் முன் கார்த்திக் உள்ளே வந்தான்.

''என்னைப்பற்றி தானே பேச்சு... உன்னை யார் எல்லாவற்றிலும் மூக்கை நுழைக்கச் சொன்னது... பாட்டு.... நடனம்... வீணை... எல்லாவற்றிற்கும் நான் இருக்கேன்னு குதித்தால் இந்த மாதிரிதான் அவதி

படவேண்டியிருக்கும்... எல்லோரும் எந்த தொடிகம் இல்லாம நிம்மதியா பஸ்ஸிலேயோ, பைக்கிலேயோ... இல்லை ஆட்டோவிலோ போவார்கள்... உன்னை மாதிரியா... இது தேவையா... உன்னோடு பார்... உன் தோழிக்கும் தொல்லை... பாவம்'' என்று பொரிந்து தள்ளினான் கார்த்திக்.

''அதெல்லாம் இல்லை'' என்று கூச்சத்துடன் முணுமுணுத்தாள் மீரா.

''வா... போகலாம் மீரா... இவனிடம் வாய் கொடுத்து மீள முடியாது....'' தோழியை இழுக்காத குறையாய் புறப்பட்டாள் அவள்.

''உன்னைச் சொன்னால் உடம்பு எரிச்சல்'' அவனது வார்த்தைகளில் இன்னும் எரிச்சல் அடைந்தவனாய் ''அம்மா... ஒருவேளை பிரசாந்த் வந்தால் காலேஜுக்கு வரச் சொல்லும்மா... அவருடனே வந்து விடுகிறேன்'' என்று கூவிவிட்டு சென்றான்.

கல்லூரி ஆண்டு விழா!

வண்ணத்துப் பூச்சிகளாய் மாணவிகள்... மன்மத ராஜாக்களாய் மாணவர்கள் அவர்களைக் கவர முயற்சித்துக் கொண்டிருந்தனர்.

பாடம்... படிப்பு என்பதை அன்றைக்கு மறந்து... கும்பலாய் நின்று சிரித்துக் கொண்டிருந்தனர். முக்கிய பிரமுகர் சோமசுந்தரம் தலைமை தாங்க... சிறப்பு விருந்தாளியாய் இலக்கிய செம்மல் இளங்கோவன் வந்திருந்தார்.

தவிர அப்போதுதான் தொலைக்காட்சியில் முகம் காட்ட தொடங்கியிருந்த ஒரு நட்சத்திரம் வேறு...



பெயர் நந்தா ஸ்ரீ... இன்னும் கல்லூரி நிர்வாகியின் நண்பர் ஜெயச்சந்திரன்...

பருப்பில்லாமல் திருமணமா... ஜெயச்சந்திரன் இல்லாமல் விழாவா?

ஜெயச்சந்திரன் புதிய முகம் அல்ல. எல்லா கலை நிகழ்ச்சிகளிலும் வருகிறவன் தான்... அவனுக்கு என்று தனி மரியாதையும் உண்டு... அதற்கு காரணமும் இருந்தது.

பெரிய பணக்காரன்... ஏறக்குறைய அரைக்கோடிக்கு மேல் சொத்துமாய் பல தொழில்களை செய்பவன். ஏற்கனவே தந்தை ஆரம்பித்த ''டிபார்ட் மெண்ட்டல்'' வியாபாரத்துடன், இணைத்தொழில்களை ஆரம்பித்தான். இந்தக் கல்லூரியின் வளர்ச்சியில் அவனுக்கும் பங்கு இருந்தது... கட்டடத்திற்கு சிமிண்ட் சப்ளை செய்ததும் அவன் தான். 'லாப்'பில் புதிய கருவிகளை வாங்கணும் என்றால் 'இதோ' என்று வந்து நிற்பான்... வகுப்பு அறைகளில் மின்விசிறிகளையும், குழல் விளக்குகளையும் பொருத்த உதவியவன் அவன்தான்... கல்லூரியின் தண்ணீர் வசதிக்கு 'சின்டெக்ஸ்' போட்டுத் தந்தவனும் அவனே. இன்னும் என்னென்னவோ... இத்தனைக்கும் கைம்மாறாக ஒவ்வொரு நிகழ்ச்சிக்கும் அவனுக்கு விசேச அழைப்பு உண்டு... அந்த காரணத்தால் அலட்டிக் கொள்வதும் கிடையாது. தான் பாட்டுக்கு வருவான்... அமர்ந்து கவனிப்பான். வளவளவென்ற பேச்சும் கிடையாது. போய் விடுவான்.

சில மாணவிகளுக்கு அவன் மேல் கொஞ்சம் கிறக்கம் உண்டு என்றும் சொல்லலாம்.

''அப்பா இன்னிக்கு ஜம்முன்னு இருக்கார் இல்லே.''

''அழகன் படத்தில் வர்ர மம்முட்டி மாதிரி...''

''அதே உயரம்... அதே அழகு... கொஞ்சம் இளைப்பு.''

''நிறம் கம்மி...''

''ஒண்ணும் இல்லே... மாநிறத்துக்கும் மேல்தான்.''

''ஏய்... வாயை மூடுங்கடி... தலைவர் ஏதோ பேச ஆரம்பித்திருக்கிறார்... கவனிப்போம்'' என்று ஒருத்தி அதட்ட சள சள பேச்சு நின்று போனது.

மேடையின் ஒரு பக்க அறையில் காத்திருந்த வினயாவிற்கு லேசாய் படபடப்பு. முதல் இறைவணக்கப் பாட்டு அவளுடையதுதான். பாடிப் பழக்கம் தான். இருந்தும் லேசாய் உதறல்.

ஒருவழியாய் கல்லூரி திறப்பு விழாவிலிருந்து நடந்த முக்கியத்துவங்களை வரிசைப்படுத்தி எடுத்துரைத்து... அந்த ஒரு வருட சாதனைகளை விலாவரியாய் கூறி... காரணமானவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பல துறைகளில் சிறந்த மாணவிகளுக்கு பரிசளிக்க தொடங்கியாகிவிட்டது.

விளையாட்டில் வினயாவிற்கு ஒரு பரிசுதான். ஓட்டப்பந்தயத்தில் முதல்... மீதியில் அவள் கலந்து கொள்ளவில்லை...

அடுத்த பாட்டுப் போட்டியில் முதல் பரிசு அவளுக்குத்தான். பேச்சுப் போட்டியிலும் அவள் விட்டுத்தரவில்லை. இரண்டு பரிசுகளையும் இலக்கியவாதி இளங்கோவனிடம் இருந்து பெற்றாள்.

நாடகம்... கை வேலைத்திறன் போன்றவற்றிற்குரிய இதர பரிசுகளை யார் யாரோ வந்து பெற்றுக்கொள்ள... மறுபடியும் பரதநாட்டியத்திற்கு வந்த முதற்பரிசையும்



ரங்கோலிக்கு கிடைத்த இரண்டாம் பரிசையும் நடிகையிடம் பெற்றுக்கொண்டாள்.

கடைசியாய் அறிவிப்பாளர் அனைத்து மாணவர்களில் அதிகப் பரிசுகளைத் தட்டிச் சென்ற வினயாவிற்கு சிறப்பு பரிசு அளிக்க விரும்புவதாய் கூறவே, மாணவர்களிடையே பலத்த கரகோஷம். வெள்ளிக் கோப்பையை அவளுக்கு அளித்த ஜெயச்சந்திரன் கைகுலுக்க தன் கையை நீட்டினான். தயங்கிய அவள் மரியாதையைக் கருதி தன் கரத்தை கொடுத்தாள். அவனது பிடி அளவுக்கு அதிகமாகவே அழுத்தமாய் இருந்ததுபோல தோன்றிற்று.

வேண்டும் என்று செய்தானோ என்று சந்தேகத்துடன் அவனைப் பார்த்த போது அவன் உதட்டில் புன்னகையுடன் உற்றுப் பார்த்தான்.

'ச்சூ... பத்தோட பதினொன்று' கணக்கில் சின்னப் புன்னகையை உதிர்த்துவிட்டு அதில் எரிச்சல் தோன்ற அங்கிருந்து விரைந்தாள்.

மீரா அந்த கோப்பையை வாங்கிப் பார்த்தவாறே ''யாருடீ இவன்... ஒரு நிகழ்ச்சிக்கும் தப்பாமல்...'' என்றாள்.

''யாரோ... நமக்கு எதுக்கு அது.. மீரா வீணை எங்கே... சுருதி கூட்டி சரியாக வைக்கணும் வா...'' என்று அசட்டையாகச் சொன்னாள்.

''நேரம் இருக்கு வினு. இறைவணக்கப் பாட்டுக்கு அப்புறம் மூன்று கலை நிகழ்ச்சி. அதற்கு பிறகு உன் முறை... வீணை... அதற்கு அப்புறம் ஐந்தாவது உன் நாட்டியம். மத்தியில் ஷேக்ஸ்பியர் நாடகம் இருக்கு... அதற்குள் பரதநாட்டியத்திற்கு நீ ரெடியாகலாம்.''

"நீ சொல்றபோது என்னவோ அதிசயமாக இருக்குடி... இருந்தும் ஏதோ ஒரு பயம்... மீரா... எத்தனையோ மேடை பார்த்திருந்தும் மனதினுள் என்னவோ பட் டாம்பூச்சி பறக்கிறதுபோல படபடப்பு" கரவொலி சத்தம் காதை பிளந்தது.

"ஏய்... ஆரம்பமாயிடுத்து போலிருக்கு" கிசுகிசுத்தாள் மீரா.

அது சரிதான் என்பது போல கலை நிகழ்ச்சிகளுக்கு பொறுப்பு ஏற்றிருந்த ராஜரத்னம் "வினயா... ரெடியா... உன் பெயரை அழைக்கப்போகிறேன்." என்று எச்சரித்துப் போனார்.

'மைக்' முன் வந்து நின்று வினயா பாட ஆரம்பித்த போது பயம் அனைத்தும் மாயம்!

"வெங்கடாசல நிலையம்... வைகுண்டப் புரவாசம்" தன்னை மறந்து பாடி முடித்தாள். குரல் குழைந்து நின்றது. உள் அறைக்குள் சென்றவளை மீரா தட்டிக் கொடுத்து உற்சாகமூட்டினாள்.

"விறு... அந்த ஆள்... அதுதான் உனக்கு சிறப்புப் பரிசு கொடுத்தானே... அவன் உன்னை விழுங்குவது போல பார்த்துக் கொண்டிருந்தான்" என்றாள் மீரா.

"சரிதான்.. மேடையில் நின்று யார் பாடினாலும் உறுத்து தான் பார்ப்பார்கள். அது பெரிய விஷயமாக்கும்" அலட்சியமாய் பதில் சொல்லிவிட்டு வீணை முன் அமர்ந் தாள். வீணையின் நரம்பினை இறுக்கி, சுருதி சரியாக இருக்கிறதா என்று மீட்டிப் பார்த்து சரி செய்தாள்.

வீணை வாசிக்கும் சமயம் வந்தது. மீரா துணை செய்ய மேடையில் அமர்ந்தாள்.



"வாதாபி கணபதிம் பஜே" பிள்ளையார் வணக்கமாய் பாட்டு.

அடுத்து "நகுமோ... கனலே..." அடுத்தாய் பாரதி யாரின் அற்புதமான "சின்னஞ்சிறுகிளியே..." முடித்த உடன் பெரிய கரவொலி.

இரண்டும் நன்றாய் அமைந்தது. இனி பயமில்லை. பரத நாட்டியம்... மீன் குஞ்சுக்கு நீச்சல் மாதிரி... நிச்சயம் நன்றாக ஆடிவிட முடியும். அதில் சந்தேகமே இல்லை.

அந்த நம்பிக்கையுடன் நாட்டியத்திற்கு தயாரானாள் வினயா.

மனதினுள் பிரசாந்த் வந்திருக்கிறானோ இல்லையோ... எண்ணம் வட்டமிட்டது.

தன் பாட்டை.... வீணைக்கச்சேரியை கேட்டிருப் பானோ... பிரசாந்த் அவளது வருங்கால மணாளன். மாமாப் பிள்ளை... பெரியோர்களால் பேசி முடித்த முடிவு.

"பரதநாட்டியம்... டைமிஸ் வினயா."

மைக் அறிவிப்பு அவளைத் தட்டி எழுப்ப மேடைப் பக்கம் விரைந்தாள்.

பரத நாட்டிய உடை... அவளை இன்னும் உயரமாய் காட்டியது. ரோஸ் பட்டுப் புடவை... அகன்ற கருநீல சரிகை கரையுடன்... அவளுக்கு இன்னும் அழகூட்டியது. அவளுக்கு பிடித்த "தாயே யசோதா" பாட்டு... அவளே கண்ணன்... அவளே யசோதா... அவளே கிருஷ்ணனைப் பற்றிக் குறை கூறும் ஆயர் குல பெண்களாய்... மாறி மாறி அபிநயம் பிடித்தாள்.

கண்கள் கோபமாய் விழித்தன... "செய்யாதே" என்று கெஞ்சின... குறும்புடன் சிரித்தன... விஷமப் பார்வை பார்த்தன... அக்கம் பக்கம் திருட்டுப் பார்வை பார்த்தன.

"பந்தளவாகிலும் வெண்ணைத் தந்தால் விடுவேன்" என்று கண்கள் முன்பக்கம் பாய்ந்த போது அவன் மேல் பட்டன. அவன்.... ஜெயச்சந்திரன்... கண்கள் அவளையே விழுங்கப் பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு நிமிடம்... இதயத் தாளத்துடன் பாதங்களின் தாளமும் தப்பின."

அதென்ன அப்படியொரு தீர்க்கம் அவனது பார்வையில். சட்டென்று பார்வையைத் திருப்பிக்கொண்டு நாட்டியத்தை ஆடி முடித்தாள். இருந்தும் உள்ளுக்குள் குறுகுறுப்பு... இன்னும் அப்படியே நின்றுவிடுவது போல பார்த்துக் கொண்டிருக்கிறானோ....

ச்சீ... இது என்ன... நான் ஒருத்திதான் மேடையில்... எல்லோரும் என்னையே பார்ப்பது விந்தையல்ல... அவனும் இமைக் கொட்டாமல் பார்ப்பதும் அதிசயமில்லை. தன்னையே சமாதானப்படுத்திக் கொண்ட போதும் மனதினுள் ஒரு மூலையில் முணுமுணுப்பு.

"ஊஹும்... அவன் பார்வையில் ஏதோ சரியில்லை... ஏதோ... தனியாய்... ஆயிற்று... இந்தக் கலை நிகழ்ச்சி தான் கடைசி. இனி தேர்வு தான். அத்துடன் கல்லூரி வாழ்வுக்கு முற்றுப் புள்ளிதான். நன்றாய் பார்த்துக் கொண்டு போகட்டும்" என்று நினைத்துக் கொண்டாள்.

அலங்காரத்தை கலைக்க மீராவும் துணை செய்தாள்.

"வினயா... பஸ்மாசுரன் - மோகினி நாட்டியம் செய்யனும் நினைச்சே - திடீர்னு என் 'தாயே யசோதாவுக்கு' போனே... அதையே ஆடியிருக்கலாமே."



"பிராக்டீஸ் பண்ண நேரம் கிடைக்கவில்லையே. தவிர இந்த நடனத்தில் முகபாவங்களை மாற்றிக் காட்ட நிறைய இடம் இருக்கிறது என்றுதான், நன்றாய் அமைந்ததா?"

"சூப்பர்."

ராஜரத்னம் வந்தார். "பிரமாதம் வினயா... நல்ல திறமையான மாணவியை இந்த வருடத்துடன் கல்லூரி இழக்கப் போகிறதே என்று வருத்தம்" புகழ்ந்தார். அவருக்கு நன்றி கூறினாள் வினயா.

"மீரா... பிரசாந்த் வந்திருக்கிறாரா என்று பாரேன் போய் விடலாம். என் பரிசுக் கோப்பையை பத்திரமாக எடுத்து வைத்தாய் தானே..."

தலையசைத்தாள் அவள்.

பிரசாந்த் வந்திருக்கிறான் என்று அறிந்து பெருமூச்சு விட்டாள்.

"நல்ல வேளையாய் எங்கள் வீட்டு முசுடு வரவில்லை. வாடி. போகலாம்" என்று வீணையை எடுத்துக் கொண்டாள். யார் கண்ணிலும் படாமல் இன்னொரு வழியாய் வெளிவந்து விட்டனர் இருவரும்.

தாயிடம் கோப்பையைக் காட்டும் போது மறுபடியும் நெருடல்... அந்த அழுத்தமான கைபிடிப்பும், தீர்க்கமான பார்வையும் இப்போதும் நினைக்க உள்ளம் சில்லிட்டது.

"ச்சே... கூடாது... அவனை நினைக்கக் கூடாது..." உதறித்தள்ளினாலும் மறுபடியும் ஒட்டிக்கொண்டது.

## 2

கலையப்படாத அலங்காரங்களுடன் கல்லூரி இருந்தது...

பிரின்ஸ்பால் வினயாவை அழைத்து வாழ்த்தினார். எவ்வளவு நிகழ்ச்சிகளும் அருமை என்றாலும், அவளுடைய நடனம் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் மணிமுடியாய் இருந்தது என்று பாராட்டிப் பேசினார்.

கல்லூரி சேர்மேன் அழைப்பதாய் சொல்ல... அங்கு சென்றாள்.

அவர் அவளை வரவேற்றுப் புகழ்ந்தார். பின்பு அவளைப் பார்க்க ஜெயசந்திரன் விரும்புகிறான் என்று சொன்னார்.

அவள் குழம்பி நின்றாள்.

அவன் ஏன் தன்னைப் பார்க்க விரும்ப வேண்டும்? பார்த்துப் பேச ஏதும் இல்லையே... இது என்ன தலை வேதனை... வேண்டாம் என்றாலும் மீண்டுமா?

சந்திப்புக் கூடத்தில் இருக்கின்றான் என்று தெரிந்து தயங்கிச் சென்றாள்.

உள்ளே அமர்ந்திருந்த அவன் அவளைப் பார்த்ததும் எழுந்து நின்றான்.

''குட்மார்னிங், மிஸ் வினயா... என் பெயர் ஜெயசந்திரன்.''

''தெரியும்.''

''நேற்று உங்களுடைய கலை நிகழ்ச்சிகளைக் கண்டேன்.''

''அதுவும் பார்த்தேன்.''

''சரி... எதற்கு உங்களை சந்திக்க விரும்பினேன் என்று தெரியுமா?''

''தெரியாது.''



ஒரு நிமிடம் மௌனம்.

''கல்லூரிப் படிப்பு முடிந்ததும் என்ன செய்வதாய் உத்தேசம். வேலைக்கு செல்ல விருப்பமா?'' என்று கேட்டான்.

அப்பாடா... வேலை தரப்போகிறானா... [illegible] என்று பயந்து போய்... [illegible] கொண்டாள்.

அரண்டவன் கண்ணுக்கே... இருண்டதெல்லாம் பேயாகத் தெரியும்... அப்படித்தான் இருக்கிறது.

''பாட்டு டீச்சராக விரும்பினால் எனக்குத் தெரிந்த பள்ளிக்கூடம் இருக்கிறது... சிபாரிசு செய்கிறேன். இல்லை வீணைப்பாடம் சொல்லித்தர விரும்பினால் அதற்கும் வழிசெய்து தரலாம். பெரிய இடங்கள் எனக்குத் தெரியும். அதுவும் வேண்டாம் என்றால் பரத நாட்டியம் சொல்லித் தரும் வேலைக்கும் ஏற்பாடு செய்கிறேன்... இல்லை... உங்கள் படிப்புக்கு ஏற்ற ஆபீஸ் வேலை வேண்டும் என்றால் அதுவும் என்னால் முடியும். எந்த வேலைக்கு விருப்பம் என்று சொன்னால் வாங்கித் தருகிறேன்.'' அடிக்குரலில் நிதானமாய் சொன்னான் அவன்.

''என்மேல் ஏன் இந்தக் கரிசனம்?'' சந்தேகத்துடன் கேட்டாள்.

''ஏன்? இருக்கக் கூடாதா?... நல்ல திறமையுள்ளவள் என்ற நல்ல எண்ணத்தினால் தான். உங்களது திறமைக்கு தக்கதாய் உதவி.''

''மிக்க நன்றி... தேவைப்பட்டால் சொல்கிறேன்'' என்று சொல்லிவிட்டுத் திரும்பினாள்.

"வினயா..." மின்... மின்னலானது அந்த அழைப்பில் திரும்பினாள். இன்னும் என்ன என்பதுபோலப் பார்த்தாள்.

"நான் சொன்ன வேலைகளுடன் இன்னொன்றும் இருக்கிறது... அது... என் வீட்டில் என் மனைவி என்ற வேலை. அதற்கு ஒப்புதலா?"

சிலைபோல நின்று அவனை விழித்துப் பார்த்தாள் அவள்.

அவன் புன்னகைத்தான். "என்ன பார்க்கிறீர்கள். உண்மையைத்தான் சொல்கிறேன். நான் உங்களை... சாரி... உன்னை மணக்க விரும்புகிறேன்... சம்மதமா?"

பட்டென்று உடைத்த மாதிரிக் கேட்பான் என்று அவள் எதிர்பார்க்கவில்லை. முதலில் அவள் அதிர்ச்சியடைந்தாலும் சமாளித்துக் கொண்டாள்.

"நீங்கள் முதலில் சொன்ன வேலைகளுக்கு நான் தகுதியுடையவள்தான். ஆனால் நீங்க சொன்ன அந்தக் கடைசி வேலைக்கு... சாரி.. எனக்குத் தகுதி கிடையாது..."

"அப்படியென்றால்?"

"அதாவது நான் இன்னொருத்தருக்கு மனைவியாகப் போகிறவள் என்று அர்த்தம்" உதட்டைச் சுழித்து கேலியாகச் சொன்னாள் வினயா.

இப்போது அவனுக்கு அதிர்ச்சி...

"யார்? யார் அது?" படபடத்தான்.

"சொல்ல வேண்டும் என்று அவசியம் இல்லைதான்... ஆனால் உங்களுக்காக சொல்கிறேன். என் மாமாவின் பிள்ளை... பிரசாந்த்... போதுமா..."

அவன் முகம் இறுகிப் போனதை ரசித்தாள்.



"தேர்வு முடிந்ததும் எங்களது திருமணம்...." இதை அமர்த்தலாய் சொன்னாள் வினயா.

உண்மையில் உடனே திருமணம் கிடையாதுதான். ஆனால் அவனுக்காக வேண்டும் என்றே சொன்னாள். அதை ஒரு பாதுகாப்புக் கவசமாய் வைத்து தன்னைக் காத்துக் கொள்ளத்தான். இனி அவன் தன் வழிக்கு வரமாட்டான் என்றுதான்.

"நடக்காது... நிச்சயம் நடக்காது... உன் திருமணம் என்னோடுதான்... அது யாராலும் மாற்றமுடியாது" உறுதியாகச் சொன்னான் ஜெயசந்திரன்.

அவளுக்கு சிரிப்பு வந்தது...

"பகல் கனவு காணவேண்டாம் மிஸ்டர்... எல்லாம் பேசி முடித்தாகி விட்டது... திருமண அழைப்பிதழ் ஒன்றுதான் மிச்சம்... வந்தவுடன் முதல் அழைப்பிதழ் உங்களுக்குத்தான்..." என்று புறப்பட்டாள்.

"வினயா... இப்போதும் சொல்கிறேன்.. நீ தான் எனக்கு மனைவி..."

"பார்க்கலாம்" சவால் விடும் குரலில் சொல்லிவிட்டு வெளியேறினாள்.

## 3

சவால் விட்டுப் பேசி வெளியே வந்த பின்பும் வினயாவின் மேனி இன்னும் நடுங்கிக் கொண்டு இருந்தது...

எரிச்சலும் கோபமும் மாறி மாறி பொங்கிய உணர்ச்சி தடுமாற்றத்தால் கால்கள் பலமிழந்து துவண்டன. அவன் முன்னே வெகு வீறாப்பாய் பேசி விட்டு வந்தாயிற்று...

எதிர்பாராத அவனது சந்திப்பும், எதிர்பார்த்திராத அவனது பேச்சும் அவளுக்கு அதிர்ச்சியைத் தந்ததுதான். அதைவிட அத்தனை சொன்னபின்பும் நீதான் மனைவின்னு அடம் பிடித்தானே அதுதான் அவளைக் கோபத்தின் உச்சிக்குத் தள்ளியது.....

உணர்ச்சிவேகம் அவள் தலையைச் சுற்றச் செய்தது. கண் முன் அந்தக் கட்டிடம்... மரங்கள்.. அனைத்தும் அவளைச் சுற்றித் தட்டாமாலை ஆடுவது போல தோன்றியது. வயிற்றை புரட்டுவது போல உணர்வு.

வகுப்பிற்கு போகவும் பிடிக்கவில்லை. போகும் மனநிலையும் இல்லை.

நேரே வீட்டுக்குப் போகவேண்டும். தன் தாயின் முகத்தைப்பார்த்து விட்டால் போதும்... மனம் சரியாகிவிடும்.

இதை அம்மாவுக்கு சொல்லலாமா... ஏற்கனவே இதய நோயாளி... பலவீன இதயம் தாங்குவாளா? வேண்டாம் அம்மாவிடம் சொல்லக் கூடாது. அம்மாவுக்கு தெரியாமலே இருக்கட்டும்.

பாடங்கள் முடிக்கப்பட்டு, ரிவிஷன் நடந்து கொண்டிருக்கும் நேரம்... ஒருநாளில் எந்த இழப்பும் வராது என்று துணிந்து வீட்டிற்குப் போனாள்.

''என்ன டீ... வந்துவிட்டாய்?'' தாயின் முகத்தில் வியப்பு. ஒருநாளும் மகள் இப்படி வந்ததுகிடையாது.

''என்னவோ போர் அடிச்சதும்மா... நேற்று ஆடிய களைப்பு வேறு. உடம்பெல்லாம் வலி... வந்துவிட்டேன்'' பொய்... சொல்லவேண்டியிருக்கிறது.



''திருஷ்டியாகத்தான் இருக்கும்... வா... சுற்றிப் போடுகிறேன்.'' திருஷ்டி சுற்றிப் போட்டாள் தாய். இந்தப் பாசத்தில் தவிக்கும் தாயிடம் பொய் சொல்வதை நினைத்து வருத்தம் தான்.

''அம்மா... உட்காரேன். உன் மடியில் படுத்துக் கொள்கிறேன்.'' கொஞ்சுவது போலக் கேட்டாள் வினயா.

''என்னடி இது.. குழந்தைமாதிரி கொஞ்சிக்கிட்டு...'' செல்லமாய் கண்டித்தாலும், மகள் கேட்டுக் கொண்டது போல அமர்ந்தாள்.

தாயின் மடியில் தலைவைத்துப் படுத்துக் கொண்ட சிறிது நேரத்தில் சுற்றிலும் இருந்தது போல தெரிந்த இறுக்கம் தளர்ந்து பின் ஓடியே போனதுபோல் தோன்றியது. தாயின் மடியில் கிடைக்கும் சுகம்... அப்பப்பா... அதற்கு ஈடானது எதுவும் இந்த உலகில் இல்லைதான். அதனால்தான் தாயின் மடியில் படுத்தவுடன் சின்னக் குழந்தைகள் தூங்கி விடுகிறார்கள் போலும்.

தாயின் கரம் கூந்தலை இதமாய் கோதிவிட.... தூக்கம் அவளை தழுவி அனைத்தையும் மறந்து விட்டாள் அவள்.

அடுத்த முறை பிரசாந்தை சந்தித்த போது திருமண விஷயத்தை அவளாகவே எடுத்த போது அவனுக்கே அது ஆச்சர்யம் தான்.

''அட வினுவா பேசுவது...! இப்போ எதற்கு அவசரம்... காலம் நீண்டு இருக்கிறதே... அப்பா அம்மாவுடன் ஜாலியாக இருந்துவிட்டு அப்புறம் கல்யாணம் பண்ணிக்கலாம்னு இருக்கேன்னு சொன்ன வினுவா உடனே திருமணம்னு குதிக்கிறது...'' என்றான்.

அவனிடத்தில் உண்மைக் காரணத்தை சொல்லவும் பிடிக்காமல் அதை மறைத்தாள்...

கேட்டுவிட்டு யார் அவன், பார்த்துவிடுகிறேன் என்று குதித்து விடுவானே. விஷயம் வெளியே கசிந்தால் அசிங்கம்தான்.

"எலிபோனால் போனது புலிதான்" என்று பேசும் உலகம் தன் மீதே கட்டிவிடுமே கதையை.. அதை அம்மா தாங்குவாளா?

அப்படி ஏதும் செய்து விடுவானா என்று அவனது பேச்சை ஒதுக்கி விடவும் முடியாது. அவனது பார்வையின் தீர்க்கம் இவன் எதுக்கும் தயார் தான் என்று காட்டியது.

அடிக்கடி அவளைச் சுற்றி "நீயே மனைவி" என்று புலம்பிக் கொண்டிருப்பது சரியல்ல. பார்ப்பவர்களின் கண்ணில் எதிர்மறையாய் படலாம். சேலை முள்ளின் மீது விழுந்தாலும், முள் சேலை மீது விழுந்தாலும் பாதிப்பு சேலைக்குத்தான். அதற்குள் திருமணம் முடிந்துவிட வேண்டும் என்று தீர்மானித்தாள். அதனால் தாயின் மேல் காரணத்தைப் போட்டாள். "அம்மாவுக்காக பிரசாந்த். என் திருமணத்தை சீக்கிரம் முடிக்கணும்னு அம்மாவோட ஆசை அதற்காகத்தான்..."

சீக்கிரம் திருமண அழைப்பிதழை அச்சடித்து அந்த அகம்பாவி முகத்தில் வீசியெறியணும். அவன் முகம் கோணுவதை பார்த்து ரசிக்க வேண்டும்... மனம் துடித்தது.

பெரிய மன்மதன் என்ற நினைப்பு. சொடுக்கினால் ஓடிவந்து விடுவாள்னு எண்ணம். ச்சே...



அதே நேரம் ஒரு உண்மையும் சுட்டது உண்மையில் அவன் அழகன் தான். மன்மதன் போன்றவன் தான். அதில் எந்தவித மறுப்பும் இடையாதுதான்.

ஏன்... தான் மணக்கப்போகும் பிரசாந்தை விட உயரம்... ஆண்மை... கம்பீரம் அனைத்திலும் கூடுதல் தான்.... அதனால் மட்டுமே ஒரு பெண் விழுந்துவிடுவாளா என்ன?

பெண்ணை பெண்ணாக நினைத்து... மதித்து... போற்றத் தெரியவில்லை... யாருடா உன் மனைவி என்றால்... அட நீதான் என்பது போல பார்த்தவுடன் திருமணமா? நீதான் மனைவியாம்... ரெடிமேட் உடுப்பு போல... பற்களைக் கடித்தாள்.

"நான் என்ன தப்பு செய்தேன்னு பற்களைக் கடிக்கிறாய் விනு..." பிரசாந்தின் கேலிக்குரலில் விழித்துப் பார்த்தாள். சிரித்துவிட்டு "கோபமா? எனக்கா... இல்லையே..." என்றாள்.

"பிழைத்தேன்."

"ரொம்ப பயம் தான் என்னிடம். நான் சொன்னது நினைவில் இருக்கிறதுதானே... தேர்வு முடிந்ததும் நம் திருமணம்... என்ன?"

"சரி.... அந்த நினைவில் தேர்வில் கோட்டைவிட்டு விடாதே... ராங்க் லிஸ்டில் உன் பெயர் இருக்கணும்னு என் ஆசை."

அவளுக்கும் தான். படிக்க முடியாமல் செய்வது ஜெயசந்திரனின் வார்த்தைகள்.

தேர்வும் வர அவளும் எல்லா நினைவுகளையும் ஒழித்துப் போட்டுவிட்டு படித்தாள். படிப்பில் மூழ்கி மற்ற எல்லாவற்றையும் மறந்து போனாள்.

## 4

மரங்களில் இலைகள் உதிர்ந்து மீண்டும் துளிர்க்க ஆரம்பித்து விட்ட பருவகாலம்.... இளம் பச்சைத்தளிர்கள் மரங்கள் அணிந்து கொண்ட ஜிமிக்கி களைப் போல அழகாய் அசைந்தன. மாமரங்களில் கோகிலங்கள் கூவ ஆரம்பித்தன.

தேர்வு முடிந்துவிட்டது... நன்றாக எழுதியிருந்தாள் வினயா.

அதற்குள் அவளது திருமணப் பேச்சு எழுந்து, இருதரப்பினரும் கலந்து பேசி நாளும் குறித்தனர். திரு மண அழைப்பிதழைக் கண்ணால் பார்த்ததும் தான் அவளுக்கு நிம்மதி வந்தது.

இனி அவனைப் பற்றிய கெட்ட கனவுகள் வராது. முதல் அழைப்பிதழை விநாயகர் கோயிலில் பிள்ளை யாரின் பாதத்தில் வைத்து வணங்கி, ''எல்லாம் நல்லபடி யாய் நடக்க அருள்புரிய வேண்டும்... எனக்கு ஏற்றவரை மணம் புரிய இடைஞ்சல் வராமல் துணையிருக்க வேண்டும் பிள்ளையாரப்பா'' என்று வேண்டினாள்.

தற்செயலோ அல்லது உண்மையாகவே பிள்ளையார் தந்த வரம் தானோ... வலதுபுறத்தில் இருந்து பூ விழுந் தது. அனைவருக்கும் அது நல்ல சகுனமாய் பட்டது.

வினயாவிற்கு ஒரே மகிழ்ச்சி... பிள்ளையார் இருக்க இனி பயம் ஏது... ஜெயசந்திரனை ஓட ஓட விரட்ட மாட்டாரா?

அன்றைக்கு சந்தித்ததுதான். அப்புறம் அவனைப் பார்க்கவே இல்லை. விடுமுறை என்பதால் பார்க்கவும் சந்தர்ப்பம் இல்லைதான்.



சிலசமயம் அவன் வேண்டும் என்றே அழைத்து பயமுறுத்தினானோ... அவன் பூச்சாண்டிகாட்டியதை தான் தான் பூதமாய் எண்ணி தவித்துப்போனோமோ என்று கூடத் தோன்றியது.

அடுத்த கணமே இல்லை... அது விளையாட்டு இல்லை... உறுதியாகச் சொன்னது என்றும் நினைத்துக் கொண்டாள்.

அவனிடம் சவால் விட்டு வந்தது போல முதல் அழைப் பிதழ் அவனுக்கு தர வேண்டும்... தபால் வழியில் அனுப்பி விடலாமா என்று நினைத்தாள்.

அவனது பெயரை எழுதிய போதுதான் விலாசம் தன்னிடம் இல்லை என்று தெரிந்தது. அதை அறிய கல்லூரி நிர்வாகியை அணுகினாள்.

ஜெயசந்திரன் வேலை விஷயமாய் தன்னை சந்திக்கச் சொல்லியிருப்பதாய் அவள் கூறியவுடன் புருவம் மேலே நிமிராமல் அவனது விலாசம் கிடைத்தது.

அலுவலக விலாசம்... எழுதிய பின்பு மானசீகமாய் இஞ்சி தின்ற குரங்காய் அவன் முகம் மாறப்போவதை நினைத்துப் பார்த்தாள்... அவளது முகத்தில் சிரிப்பு வந்தது.

என்னமாய் கொக்கரித்தான்... இதோ தபாலில் இது போய் அவன் கைக்கு சேரப்போகிறது... இனி என்ன செய்வானாம்...

மனதில்ஆசை துளிர்விட்டது. இதை நேரில் போய் கொடுத்து அவன் முகத்தில் தெரியும் ஏமாற்றத்தையும் அசட்டுத்தனத்தையும் கண்ணார பார்த்தால் என்ன...

துளிர்விட்ட எண்ணம் நின்று உறுதிகொண்டது. தானும் பதிலுக்கு செய்ய வேண்டும். இது அவனுக்கு ஒரு

பாடமாக இருக்கட்டும். இனி எந்தப் பெண்ணிடமும் வாய் கிழித்து பேசக்கூடாது.

அவனுடைய அலுவலகம் நகரத்தின் மத்தியப் பகுதியில் இருந்தது.... பெரிய கம்பெனிகளுக்கு லட்சக் கணக்கில் பண உதவி செய்து பெருமளவில் லாபம் காணும் நிறுவனம். பணப் பெருச்சாளிகளில் அநேகம் பேர்கள் அந்த வாடிக்கையாளர்கள்.

அந்தப் பெரிய கம்பெனியைப் பார்த்து அரண்டாள். இவ்வளவா அவன்!?

கேட்டில் கூர்க்கா... வாசல் காக்கும் வாட்ச்மென்... உள்ளே வரவேற்பு பெண்... தாண்டினால் மானேஜர். அறைவாசலில் நயமிருக்கும் ப்யூன்... தவிர பி.ஏ. வேறு அதற்கு பின்பு அவன் சந்திப்பு.

கோவிலில் பிள்ளையார்... நந்தி... துவாரபாலகர்... என்று வழிபட்டு கடைசியாய் மூலவரை தரிசிப்பது போலதான்.

பேசாமல் திரும்பி விடலாமா என்று நினைத்தாள். அந்த நேரம் சியலோ கார் வழுக்கி வந்து நின்றது. காரிலிருந்து இறங்கியவன் ஜெயசந்திரன் தான். இவளைப் பார்த்தானா... தெரியவில்லை.

இறங்கி நடந்தவன் ஓடிவந்து நின்ற பியூனிடம் ஏதோ சொல்லிவிட்டுச் சென்றான்.

அவளது முகம் இறுகியிருந்தது... அவனை நேரில் பார்த்து அழைப்பிதழைத் தந்து கூடவே ஒரு ஏளனப் புன்னகையை விசியெறிந்து வரவேண்டும் என்ற எண்ணம் மறைந்து போனது.



திரும்பும்போது ''அம்மணி... அய்யா உங்களை கூப்பிட்டார்'' ப்யூனின் அழைப்பு கேட்டது.

ஓ... பார்த்தும் பாராமல் சென்றிருக்கிறான்... ப்யூனைத் தொடர்ந்தாள்.

வேலை செய்து கொண்டிருக்கும் ஊழியர்கள் பார்க்கும் வினோதப் பார்வை அவளை நெளியச் செய்தது.

நேரே முதலாளி அறைக்குச் செல்லும் தன்னைப்பற்றி என்ன நினைப்பார்கள்! கூசினாள். பேசாமல் இருந்திருக்கலாம்... ச்சே... சவாலாம்.. மண்ணாங்கட்டி.

அவனது அறையின் கதவில் அவனது பெயர் பலகை... போகலாமா உள்ளே... தயங்கி நின்றாள்.

''உள்ளே செல்லலாம்'' அவனுடைய அந்தரங்க காரியதரிசி சாடை காட்ட, கதவைத் தட்டினாள்.

''கம் இன்'' என்றது ஜெயசந்திரன் குரல். உள்ளே வந்த அவளைப் பார்த்து ''ஹலோ வினயா... என்னைப் பார்க்கவா இந்த திடீர் வருகை... சந்தோஷம் தான்'' என்று வரவேற்றான்...

அவனது குரலில் தெரிந்த சிநேகபாவம் அவளை நிமிரச் செய்தது.

''நான் வந்த காரணம்...''

''தெரியுமே.. வேலை தேடி வந்திருக்கிறாய்... இல்லையா? எந்த வேலைக்கு... கடைசியாய் சொன்ன பணியென்றால் எனக்கு இரட்டிப்பு மகிழ்ச்சி...'' குறும்புச் சிரிப்புடன் சொன்னான்.

''உங்களது கற்பனைக் குதிரைக்கு கடிவாளம் போட்டால் நல்லது. நான் வந்த விஷயம் வேறு'' என்றவள் தன் கைப்பையில் இருந்த தனது திருமண அழைப்பிதழை

வெளியே எடுத்தாள். வலிய அழைத்துக் கொண்ட செயற்கை புன்னகையுடன் ''கண்டிப்பாய் என் திருமணத்திற்கு வரவேண்டும்... சொன்னபடியே முதல் அழைப்பிதழ் உங்களுக்குத்தான்... பிடியுங்கள்'' என்றாள்.

சொல்லும்போது அவன் முகத்தை உற்றுப்பார்த்தாள்.. ஏதாவது ஏமாற்றம்... சலனம்... அதிர்ச்சி... ஊகூம்.. உணர்ச்சிகளை துடைத்து போட்டது போல இருந்தது அவன் முகம்... எதையோ எண்ணி வந்த அவளுக்குத்தான் இப்போது ஏமாற்றம்.

இவன் அசைக்க முடியாத கல்லூளி மங்கன் என்று நினைத்தாள்.

அழைப்பிதழைப் பிரித்துப் பார்த்தான் ''ஓ... இன்னும் பதினேழு நாட்கள் இருக்கிறதே...'' அவளைப் பார்த்து இப்போது புன்னகைத்தான்.

'திக்'கென்றது அவளுக்கு. எதுக்கு இந்த நாட்கணக்கு?

''ஏன்... எதற்கு பதினேழு நாட்கள்?'' கேட்டுவிட்டாள்.

''அன்பளிப்பு வாங்கத்தான்... நல்ல அன்பளிப்பாய் பார்த்து, பொறுக்கி எடுத்து வாங்கணுமே...'' மழுப்புகிறானோ...

எரிச்சலை அடக்கிக் கொண்டு பேசினாள் ''உங்களுக்கு எதற்கு சிரமம்... இங்கிருந்தே வாழ்த்தி விடுங்கள் போதும். இத்தனை வேலைகளுக்கு மத்தியில் பாவம் உங்களுக்கு நேரமும் இருக்காது இல்லையா.''

''அடடா... உனக்கு இல்லாத அன்பளிப்பா... அதுவும் நான் வாங்கித்தராமல் யார் உனக்கு தருவார்களாம். யாருக்கு அந்த உரிமை இருக்கிறது...'' ஏதோ உள்ளர்த்தமாய் இருந்தது அவன் பதில்.



பேச்சு எங்கேயோ செல்வது போல தெரிய உள்ளுக்குள் நெளிந்தாள்.

''சரி... நான் வருகிறேன்'' என்று புறப்பட்டாள். அத்தோடு சென்றிருந்தாள் பரவாயில்லை. கொஞ்சம் வாய்க்கொழுப்பும் சேர ''பாவம்... உங்கள் கனவு பகல் கனவானது... எண்ணம் பலிக்காமல் போனது... போகட்டும்... தேற்றிக் கொள்ளுங்கள் மனசை... வரட்டுமா மிஸ்டர் ஜெயசந்திரன்'' என்று திரும்பினாள்.

தூங்கும் சிங்கத்தை உசுப்பி விட்டது போலனாது. திரும்பிய அவளை தனது வலியகரத்தால் ஒரு இழு இழுத்தான். இதை எதிர்பார்க்காத அவள் ஒரு சுற்று சுற்றி அவன் மேல் சாய்ந்தாள். அவள் முகத்தில் திகைப்பு! அவனை விழித்துப் பார்த்தாள்.

அழுத்தமாய் சொன்னான் அவன் ''இப்போதும் சொல்கிறேன். நன்றாய் கேட்டுக் கொள். நீதான் - நீயேதான் எனக்கு மனைவி. யாராலும் அதை மாற்ற முடியாது.''

சமாளித்து அவனிடம் இருந்து விலகி நின்றவள் உதட்டை சுழித்தாள்.

ஒரு வேளை தலையில் நட் கழண்டு போயிருக்கிறதோ என்னவோ - பாவம். சில பைத்தியங்கள் அர்த்தமில்லாமல் தானே கற்பனை செய்துகொண்டு சொன்னதையே சொல்லுமாம். அது போல தான் இந்தக் கேசும்.

அழைப்பிதழை கண்ணால் பார்த்த பின்பும் பேத்துறான் என்றால் நிச்சயமாய்... சர்வ நிச்சயமாய்.. மேல் மாடியில் ஏதோ குறைதான்.

இதத்துப் போய் பயந்து— இதை பெரிதுபடுத்தி— இந்த பைத்தியத்திற்கு இனி நீ நினைப்பது போல நடக்காது என்று கொடுக்க வந்த நான் தான் பலி ஆட்டான்...

சில நிமிடங்கள் அவனை வெறித்து விட்டு "முதல் வேலையாய் தலையில் நாலைந்து எலுமிச்சம் பழங்களை அறுத்து தேயுங்கள். ஏறியிருக்கும் பித்தம் குறையும் இல்லை... குற்றால அருவியில் ஒரு தடவை குளித்து விட்டு வந்துவிட்டாலும் போதும்... பைத்தியம் தெளியும்... அதுவும் முடியவில்லை என்றால் தியானம் செய்து பாருங்கள். பிதற்றல் எல்லாம் குறைந்துவிடும். உடம்பைப் பார்த்துக் கொள்ளுங்கள் மிஸ்டர்... சொல்ல மறந்து விட்டேனே... குணசீலத்தில் கூட இந்த மாதிரி பைத்தியத்தை தெளிய வைக்கிறார்களாம்... போய் பாருங்கள்... ம்ம்... எத்தனை பணம் இருந்து என்ன பயன்... பாவம்... தலை சரியில்லை... வரட்டுமா ஜெயசந்திரன்" என்று வெகுளிபோல வார்த்தைகளைக் கொட்டிவிட்டு நடந்தாள்... அவனது கண்கள் சிவப்பதைக் கண்டும் காணதவளாய் சென்றாள். கேட்டைத் தாண்டி வெளி வந்ததும் அடக்கி வைத்த சிரிப்பு அணையை மீறி அலையலையாக பொங்கி எழ... வெளியே நின்ற கூர்க்கா அவளை வியப்புடன் பார்க்க பலமாய் சிரித்தாள்... அவனை வென்று விட்டோம்... என்று மனம் எக்காள மிட்டு குதித்தது....

எதிர்காலம் அவளை பரிதாபத்துடன் பார்க்க ஆரம்பித்தது.

## 5

**வி**னயா தன் நெற்றியின் மத்தியில் புருவமுடிச்சுடன் பெரும் யோசனையில்



இருந்தாள். இரண்டு நாட்களாய் பிரசாந்திடம் இருந்து "போன்" இல்லை. திருமணம் நிச்சயமானதும் ஒரு நாளைக்கு இரண்டு மூன்று "கால்" போட்டுப் பேசுவான்.

ஏன்?

எங்கேயாவது தன் நண்பர்களின் ஊருக்குச் சென்றிருக்கிறானா?

திருமணம் நெருங்கிவிட்டது. இன்னும் எட்டு நாட்கள் தான்... ஒருவேளை உடை வாங்கித் தைப்பதில்... உறவினர்களை நேரில் சென்று அழைப்பதில், வீடு ஒழுங்கு படுத்துவதில் மும்முரமாய் இருப்பதாலோ என்னவோ...

இருக்கட்டும்... திருமணம் ஆனபின்பு இனி காலம் முழுவதும் சேர்ந்துதான் இருக்கப்போவது. இன்னும் ஒரு வாரம் தான்...

மனதை சமாதானப்படுத்திக் கொண்டாள். கல்யாணப் புடவைகளுக்கு ஏற்ற பட்டு ரவிக்கைகளை தைத்து வாங்கியாகிவிட்டது... கண்ணாடி வளையல்கள், ஏற்ற அலங்காரப் பொட்டு வகைகள் எல்லாமே தயார். அழகான மூன்று ஜதை காலணிகள்... புது ரக கைப் பைகள்... புது உள்ளாடைகள்...அனைத்தும் வாங்கி புது சூட்கேசில் அடுக்கிவைத்தாகி விட்டது.

புத்தம் புது வெள்ளிக் கொலுசும் காலில் சிணுங்கியது.... புதுப் பெண்ணாய் அலங்கரித்துக் கொண்டு திரியவும் ஆரம்பித்தாகிவிட்டது.

"என் கண்ணே பட்டுவிடும் போலிருக்கு வினயா... என்னதான் நாகரீக உடைகளை அணிந்தாலும் புடவையும் நகைகளும் என்னமாய் எடுத்துக் காட்டுறெது பார்" என்று மகளை திருஷ்டி கழித்தாள் ஜெயம்.

ஐந்து நாட்கள் இருந்த போதே மிக நெருங்கிய உறவினர்கள் வரத் தொடங்கி விட்டார்கள். அம்மா வோட உடன் பிறந்த அக்கா தங்கைகள் உதவிக்கு என்று வந்து விட்டார்கள். வடகம்... அப்பளம்... ஊறுகாய்... சாம்பார் பொடி... என்று வீடு அமர்க்களப்பட்டது.

பெரியம்மாவும் சித்திகளும் வினயாவை கிண்டலும் கேலியும் பண்ணிக்கொண்டு தங்கள் வேலைகளை செய்தனர்.

"நீ சமயலறைப்பக்கமே வரக்கூடாது வினும்மா... எண்ணைப்பட்டு காயத்தோட மணையில் உட்கார வேண்டி வரும்... இருக்கவே இருக்கு மாமியார் வீட்டில் இடுப்பொடியும் வேலைகள்... ஓடு... ஓடு."

மாமியார் வீடு... சொந்த மாமா வீடுதான்... அதனால் மாப்பிள்ளை வீட்டார் என்ற பயமும் இல்லை.

வீடு கல்யாண களைக் கட்டி ஜே ஜே என்று இருந்த போது... திருமணத்திற்கு ஐந்து நாட்கள் இருந்த போது தான் தலைமேல் இடி விழுந்தது போல் ஆனது. பிரசாந்த் வந்தான். டெல்லியில் பெரிய வேலை கிடைத்திருக் கிறதாம். உடனே போய் சேர வேண்டுமாம். சொந்த வீடு.. கார் எல்லா வசதிகளுக்கும் குறைவு இல்லை... இந்த நல்ல சந்தர்ப்பத்தை இழக்க தனக்கு மனம் இல்லை... அவன் போய் சேராவிட்டால் அந்த வேலையில் நுழைய, வரிசையாய் தவமிருக்கும் பலர் இருக்கிறார்களாம். ஆகையால் தற்போது திருமணம் சாத்தியப்படாது.

இந்தச் செய்தியினால் அடிபட்டுப் போனார்கள் பெண் வீட்டினர். அத்தனை செலவும் வீண்... பணத்தை நீராய் செலவழித்து அல்லவா இந்தத் திருமணத்தை விமர்சை யாய் நடத்த விரும்பினார்கள்...



பின்னே... எப்போது திருமணம்?

இந்தக் கேள்வியும் எழுந்தது... அங்கு போனதும் பதில் போடுகிறேன் என்று பதில் சொன்னான் பிரசாந்த்.

வாடிப்போனார்கள் வினயாவின் பெற்றோர்கள்.

துவண்டு போனாள் வினயா.

வெண்ணைய் திரளும் போது தாழி உடைந்தது என்பதன் பொருள் இதுதானா?

எதற்கு இந்த மாற்றம்? ஜெயசந்திரன் முன்பு வீராப் பாய் பேசி வந்த நினைவு வந்தது. எல்லாம் வெற்றுப் பேச்சு என ஆகிவிட்டதே.

பிரசாந்தின் பெற்றவர்கள் எதைப் பற்றியும் கவலைப் படாமல் பிரசாந்தின் எதிர்காலம் தான் தங்களுக்கு முக்கியம் என்பது போலப் பேசினார்கள். இந்தப் புதிய கம்பெனியிலிருந்து வெளிநாடு போகக் கூடிய சந்தர்ப் பமும் வர இருப்பதால் அதை உத்தேசித்து தாம் ஒப்புக் கொண்டதாய் சொன்னார்கள்.

பிரசாந்த் எங்கே போய் விடுவான்? திருமணத்தை தள்ளிப்போடுவதில் என்ன ஆகிவிடப் போகிறது... இது அவர்களின் வாதம்.

வேறு வழியின்றி அனைத்து உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் திருமணம் தற்காலிகமாய் நின்று விட்டதாய் போன் மூலமாயும், தந்தி மூலமாயும் செய்தி கூறினர்.

நல்ல வேளை... திருமணத்தன்று இப்படி ஆகாமல் நான்கு நாட்களுக்கு முன்னால் தெரிந்ததே. இல்லை யென்றால் திருமணத்திற்கு வந்தவர்கள் முன்னிலையில் மானம் கப்பலேறி போயிருக்கும்.

வந்திருந்த பெரியம்மா, சித்தி உறவுகள் மனக்குறையுடன் திரும்பினார்கள்.

''வினயாக்குட்டி... உனக்கு நல்ல அதிர்ஷ்டம்னு நினைத்தது திருஷ்டியாகி விட்டதேம்மா.. இப்படியா ஆகணும்'' கண்ணீர் விட்டு விட்டுச் சென்றனர்.

ஏதோ இழவு வீட்டுக்கு வந்து போகிறவர்களைப் போலத் தோன்றியது அவர்களது பேச்சும் முகவாட்டமும்.

ஊருக்குச் சென்ற பிரசாந்திடம் இருந்து தகவல் வருமா என்று தவமிருக்க ஆரம்பித்தாள்... தகவலும் வந்தது... அது இடியாய் அவள் தலைமீது விழுந்தது.

## 6

இன்பமும் துன்பமும் இப்போதெல்லாம் மாறி மாறி வருவதில்லை... அடுத்தடுத்து தான் வருகின்றது. அதுவும் துன்பம் என்றால் அது சங்கிலித் தொடராய் தான்...

திருமணம் நின்றுபோன அதிர்ச்சியிலிருந்து சமாளித்து எழுந்திருக்கும் முன்பு அசுர அடியாய் இன்னொன்று விழுந்தது அந்த அடியில் விழுந்தே விட்டனர்...

பிரசாந்த் ஊருக்கு போனவுடன் உடனே அவன் கடிதம் போடவில்லை. ஒரு வேளை வேலையில் 'செட்டில்' ஆவதில் இந்த தாமதமோ என்னவோ என்று மனதை தேற்றிக் கொண்டனர். ஒரு நாளில் பிரசாந்திடமிருந்து கடிதம் வந்தது.

அவனுடைய பாஸ் தன் பெண்ணை மணந்தால் வெளி நாடு அனுப்புவதாய் சொன்னாராம். வேறு வழியின்றி



சம்மதித்து விட்டானாம். இதில் தன் பெற்றோர்களுக்கும் சம்மதம் உண்டு என்று எழுதியிருந்தான்.

அறிந்தவுடன் ஜெயத்திற்கு நெஞ்சுவலி வந்து விட்டது. படுக்கையில் தாய் ஒடுங்கிப்போய் படுத்ததை காண மனம் பொறுக்காமல் ஓடினாள் மாமாவின் வீட்டிற்கு.

''இது உங்களுக்கே நன்றாக இருக்கிறதா?'' என்று ஆத்திரத்துடன் கேட்டாள்.

அத்தை பதில் சொன்னாள்... இல்லை... வார்த்தைகளால் முகத்தில் அறைந்தாள். ''இதோ பார் வினயா... நீ எனக்கு மருமகளாய் வரவேண்டும் என்று ஆசைப்பட்டது என்னவோ உண்மைதான். ஆனால் மத்திய வர்க்கத்தில் இருக்கும் உன் அப்பாவால் என்ன செய்ய முடியும்? மிஞ்சி மிஞ்சிப் போனால் பதினைந்து இருபது பவுன் நகை... கொஞ்சம் ரொக்கம்... சுமாராய் கல்யாணம்... அவ்வளவுதானே. இவர்கள் என்ன கொடுக்க தயாராக இருக்கிறார்கள் தெரியுமா? பெரிய ப்ளாட்... இரண்டு லட்சம் ரொக்கப் பணம். வெளி நாட்டுக்குச் செல்லும் வாய்ப்பு. இப்போ சொல். உன்னைக் கட்டிக் கொண்டு அவன் வாய்க்கும் கைக்குமாய் அவதிப்பட வேண்டுமா. நான் தாய்... என் பிள்ளை நன்றாக இருக்கணும்னு தான் ஆசைப்படுவேன். இதில் என்ன தப்பு... பழம் வேணுமா.. காய்வேணுமா என்று கேட்டால் பழத்தை தானே கேட்போம்.''

''ச்சே'' என்று வெறுத்துப் போய் திரும்பினாள்.

வீட்டில் அவளை, அன்புடன் வருடிக் கொடுத்து தந்தை சொன்னார் ''மனம் ஒடிந்து போயிடாதேம்மா..

இந்த அப்பா எதுக்கு இருக்கிறேன். வேறு நல்ல மாப்பிள்ளையாய் பார்த்து உன்னைக் கட்டிக் கொடுக்க மாட்டேன்... தைரியமாய் இருடா செல்லம்'' என்று சொன்னபோது அடக்கி வைத்த துக்கம் அழுகையாய் பொங்கியெழுந்தது. அவரது மடியில் விழுந்து குமுறி அழுதாள்.

''இந்த உலகத்தில் அவன் ஒருத்தன் தானாம்மா... எத்தனையோ பேர் இருக்கிறார்கள்.... நல்லவனாய் ஒருவன்...'' தந்தையை இடை மறித்தாள் வினயா.

''வேண்டாம்ப்பா... எனக்குத் திருமணமே வேண்டாம். மனம் விட்டுப் போய் விட்டது.''

''சரிம்மா... இப்போதைக்கு இந்தப் பேச்சே வேண்டாம் விட்டுடலாம்'' எழுந்து போனார் அவர்.

ஆனால் ஜெயம் விடவில்லை. ''எனக்கு என்னவோ பயமாக இருக்குங்க... அவள் திருமணத்தை கண்ணாரப் பார்த்துட்டுப் போய் சேரணும். நான் போவதற்கு முன் என் கடமையை முடிச்சுடணும்'' என்று புலம்ப ஆரம்பித்தாள்.

தந்தை மகளை அருகில் உட்காரவைத்து தாயின் விருப்பத்திற்காகவாவது திருமணத்திற்கு ஒப்புக் கொள்ள வேண்டும் என்று வற்புறுத்த வேறு வழியின்றி சம்மதித்து வைத்தாள்.

இரண்டு வரன்கள் வந்தன. பெண்பார்த்து போனவர் கள் நிச்சயித்த திருமணம் நின்ற காரணம் கேட்டு எழுதியிருந்தனர். மூன்றாவது வரன் திருமணம் நின்ற காரணம் தங்களுக்கு தெரியும் என்றும், இந்தப் பெண் முறைமாப்பிள்ளையுடன் பல இடங்களில் திரிந்தவள்



என்றும் அறிந்திருப்பதாயும் இருந்தும் பெரிய மனது வைத்து தங்கள் மருமகளாய் ஏற்றுக் கொள்ள முடிவு செய்துள்ளதாயும் ஆனால் ரொக்கமாய் ஒரு லட்சம் வரதட்சணையாகவும், முப்பது பவுன் நகை... பிள்ளைக்கு ரோலக்ஸ் வாட்ச்... ஹீரோ ஹோண்டா என்று அடுக்கி சென்றது கண்டு கும்பிட்டு அனுப்பிவைத்து விட்டார்கள் பெற்றவர்கள்.

ஒவ்வொரு வரனாய் தட்டிக் கழித்து சென்றது கண்டு மயங்கி விழுந்தாள் ஜெயம்.

முடிந்தது கதை என்று நினைத்தபோது டாக்டர்கள் கூடிப்பேசி ''பை பாஸ் சர்ஜரி பண்ண வேண்டும். அதன் பிறகு எந்தவித பயமும் இல்லை'' என்று உத்தரவாதம் கொடுத்தது நிம்மதியை தந்தது.

மறுபடியும் ஜெயம் பயந்து போனாள். ''இந்த பெரிய ஆபரேஷனில் நான் பிழைப்பேனோ இல்லையோ... அதற்குள் மகளுக்கு ஒருவழி செய்து விடணும்...'' என்று நச்சரிக்க ஆரம்பித்தாள்.

மீண்டும் வரன் வேட்டை....

தந்தையிடம் தயங்கி வந்து நின்றாள் மகள்.

''அப்பா - பெண் பார்க்கும் படலம் எதுவும் வேண்டாம். எனக்கு பொம்மை மாதிரி நின்னு அலுத்து விட்டது. மேலிருந்து கீழாய் குத்தியெடுக்கும் பார்வையை சந்திக்க அவமானமாய் இருக்கிறது. உங்களுக்கு பிடித் தால் நீங்களே பேசி முடித்து விடுங்கள்'' என்றாள்.

எத்தனையோ வரன்களை சலித்து எடுத்து பார்த்து திருப்தியடையாத நேரத்தில் நல்லதொரு வரன் சேர்ந்தது. இறைவனின் திருவருள் என்று நினைத்தார் நீலசேகரன்.

கடைசியாய் நல்ல மாப்பிள்ளையை தங்களுக்கு காட்டியிருக்கிறார் என்று நினைத்தார். அந்த வரனும் விஜயாவின் போட்டாவை பார்த்த அளவில் பிடித்து விட்டது என்றதால் திருமண ஏற்பாடு மளமள வென்று நடந்தது.

எளிமையான திருமணம் போதும் என்று சொல்லி விட்டதால் ஊரையெல்லாம் கூட்டாமல் நெருங்கியவர் களை மட்டும் அழைத்தார்கள்.

எதிலும் ஈடுபாடு இல்லாமல் இருந்தாள்... பிரசாந் துடன் திருமணம் என்ற போது குதித்து, பறந்து, ஓடியாடி ஆர்வத்துடன் இருந்தவள் இப்போது சிறகொடிந்த கிள்ளை போல விழுந்துகிடந்தாள்.

யாருடைய சாபம்... யாருடைய வயிற்றெரிச்சல்? ஜெயசந்திரனிடம் கொடுத்துவிட்டுப் பேசியது என்ன... அவனைக் கேலி செய்தது என்ன... மறுபடியும் இன்னொரு திருமண அழைப்பு...

திருமணம் நின்ற செய்தி அவனுக்கு தெரிந்திருக்குமா? தெரிந்திருக்காது. தெரிந்திருந்தால் பார்த்தாயா உன் மாமாப் பிள்ளை லட்சணம் என்று வந்து ஏளனம் செய் திருப்பான்... அவனைப் பொறுத்தவரை திருமணம் நடந்து முடிந்ததாகவே இருப்பது நல்லது தான்...

பெருமூச்சு விட்டாள்... இப்போது அவன் நினைவு எதற்கு... ஆனால் தனக்கு தாலிகட்டப் போகும் அந்த வருங்கால மாப்பிள்ளையை நினைக்கவும் கசந்தது.

யாரோ... என்ன பேரோ... அறியேன்... கறுப்போ சிவப்போ... நெட்டையோ குட்டையோ... குண்டோ... ஒடி சலோ... அம்மாவுக்காக, அப்பாவுக்காக ஒத்துக் கொண் டாகிவிட்டது.



இருவருக்கும் பிடித்துப் போன வரன்... நல்ல பையன்... நல்ல இடம்... இது நழுவவிட்டால் மீண்டும் அமைவது கஷ்டம்... அம்மா புலம்ப சரியென்றாகிவிட்டது.

மறுபடியும் திருமணம்... பந்தல்... நாதசுவரம்... சுற்றத்தினர்...நாள் நெருங்க நெருங்க நினைவு பழயதை நினைத்து மறுகியது. மேனி நடுங்க... உள்ளம் படபடத்தது.

பிரசாந்த் கழற்றிக் கொள்ளாமல் இருந்திருந்தால் தானும் அவனும் கணவனும் மனைவியாய்... ம்கூம்... இனி அதை நினைத்துப் பார்க்கக் கூடாது. அப்படி நினைப்பதும் அசிங்கம்.

முகம் தெரியாத அந்த அந்நியன் தான் தன் கணவன் என்று தன் தலையில் எழுதி வைத்தபின்பு முடிந்த கதையை நினைவில் படிப்பதும் குழிப்பிள்ளையை நினைத்து புலம்புவது போலத்தான்.

அந்த வெறுமையிலும் மீராவின் வருகை இதமாக இருந்தது.

"நீயும் என்னை மறந்து விட்டாயா மீரா... வரவே இல்லை?" மனத்தாங்கலுடன் கேட்டாள் அவள்.

"அம்மா சொன்னாள் விஜு... மனம் நொந்து இருக்கும் போது போய் தொந்திரவு தராதே என்று. ஏண்டி.. கையில் வெண்ணையை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைந்தது போல தெரிந்த மாப்பிள்ளை இருக்க எங்கேயோ அலைந்து தேடினது ஏனாம்... பாரேன், கடைசியில் உன் கழுத்தில் தாலி கட்டப் போறவர் நமக்கு தெரிந்தவர் தான் என்பதை என்னால் நம்ப முடியவில்லை" சொல்லி விட்டு 'கிளுக்' என்று சிரித்தாள்.

'வெடுக்' கென்று அவளை திரும்பிப் பார்த்துவிட்டு "தெரிந்தவர்? நமக்கா? யார் அது மீரா?" என்று குழப்பத்துடன் கேட்டான்.

"அய்யோ... ஒன்றும் தெரியாத பாப்பா மாதிரி கேட்கிறதப் பார்... என்னிடம் ஒருவார்த்தை சொன்னாயா... என்னிடமே மறைத்து விட்டாயே..." தோழியை வெறித்து விட்டு ஓடிப்போய் தனது திருமண அழைப்பிதழை விரித்து பார்த்தாள்.

'வினயாவை'....'ஜெயசந்திரனுக்கு'

தோழியை கேள்வியாய் பார்க்க... "அதே ஜெயசந்திரன்... என்னடி தெரியாத மாதிரி விழித்துக்..." அவள் முடிக்கும் முன் அப்படியே சரிந்து மயங்கி விழுந்தாள் வினயா...

## 7

தன் காலில் விழுந்து எழுந்த மகளையும் மாப்பிள்ளையையும் ஆனந்த கண்ணீருடன் வாழ்த்தினாள் ஜெயம்.

இனி தனக்கு என்ன ஆனாலும் பரவாயில்லை... கடமை முடிந்து விட்டது. மகன் பற்றிய கவலை இல்லை. ஆண் பிள்ளை. எப்படியோ பிழைத்துக் கொள்வான். பெண்ணைக் கரையேற்றி விட்டால் அதுவே பெரிய விஷயம் தான்... அதுவும் நல்ல மாப்பிள்ளையாய் பார்த்து ஒப்படைத்து விட்டதில் நிம்மதி.

ஜெயசந்திரனை நீல சேகரனுக்கும் ஜெயத்திற்கும் பிடித்து விட்டது... என்ன பண்பு... என்ன அடக்கம்... பணக்காரன் என்ற கர்வம் துளியாவது... இல்லவே இல்லை.

வினயாவிற்கு இனி மாப்பிள்ளை வரவே மாட்டானோ என்று தொய்ந்து போயிருந்த நிலையில் யார்



மூலமாகவோ "உங்கள் மகளை எனக்கு கொடுப்பீர்களா?" என்று பெண் கேட்டு வந்ததில் இருவருக்கும் ஏற்பட்ட ஆனந்தத்திற்கு அளவே இல்லை.

தெய்வமே இவன் உருவில் வந்து தங்களுடைய மானத்தை காப்பாற்றியதோ என்று நினைத்து அவனை மனசில் கையெடுத்துக் கும்பிட்டனர்.

தன் மகளை கன்னிகாதானம் செய்து தர தங்களிடம் இருக்கும் பணத்தையெல்லாம் கொட்டிக் கொடுக்க தயாராக இருந்தபோது "எளிமையாய் நடத்தித் தந்தால் போதும். என்னிடம் பணம் இருக்கிறது. நானே நகையும் பணமும் கொடுத்து வினயாவை மனைவியாய் ஏற்றுக் கொள்கிறேன்" என்று முன்வந்தான்.

இவன் மேல் விழுந்து வருகிறானே என்று முதலில் ஏற்பட்ட தயக்கம், தன் மனைவி பாட்டிலும், நடனத்திலும் தேர்ந்தவளாய் இருக்க வேண்டும் என்பது தன் லட்சியம்... அதற்கு ஏற்றவளாய் வினயா இருப்பது தன் அதிர்ஷ்டம்... அதனால் தான் தானே வலிய வந்து பெண் கேட்டது என்றபோது மனம் அமைதி அடைந்தது. அவளைப்பற்றி பெருமையாய் மகளிடம் சொல்ல வந்தபோது சூள் கொட்டி அதை காதில் போட்டுக் கொள்ளாமல் நகர்ந்து போனாள்... ஏதோ ஒரு குப்பனோ... சுப்பனோ இருந்து விட்டுப் போகட்டும்... தாயின் மனம் குளிர்ந்தால் அதுவே போதும் என்ற விரக்திதான். ஏதோ கல்யாணம்... யாருக்கோ மாலை என்பது போல ஒட்டாமல் விலகினாள்.

மீரா வழியாய் ஜெயசந்திரனே வரப்போகும் மாப்பிள்ளை என்று அறிந்ததும் மயங்கி விழுந்தாள். மயக்கம்

தெளிந்த பின்பு இந்த மாப்பிள்ளை வேண்டாம் என்று தந்தையிடம் சொல்ல ''என்னம்மா... மறுபடியும் திருமணத்தை நிறுத்துவதா... உன் அம்மா உயிருடன் இருக்க வேண்டுமா... வேண்டாமா'' என்று பரிதாபக் குரலில் சொன்னார் நீலசேகரன்.

''அய்யோ... எனக்கு இந்தக் கல்யாணம் பிடிக்கவில்லையேப்பா...'' என்று கெஞ்சலாய் கேட்டுக் கொண்டாள்.

''சரிம்மா... என்ன காரணம்னு சொல்லு. நீ அவனைப் பார்த்ததும் இல்லையே... பின்னே ஏன் வேண்டாம் என்கிறாய். இதை விடச் சிறந்த மாப்பிள்ளை நம் வம்சத்திலும் கிடையாதேம்மா.''

வினயா தவித்தாள். எப்படிச் சொல்வது. இவன் மறுபடியும் மறுபடியும் நீ என் மனைவி என்று சொன்னதால் கோபத்தில் சவால்விட்டு வந்ததை யாரிடமும் சொல்லாமல் மனதிலேயே பூட்டி வைத்துக் கொண்ட விஷயத்தை இப்போது தந்தையிடம் சொல்லத் தயக்கம்.

''பாரம்மா... மறுபடியும் இந்தத் திருமணம் நின்று போனால் நீ ராசியில்லாத பெண் என்று உன்னை ஒதுக்கி வைப்பார்களம்மா. காலம் முழுக்க கன்னியாய் இருக்க வேண்டும்... அப்புறம் உங்க அம்மா உயிருடன் இருப்பாள்னு என்ன நிச்சயம்...?''

வேறு வழியே இல்லை... அவனுக்கு கழுத்தைக் காட்டியே தீர வேண்டும். இந்த நிலைக்கு தன்னைக் கொண்டு வந்த பிரசாந்தை மனதினுள் திட்டித் தீர்த்தாள்.

பிரசாந்த் நிறம் மாறும் பச்சோந்தி என்று தெரியாமல் ஜெயசந்திரனிடம் போய் முட்டிக் கொண்டது தன் பெரும் தவறுதான்.



திருமணத்தின் போது தலை நிமிரவும் இல்லை... அவன் முகத்தைப் பார்க்கத் துணிவும் இல்லைதான். கையில் மோதிரம் போட்டு, கழுத்தில் தாலியையும் அணிவித்தவன் அவளது காதில் ''இப்போது நீ என் மனைவி'' என்று கிசுகிசுப்பாய் சொன்ன போது பற்றிக் கொண்டு வந்தது... அவனை வெறித்துப் பார்த்தாள்.

அந்த நிமிடத்தில் அவளுக்குள் தீர்மானம் ஒன்று எழுந்தது.

கைநீட்டி தாலிக்கட்டி தன் எண்ணத்தை சாதித்துக் கொண்ட அவனை கைநீட்டும் தூரத்திலேயே வைத்து விட வேண்டும்... அதற்கான திட்டமும் மனதினுள் பிறந்தது.

அன்றைக்கே முதலிரவு.

நிமிர்ந்த நடையும் நேர்கொண்ட பார்வையுமாய் சோபன அறை நோக்கி நடந்த தன் பெண்ணை வியப்பாய் பார்த்தாள் தாய்...

அட... இது என்ன விசித்திரம்... திருமணத்தில் அசட்டையாய் இருந்தவள்... மாப்பிள்ளை யார் என்றும் கேளாதவள் கணவன் இருக்கும் அறைக்கு விரைவது கண்டு வாயை பிளந்தாள் ஜெயம். தாலி ஏறினால் எல்லாம் தலைகீழாகி விடுமோ... இல்லை இந்தக் காலப் பெண்களே இப்படியா...?

வினயா தனிமையில் தன்னிடம் சீறுவாள் என்று எதிர்பார்த்து காத்திருந்த ஜெயசந்திரன் அவள் முகம் மலர... உதட்டில் புன்னகைத்தவழ அவன் முன் நின்றது கண்டு திகைத்தான்... வினயாவிடம் இந்த மாற்றம்... எப்படி? அவனுக்கே புரியவில்லை.

## 8

'கம்'மென்று வீசும் மல்லிகை மணமும், சந்தன ஊதுபத்தியின் நறுமணமும் மனதை கிறங்கச் செய்தாலும், கட்டிலில் காத்திருந்த ஜெயச்சந்திரனின் வெற்றிப் புன்னகையில் அவை மூச்சு முட்டும்படி செய்தன...

முதல் இரவு! கணவனும் மனைவியும் தனிமையில் விடப்பட்டு ஒருவரையொருவர் அறிந்து கொண்டு வாழ்க்கையின் படியில் ஒன்றாய் கால்வைத்து ஆரம்பிக்கும் இரவு...

ஜெயசந்திரனை பழிவாங்க வேண்டும்... அதுவும் சிரித்துக் கொண்டே செய்யவேண்டும் என்று நினைத்தவளுக்கு 'முதல் இரவு' அதன் முதல் படியாய் அமையப் போகிறது என்று நினைத்தாள்...

ஜெயசந்திரனிடம் என்ன பேசணும். எப்படிப் பேசணும் என்று உருப்போட்டுக் கொண்டு போனவளுக்கு சுற்றிலும் நினைவில்லை.

இதோ அந்தச் சந்திப்பும் வந்துவிட்டது... அவனைக் கண்டு முகம் சுளிக்காமல்... கோபத்தில் சிவக்காமல்... சிரித்த முகமாய் நின்றாள்...

''பரவாயில்லையே... நினைத்ததை சாதித்து விட்டீர்களே. அது எப்படி... கொக்கு போல சமயத்தை நோக்கி காத்திருந்தீர்களா?'' கண்களை விரித்துக் கேட்டாள்.

''சமயமும், சந்தர்ப்பமும் என்னைத் தேடி வரும்... நான் காத்திருக்கத் தேவையில்லை'' வெற்றி மதர்ப்பில் சொன்னான்.

''அது சரி உங்கள் பக்கம் உறவினர்கள் யாரும் வரவில்லையே... வெறும் நண்பர்கள் மட்டுமே... ஏன்... யாருக்கும் வரவிருப்பம் இல்லையா? இல்லை.. யாருக்கும் அறிவிக்காமல் திருட்டுத்தனமாய் திருமணம் செய்து கொண்டீர்களா?'' இதுவும் புன்னகைமாறாமல். அதைக் கேட்டு சிரித்தான் அவன். ''இந்தத் திருமணம் என் தாயின் விருப்பத்துடன் தான் நடந்திருக்கிறது. அவர் இங்கு வரமுடியாத நிலை. நாமே போய் அவரோட ஆசியை பெற வேண்டும்'' அவன் கடிகாரத்தைப் பார்த்தான்.



மணி பதினொன்று....

''உங்கள் வீட்டினரைப் பற்றிச் சொல்லுங்களேன் ம்ம்... ஜெயச்சந்திரன்'' பேச்சிற்கு இழுத்தாள்.

''ஜெய் என்றோ, சந்திரன் என்றோ அழையேன்'' என்றவன் தன் குடும்பத்தைப் பற்றிய விவரத்தைச் சொன்னான்.

''தாய் மட்டும் தான்... தந்தை போய் இரண்டு வருடம் ஆகிறது. அதன் பிறகு தாய் வெளியே எங்கும் வருவதில்லை... கோயமுத்தூரில் பெரிய வீடு. அந்த வீடு பரம்பரை சொத்து. பெற்றோர்களின் வாசம் அங்குதான்.. கணவன் வாழ்ந்த வீட்டை விட்டு நகர தாய்க்கு விருப்பம் இல்லை. கோயமுத்தூர் பிஸினசை தம்பி பார்த்துக் கொள்கிறான். ஒரே ஒரு தங்கை. கால்கள் உணர்ச்சியற்று ஊனம் என ஆகி சக்கர நாற்காலியில் நிரந்தரமாய் உட்காரவைத்து விட்டது... அதற்கு காரணம் விபத்து.'' அதைச் சொல்லும் போது பாசத்தினால் அவன் கண்கள் கலங்கின. எங்கோ வெறித்தான்.

ஓ! தங்கை என்றால் உயிர் போலிருக்கிறது. அந்தத் தங்கையை சந்திக்க வேண்டும்... சந்திக்கத்தான் போகிறோம்... கணவனின் தங்கை தனக்கு நாத்தினியாயிற்றே.

''விபத்து எப்படி நடந்தது?'' ஆர்வத்தை காட்டிக் கேட்டாள்... பொழுது போக வேண்டுமே.

"நடனம் கற்றுக் கொள்ள ஆசைப்பட்டாள் என்று அருகில் இருந்த நடனப்பள்ளிக்கு அனுப்பினார் என் தாயார். சைக்கிள் வேண்டும் என்று அடம் பிடித்து, அதையும் வாங்கிக் கொடுத்தார். கால்களுக்கு நல்ல உடற் பயிற்சி என்று நினைத்தோம். ஆனால் அதுவே அவளது கால்களுக்கு எமனாகும் என்று நினைக்கவில்லை. ரோடைக் கடக்க நினைக்கும்போது, எதிரே வந்த கார் இடித்துத் தள்ளி விழுந்ததில் முதுகு எலும்பில் நல்ல அடி. காயம் ஆறினாலும் கால்கள் அசைக்க முடியாமல் போனது. அவளது ஆசையும் நிராசையாகிவிட்டது."

ஏதோ கேட்கனும் என்று கேட்கப்பட்ட கேள்வி தான். உன் வீட்டுக் கதை எனக்கு எதற்கு என்று மனதினுள் சொல்லிக் கொண்டு மேலாய் ஆர்வம் காட்டி கேட்ட வினயாவின் மனம் உண்மையிலேயே கரைந்தது. அந்த முகம் தெரியாத சிறுமிக்காக உள்ளம் வேதனைப்பட்டுத் துடித்தது.

தன்னைப் போல நடனத்தில் ஆர்வம். அந்த ஆர்வம் எப்படிப்பட்டது என்பது அவளுக்கும் தெரியும்... நடனம் கற்றுக்கொள்ள வேண்டும் என்று அடம்பிடித் தல்லவா அதைக் கற்றுக்கொண்டாள்... அந்தச் சிறுமியும் அப்படியே அடம்பிடித்து கற்றுக்கொள்ள ஆரம்பித்தாள் போலும்... முழுதும் கற்றவரை விட பாதியில் நின்றுபோன கொடுமை சகிக்க முடியாதுதான். அந்த நினைவில் அவள் கண்களில் நீர் கோர்த்து, முத்தொன்று விழுந்தபோது தான் அழுவதை உணர்ந்தாள்.

அவன் முன் தன் உணர்ச்சியின் பலவீனத்தைக் காட்டிக் கொண்டது அவளை வெட்கச் செய்தது. கண்களைத் துடைத்துக் கொண்டாள். அவன் கவனித்து விட்டான் என்றும் தெரிந்தது.



"இது நம் திருமண இரவு வினயா. நடந்துபோன கசப்பான நிகழ்ச்சிகளைப் பேசி ஏன் சந்தோஷமான இரவை துக்கமாக்கிக் கொள்ள வேண்டும். இனி இந்தப் பேச்சு வேண்டாம் ஏன் ஒதுங்கி நிற்கிறாய்... அருகில் வாயேன்" அழைத்தான். பகீர் என்றது அவளுக்கு. அங்கும் இங்கும் சுற்றி விஷயம் எங்கேயோ வர இருப்பதை அனு மதிக்கக் கூடாது. வேறு எதையாவது பற்றிப் பேசி...

"என் மீது கோபமா வினயா... சொன்னதைச் செய்து விட்டானே என்ற ஆத்திரம் உள்ளுக்குள் இருக்கிறதா... என்ன செய்வேன் வினயா... அது என் பிறவி குணம்... எது எனக்கு வேண்டும் என்று நினைக்கிறேனோ அதை அடைய வேண்டும் என்ற வெறி எனக்கு வந்துவிடும்... என் சுபாவமாகிவிட்டது."

உள்ளே தகித்துக் கொண்டிருந்த கொதிப்பை வெளிக் காட்டாமல் மறைத்துக் கொண்டு, வலிய ஒரு பிளாஸ்டிக் புன்னகையை உதட்டில் பூசிக் கொண்டு அவள் சொன் னாள்.

"சேச்சே... அதெல்லாம் ஏதும் இல்லை. கருகிப் போனது என் எதிர்காலம்... இனி எந்த வித திருப்பமும் இல்லை என்று இருந்தபோது எனக்கு வாழ்வு தந்தவரா யிற்றே நீங்கள்...என் பெற்றவர்களின் வயிற்றைக் குளிர வைத்த புண்ணியவான் நீங்கள்... அப்படித்தான் நினைக் கிறார்கள் அவர்கள். அவர்கள் சந்தோஷம் தான் என் சந் தோஷமும்... உங்கள் தகுதிக்கு ஏற்றவர்கள் இல்லையே நாங்கள். உங்கள் வீட்டில் ஏற்றுக் கொள்வார்களா என்னை" என்ற கேள்வியை எடுத்து விட்டாள்.

"என் விருப்பம்தான் என் வீட்டில் உள்ளவர்களின் விருப்பமும். அதற்கு எந்தவித மறுப்பும் வராது" பெரு மிதத்துடன் சொன்னான்.

அதனால்தான் இந்த ஆட்டம் போலிருக்கிறது. அடக்குபவர் யாரும் இல்லாத மயிலக் காளை.. விருப்பம் போல அலைகிறது.

அவன் கவனிக்காத வண்ணம் மணியைப் பார்த்தாள். இப்போது இரண்டு மணி!

கொட்டாவி விட்டாள்.

"கண்களை சுழற்றி வருகிறது. வழக்கமில்லை பாருங்கள். இனிமேலும் கண் விழித்தால் நாளைக்கு கண்டிப்பாய் தலைவலி, வாந்தி எல்லாம் வரும்... தூங்குகிறேனே..." பரிதாபமாய் முகம் வைத்துக் கேட்டாள்.

ஒரு கணம் தயங்கி பின் "சரி... தூங்கு" என்றான் ஓடிப்போய் படுத்துக் கொண்டு கண்களை மூடிக்கொண்டாள். புது இடம்... புது அறை... புதுத் துணை உறுத்தல் வேறு. தூக்கம் வர சண்டித்தனம் செய்தது... இருந்தும் தூங்கிவிட்டவள் போல நடிக்க வேண்டியிருந்தது. அவன் அங்கும் இங்குமாய் நடைபோடுவது தெரிந்தும் திரும்பாமல் இருந்தாள்.

நடக்கட்டும்... நன்றாக நடந்து பழகட்டும். இன்றைக்கு என்ன... தினமும் தூக்கம் வராமல் திரியட்டும். மனைவியாமே.. தாலிக்கட்டினால் மனைவியா? ஏன் மணந்தோம்னு நினைத்து மறுக வேண்டும். இன்று சமாளித்தாகிவிட்டது.. நாளை? வழி இல்லாமலா போகும்... வேறு வழி கிடைக்காமல் போனால் இருக்கவே இருக்கிறது 'ஆயிரத்தொரு இரவு' வழி....

மனதில் துணிவு வர... மெல்ல உறக்கமும் அவளைத் தழுவியது.



## 9

பெற்றவர்களைப் பிரிந்து செல்ல வேண்டிய நேரமும் வந்தது...

கணவன் வீடு செல்லப் புறப்பட்டு விட்ட மகளை அணைத்துக்கொண்டு அழுதாள் ஜெயம். பெண்களைப் பெற்றெடுத்தவர்களின் விசித்திர நிலைமை அது... இன்னும் பெண்ணிற்கு திருமணம் ஆகவில்லையே என்ற ஏக்கமும் வேதனையும்... தம் எண்ணப்படி திருமணம் ஆகிவிட்ட பின்பும் வேதனை... பிரிவு வேதனை. பெற்று... வளர்த்து, பொத்திப் பாதுகாத்த மகளை அனுப்பிவைக்க வேண்டுமே என்ற தவிப்பு... நீலசேகரனால் விம்மி அழமுடியவில்லை... ஆண் ஆயிற்றே. கனத்த நெஞ்சத்தை சுமந்து கொண்டு, அவ்வப்போது மகளின் தலையை தடவிக் கொடுத்து தன் வேதனையைக் காட்டிக் கொண்டார்.

இனி அவள் தங்களுக்கு சொந்தம் கொண்டாட முடியாதவள் இன்னொருத்தனின் மனைவி. அவன் பார்த்து அனுப்பிவைத்தால் தான் உண்டு... கண்கள் கசிந்தன...

வினயாவும் அழுதாள். இதயத்தை பிழிந்து விடுவது போல..... இத்தனை வருடங்கள் உயிருக்குயிராய் வைத்து வளர்த்த பெற்றோர்களை விட்டு... பழக்கமே இல்லாத ஒருவனுடன் இனி வாழ்க்கை ஆரம்பம்.

பிரசாந்த் என்றால் அது வேற விஷயம்.... தெரிந்த உறவினர்... புது இடமாய் தெரிந்திருக்காது... ஆனால் ஜெயசந்திரன்... எல்லாமே புதுசு... சூழலும் புதுசு... பழக்கங்களும் புதுசு... பழகியிராத கணவனும் புது உறவு.

பழைய வினயாவாகவே இருந்திருக்கலாம்... அப்பா... அம்மா.. அண்ணா... நடனம்... பாட்டு... இந்தச் சின்ன

உலகத்தில் எத்தனை நிம்மதி... சந்தோஷம்.. அவை திரும்புமா...?

தாயின் புத்திமதிகளையும் கூடையளவில் பெற்றுக் கொண்டு கணவனுடன் புறப்பட்டாள்.

"அம்மா... உனக்கு முடியவில்லை என்றால் எனக்கு போன் பண்ணும்மா... உடனே ஓடிவந்து விடுகிறேன்" கண்ணீருடன் சொன்னாள் மகள்.

"அசடு... அப்படியெல்லாம் கணவனை விட்டு ஓடி வரக் கூடாது. அவரா பார்த்து அனுப்பினால்தான் வரணும்" என்று ஜெயம் சொன்னபோது அவளுக்கே தொண்டை அடைத்துக் கொண்டது. இனி மாப்பிள்ளையாய் பார்த்து அனுப்பினால் தான் உண்டு. தாரை வார்த்து தானம் கொடுத்தாகி விட்டது. நினைக்க, பெற்ற வயிறு பிசைந்தது.

கார்த்திக்கிடம் வந்தாள் வினயா. "அண்ணா... வருகிறேன். அம்மாவைப் பார்த்துக்கொள். அம்மாவுக்கு உதவியா இரு.. ஒண்டியாய் செய்து கொள்ள அம்மாவால் முடியாது.. அடிக்கடி போன் பண்ணுவாய் தானே..." தொண்டை அடைக்க சொன்னாள்.

சிடுமூஞ்சியான கார்த்திக்கின் கண்கள் பாசத்தில் கலங்கின. தங்கையின் தோளை அணைத்து தன் அன்பைக் காட்டினான்.

காரில் சென்றபோது அழுகை பொங்கி வந்தது. கண்ணில் தெரியும் வரை அவர்களைப் பார்த்து கையசைத்துக் கொண்டிருந்தாள். புள்ளிகளாய் தூரத்தில் மறையும் வரை கழுத்து வலிக்க பார்த்துக் கொண்டிருந்தாள்.

அவர்களை விட்டு வெகுதூரம் செல்வது போல உணர்வு. கண்களை மூடிக்கொண்டு சீட்டில் சாய்ந்து



கொண்டாள்... தன் வாழ்வில் ஏற்பட்ட இந்த மாற்றத்தை ஒரேடியாய் ஒத்துக் கொள்ள மனம் தயங்கியது... தன் மனம் மாறினால் தான் அது சாத்தியம்... அது நடக்குமா?

ஜெயசந்திரனின் பிளாட் அழகாய் இருந்தது. வசதியான பிளாட். நுழைந்தவுடன் இருக்கும் கூடத்தில் சோபாக்கள்.. மத்தியில் டீபாய்... அதன் மேல் பூக்கிண்ணத்தில் பூக்கள் அழகாய் சிரித்து வரவேற்றன. ஒரு மூலையில் தொலைக்காட்சி பெட்டி. அதன் அருகே வி.சி.ஆர். கூடத்தை அடுத்து கச்சிதமான டைனிங் ஹால். இடப்புறம் அழகிய சமையல் அறை. கூடத்தை ஒட்டிய விசாலமான படுக்கை அறை. தள்ளி இருந்த குளியல் அறையும் கழிவறையும் கூட பளிங்கு சதுரக்கற்களில் பளபளத்து விளங்கின...

வீட்டினுள் நுழைந்தபோது "அழகான என் மனைவிக்கு நல்வரவு" என்றான்...

இந்த அழகான வீட்டில் இவர் மட்டுமா? யோசித்தாள்.

"உனக்கு பிடித்திருக்கிறதா வினயா?"

"இந்த அழகான வீட்டை யாருக்குத்தான் பிடிக்காது?"

வயதானவர் காபியுடன் வந்தார். சமையல்காரர் காசிநாதன் என்று அறிமுகம் செய்தான்...

இந்த வீட்டில் சமைக்க ஆள் இருப்பதால் தனக்கு வேலையே இல்லை... பொழுது போகுமா?

காபியை அருந்தியவாறே வீட்டைச் சுற்றிப் பார்த்தாள். பெரிய படுக்கை அறையைப் பார்த்தபோது தன்னுடைய திட்டம் பற்றிய நினைவு எழுந்தது. திட்டத்தின் இரண்டாம் படி...

அவனுடன் சிரித்துப்பேசி பொழுதைக் கழித்தாள். காசிநாதன் சமைத்துப் பரிமாறியதை ஆற அமர உண்டு முடித்தனர். தனக்கு அலுவலக வேலைகள் நிறைய இருக்கிறது என்று புறப்பட்டான் ஜெயசந்திரன்... அப்பாடா என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டாள்...

அவன் சென்றபின்பு தாய் வீட்டை நினைத்துக் கொண்டு பொழுதைக் கழித்தாள்... மகளை முழுசாய் பறி கொடுப்பது என்பது கொஞ்சம் கஷ்டம்தான்... அம்மா அழுகிறாளோ என்னவோ... தான் வீட்டில் இல்லாதது அப்பாவுக்கு என்னவோ போல் இருக்கும். அண்ணா... அவனுக்கு பராவாயில்லை நண்பர்கள் இருக்கிறது. அவர்களுடன் அரட்டை அடிப்பதில் என் நினைவும் வராது... அவர்கள் இல்லாத வாழ்வு... எதிர்காலம் அவளை பயமுறுத்துவது போல இருந்தது... இந்த வாழ்க்கையுடன் தன்னால் ஒன்றமுடியுமா?

நினைவுகளின் ஊடே உறக்கம் அவளைத் தொட்டது. உறங்கிப் போனாள்.

கலைந்து விழித்த போது மணி ஆறு... மாலை மயங்கிக் கொண்டிருந்தது. அத்தனை நேரம் உறங்கிவிட்டேனா? முந்திய நாளும் சரியாய் உறக்கம் இல்லை. பிரயாண அலுப்பு வேறு. அதனால் தான் அடித்துப் போட்டது போல இந்தத் தூக்கம்.

ஜெயசந்திரன் வந்திருக்கவில்லை... தினமும் தாமதமாய் தான் வருவானோ... இப்படி ஒண்டியாய் இருக்க வேண்டுமோ பயம் எழுந்தது.

ஜெயசந்திரன் எட்டு மணிக்கு வந்தான். மிகவும் களைத்துக் காணப்பட்டான்... அவளைப் பார்த்ததும் புன்னகைத்தான்.



''பொழுது போனதா வினயா... என்னென்ன செய்தாய்?'' என்று அக்கறையுடன் கேட்டான்.

முதல் இரவில் தான் நடந்து கொண்டதற்காக அவனிடம் சினம் இல்லை.

சென்று அலுப்புதீரக் குளித்து விட்டு வந்தான். தலையைத் துவட்டியவாறு செய்தித்தாள் படித்தான்.

ஈரமான கருமைநிற கேசம் வெட்டி எடுத்த நிலக்கரிப் போல விளக்கொளியில் பளபளத்தது. வெறும் லுங்கி அணிந்து வெற்று மார்புடன் இருக்கும் அவனைப் பார்க்கவும் கூசி கழுத்து சுளுக்கும் வரை திரும்பாமல் தொலைக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

வேண்டும் என்றே அவளை சீண்டிப் பார்த்தான்.

''வினயா... ஏதாவது கடிதம் வந்ததா?''

''இல்லை'' திரும்பாமலே சொன்னாள்.

''போன் கால்?''

''வந்தது... ராங் நம்பர்'' அதுவும் திரும்பாமலே.

''சரி... எனக்குக் குடிப்பதற்கு சூடாய் ஏதும் கிடைக் காதா.''

அப்போதுதான் உறைத்தது... ஓகோ... தான் அவனைக் கவனிக்க வேண்டும்... மனைவியின் கடமை அது இல்லையா... எழுந்து சமயலறைக்குள் சென்று, சமையல் காரர் தந்த சூடான மால்டோவாவை வாங்கி வந்து அவனது கையில் வைத்தாள்... அப்போதும் அவனை ஏறிட்டு பார்க்காமல்... தம்ளரில் கண்களை பதித்திருந் தாள். அவளையே பார்த்துக் கொண்டிருந்த ஜெயசந்திர னின் உதட்டின் ஓரமாய் குறும்புடன் புன்னகை...

"வினயா, என் முகத்தை பாரேன்" என்றான்.

அவள் அவனைப் பார்த்துவிட்டு முகத்தைத் திருப்பிக் கொண்டாள். அவனுக்கு சிரிப்பு வந்தது.

"என்னைப் பார்த்து பயமா... இல்லை வெட்கமா?" படபடவென்று பொரிந்து தள்ளியவளுக்கு கொஞ்சம் நாணமும் ஒட்டிக் கொண்டிருக்கிறது பரவாயில்லை தான்.

"எனக்கு இதுமாதிரியெல்லாம் பழக்கம் இல்லை" அவனைப் பார்க்காமல் சொன்னாள்.

"எது மாதிரி?"

"அரை நிர்வாணமாய் இருக்கும் ஆண்பிள்ளையுடன் சேர்ந்து இருப்பது..."

"யாராவது கேட்டால் சிரிப்பார்கள். திருமணம் செய்து கொள்ளும் பெண்கள் அதையெல்லாம் பழக்கப் படுத்திக்கொண்டுதான் தாலிக் கட்டிக்கொள்கிறார்களாக்கும். கணவன் - மனைவி என்றால் இதெல்லாம் சகஜம்... நீ உன் அப்பாவிற்கு போன் பண்ணி பேசினாயா..." சட்டென்று பேச்சை மாற்றினான்.

சமைத்து முடித்து வந்து சமையல்காரரிடம் இன்றைக்கு உங்களுக்கு ஓய்வு. என் மனைவியும் நானும் நிதானமாய் பரிமாறிக்கொண்டு சாப்பிட்டுக் கொள்கிறோம் என்றான்.

சமையல்காரர் காசிநாதன் இங்கிதம் தெரிந்தவர். புதுமண தம்பதிகளுக்கு மத்தியில் பானகத்துரும்பாய் இருக்கக்கூடாது என்று கோயிலுக்கு புறப்பட்டு சென்றார். போகுமுன் "அம்மா... மேஜை மீது எல்லாம் எடுத்து வைத்திருக்கிறேன். இன்னைக்கு உங்களுக்கு முதல்



விருந்து என்று காரட் அல்வா பண்ணி இருக்கிறேன். முதலில் அதை சாப்பிட்டு விட்டு பின்பு, சாப்பாட்டை சாப்பிடவேணும்னு என் கோரிக்கை..." என்று சொல்லி விட்டுச் சென்றார்.

ஆக மூன்றாமவராய் இருந்த அவரும் போயாகி விட்டது இப்போது இந்த வீட்டில் அவர்கள் மட்டுமே... தன் இதயம் 'லப்டப்' என்று ஒலித்தது பலமாய் கேட்டது. என்ன செய்வான்? இழுத்து அணைப்பானா? அத்து மீறினால்...

கணவனை ஓரக்கண்ணால் கவனித்தாள்... அவன் நிதானமாய் அவளை நோக்கி வந்து கொண்டிருந்தான்.

வாசல் கதவு திறந்திருக்கிறதே வெளியே ஓடிப்போய் நிற்கலாமா என்று நினைத்தாள்.

இதோ அருகில் வந்தாயிற்று... என்ன செய்யப் போகிறான்...

அவளுள் வில்லில் கட்டிய நாண் போல இறுக்கம் அழுத்தி நின்றது.

## 10

"வினயா... பசிக்கிறது சாப்பிடலாமா?"

எதை எதையோ எண்ணி தவித்துக் கொண்டிருந்தவளின் உணர்வு அலைகள் 'புஸ்' என்று அடங்கி அமைதியாயின. அவளுக்கே வெட்கமாக இருந்தது. சில நிமிடங்களில் எங்கெல்லாம் போனது தன் கற்பனை. பாவம்... பசிபோலிருக்கிறது எல்லோருக்கும் வயிறு ஒன்றுதான்.

அப்போதுதான் உணர்ந்தாள்... அவளுக்கும் பசி வயிற்றைக் கிள்ளிக் கொண்டு இருந்தது.

மதியம் ஒண்டியாய் சாப்பிட்டுப் பழக்கமில்லாத காரணத்தினால் சாப்பாட்டை ஏதோ சாப்பிட்டேன் என்று கொறித்துவிட்டு எழுந்தாள். புது இடம்... பெற்றோர்களின் பிரிவு வேதனை... பசி தெரியவில்லை. இப்போது சேர்ந்து உண்ண ஒருவன் இருக்கிறான் என்றபோது பசியை உணரமுடிந்தது.

உணவு உண்ணும் போது காசிநாதரின் சமையலைப் புகழ்ந்தாள் வினயா... ''அவருக்கென்று யாரும் இல்லையா?'' என்று கேட்டாள். அவரது கதையைச் சொன்னான் ஜெயசந்திரன்.

''யாரோ ஒரு பெரிய மனிதர் வீட்டில் சமையல்காரராய் இருந்தார் காசிநாதர். அந்த மனிதர் இறந்த பின்பு வீட்டில் உள்ளவர்கள் சிதறி வேறு வேறு குடித்தனம் போய் விட்டார்கள். கொஞ்சம் வயதாகி விட்டதால் வெளியே வேலை கிடைக்கவில்லை. யாரோ ஒருவர் மூலம் என் நண்பர் ஒருவர் காசிநாதரை என்னிடம் அழைத்து வந்துவிட்டார்.

எனக்கும் சாப்பாடு விஷயத்தில் கஷ்டம் இருந்தது- ஓட்டல் சாப்பாடு வயிற்றுக்கு கெடுதி. வீட்டுச் சாப்பாட்டுக்கு வழியில்லை. இந்த நிலையில் காசிநாதர் கிடைத்தது கடவுள் கொடுத்த வரப்பிரசாதம் தான்.''

நளபாகமாய் சமைத்து, பரிவுடன் பரிமாறிய அவரை பிரியமாய் நடத்தினான். வயதானவர்... அனாதை என்ற பச்சாதாபமும் அவனுக்கு இருந்தது. மகனில்லாத தனக்கு மகனைப் போல பரிவைக்காட்டும் ஜெயசந்திரன் மேல் உண்மையாகவே அவருக்கும் அன்பு சுரந்தது.



மனைவியுடன் உள்நுழைந்த அவனைப் பார்த்து ஆனந்த கண்ணீர் துளிர்க்க அமோகமாய் இருக்க வேண்டும் என்று மனதார வாழ்த்தியது அவரது உள்ளம்.

சாப்பிட்டு முடித்ததும் அவன் சோபாவில் அமர்ந்து தொலைக்காட்சியை பார்த்துக் கொண்டிருந்தான். பாத்திரங்களை எடுத்து வைத்துவிட்டு வந்த வினயாவின் மனம் அடித்துக் கொண்டிருந்தது. சுவர் கடிகாரத்தைப் பார்த்தாள். மணி ஒன்பது முப்பது... சே.. இந்த இரவு ஏன் வருகிறதோ... அவள் வந்தது கண்டு அவன் எழுந்து படுக்கை அறைக்குச் சென்றான்.

இப்போது என்ன செய்யலாம். தொலைகாட்சி நிகழ்ச்சியை ரசிப்பது போல நடிக்கலாமா... இல்லை ஏதாவது புத்தகம்... தேடினாள்... கண்ணில் படவில்லை.

''வினயா இங்கே வா... அதென்ன அங்கேயே தயங்கி நிற்கிறாய்...'' அதிகாரமாய் அவன் அழைத்தபோது எரிச்சல் உண்டானது.

அதை அடக்கிக் கொண்டவளாய் புன்னகையைத் தவழவிட்டு ''பால் காய்ச்சி எடுத்து வந்துவிடலாமே என்றுதான்...'' என்று முடிக்காமல் நிறுத்தினாள்.

''இப்போதுதான் சாப்பிட்டது... பால் எதற்கு... வேண்டாம்'' என்றான் அவன்.

''இல்லை... முதன் முதலாய் உன் வீட்டுக்கு போனதும் இரவில் பால் கொண்டுபோய் தரணும் என்று என் அம்மா சொன்னதுதான்...'' மறுப்பு சொல்ல அவனுக்கு நேரம் தராமல் உள்ளே விரைந்தாள்.

பாலை சூடு பண்ணி, பாதாம் பவுடரை சேர்த்தாள். கையோடு கொண்டு வந்திருந்த தூக்கமாத்திரையில் இரண்டை அதில் போட்டுக் கலக்கினாள்.

ஏதும் அறியாதவள்போல அவன் இருந்த அறைக்குச் சென்று ''குடித்துவிடுங்கள்'' என்று நீட்டினாள்.

''சாப்பிட்டே ஆகவேண்டுமா...?'' முகம் சுளித்துக் கேட்டான்.

''இன்றைக்கு மட்டும்தான்... உண்மையில் உங்களுக்கு வெற்றிலை மடித்துத் தரணும் என்று சம்பிரதாயமாம். நீங்கள் தான் வெற்றிலை போடமாட்டீர்களே. அதனால் இதுபோதும் என்றுதான்.''

அவன் வாங்கி 'மடமட' வென்று குடித்துவிட்டு தம்ளரை திருப்பித் தந்தான்.

தூக்கமாத்திரை உள்ளே போயாகிவிட்டது. எப்போது வேலையை ஆரம்பிக்குமோ...

''அடடா ஏதோ நினைவில் எல்லாம் குடித்துவிட்டேனே. பாதி உனக்கு கொடுக்க வேண்டும் என்பது தான் சம்பிரதாயம்.''

''பரவாயில்லை... நீங்கள் தான் முக்கியம்'' அழுத்திச் சொன்னாள். நீங்கள் தானே தூங்க வேண்டும்... மனதினுள் நினைத்தாள்.

''சரி... இங்கே வா... உட்கார்'' பிரியமுடன் மனைவியை அழைத்தான் அவன்.

அங்குதான் ஆபத்து என்று நினைத்தவள் ''ஒரு நிமிடத்தில் வந்துவிடுகிறேன்... பாலை மூடிவைத்து விட்டு முகம் கழுவிக்கொண்டு வருகிறேன்... காத்திருங்கள்'' என்று ஓட்டம் பிடித்தாள்.

இருபது நிமிடங்களுக்குப் பின் மெல்ல எட்டிப் பார்த்தாள். அவன் ஏதோ ஒரு புத்தகத்தைப் படித்துக் கொண்டிருப்பது தெரிந்தது.



'அடக் கடவுளே... இன்னும் தூங்கவில்லையே. அம்மா ஒரு மாத்திரைக்கே தூங்கி விடுவாளே... இது என்ன உடம்பு.. இரண்டு மாத்திரைக்கும் தூங்காமல்...'

அவன் நிமிர்ந்து பார்த்து தலையசைத்தான். அவனை உற்றுக் கவனித்தாள் வினயா... ஏதாவது தூக்கத்தின் அறிகுறி... கண்கள் சுழற்றிக் கொண்டு... இமை ஒட்டிக் கொண்டு... இல்லவே இல்லை.

தான் கொண்டு வந்தது தூக்க மாத்திரை இல்லையோ... பதிலாய் விட்டமின் மாத்திரைகளோ... இன்னும் தெம்பாய் உட்கார்ந்திருக்கிறானே. பால் குடித்ததில் இன்னும் புத்துணர்ச்சி ஏற்பட்டு விட்டதோ. அட ராமா.. இப்போது எப்படிச் சமாளிப்பதாம்... கைகளைப் பிசைந்தாள் வினயா. முந்திய இரவு நினைவு வந்தது... இரவெல்லாம் ஏதாவது பேசிக் கழித்துவிட்டால்... எதைப் பேசலாம்... அவனருகில் வந்து அமர்ந்தாள். ''ஜெய்... உங்கள் விருப்பு வெறுப்புகளைப் பற்றி எனக்கு ஒன்றுமே தெரியாது. உங்களுக்கு என்ன பிடிக்கும்... எது பிடிக்காது... உங்கள் வீட்டில் இருப்பவர்களுடைய குணாதிசயங்கள் எப்படி... உங்கள் தம்பி உங்களைப் போலவா... சொல்லுங்களேன். தெரிந்துக்கொள்ள ஆசை...'' என்று இழுத்தபோது கையை அமர்த்தி நிறுத்தினான்.

''இதோ பார் வினயா... நானும் ஆயிரத்தொரு இரவுகள் கதையைப் படித்திருக்கிறேன். விடிந்ததும் தூக்கில் போடும் சுல்தானும் நான் இல்லை... கதை சொல்லிப்பொழுதை இழுக்கும் மந்திரி மகளும் நீ இல்லை... ஆக எதற்கு இந்த வீண்பேச்சு. நேற்றே நாம் நிறையப் பேசி விட்டோம். இன்றைக்கு எந்த... ஆவ்... பேச்சும்...'' பேசவிடாமல் தொடர்ந்து வந்த கொட்டாவி...

துள்ளி எழுந்தாள் வினயா... ஆகா... தூக்கம் வந்து விட்டது.

"எழுந்திருங்கள்... படுக்கை விரிப்பை உதறிப் போடு கிறேன்... அப்பா...! ஒரே தூசி... சுத்தம்பண்ணி ரொம்ப நாளாகிவிட்டதா?"

உண்மையில் படுக்கை விரிப்பு எல்லாமே சுத்தமாகத் தான் இருந்தது. ஆனால் இன்னும் கொஞ்சம் காலம் கடத்தினால் அவன் விழுந்தே விடுவானே...

அவனும் தள்ளாடி எழுந்தான். படுக்கையைத் தட்டி போடுமுன் பத்து கொட்டாவி விட்டான்.

படுக்கை விரிப்பை உதறி போட்டது தான் தாமதம். படுக்கையில் விழுந்தவன் அப்படியே உறங்கிப் போனான்...

இரண்டாவது இரவும் பிழைத்துப் போனது.

நாளை.. பார்த்துக் கொள்ளலாம்.. அந்த நினைவுடன் படுக்கையின் ஓரமாய் படுத்து தூங்கிப்போனாள் வினயா...

## 11

தொலைபேசி செல்லக் குழந்தையாய் சிணுங்கி அழைத்தது. 'வாயேன்'... 'என்னை எடுத்துக் கொள்' எடுத்து பேசினாள் வினயா.

"அலோ... நான் சியாமளா... ஜெய்யோட கஸின்... ஒன்றுவிட்ட சகோதரி பேசுகிறேன். 'ஜெய்' இல்லையா... நீ அவன் மனைவி தானே...?" மறுமுனையிலிருந்து கத்திக்கேட்டது ஒரு குரல்.

யார் இந்த சியாமளா? தெரியாவிட்டாலும், கணவனின் உறவு என்றதால் குரலில் ஆர்வம் காட்டிப் பேசினாள்.



"அவர் இல்லையே... நான் அவரோட மனைவிதான்."

"ஆமாம்... எங்களைக் கூப்பிடாமல் இதென்ன ரகசிய திருமணம்... அவன் வந்தால் சொல்... அவனைப் பிடித்து உலுக்கி சண்டை போட நான் வந்து கொண்டு இருக்கிறேன். நான் மட்டுமல்ல... என் மொத்தக் குடும்பமும் தான். அவனை சும்மா விடப்போவதில்லை என்று சொல்லிவிடு. நாங்கள் புறப்பட்டாகிவிட்டது. சரியாய் எட்டு எட்டரைக்கு அங்கு இருப்போம். உன் நாத்தனார் நான்... என்னைப் பார்த்து உன் கை கால் நடுங்க வேண்டும் ஆமாம்" என்று போனை வைத்தாள்.

அவள் உண்மையிலேயே அப்படியா... இல்லை வேடிக்கைப் பேச்சா... புரியாமல் நின்றாள்.

ஜெயசந்திரனுக்கு போன் செய்து விசயத்தைச் சொல்ல வேண்டும்... டைரியை திறந்தாள். எங்கு என்று போன் செய்வது... இறுதியில் தான் சென்று சந்தித்த அந்த அலுவலகத்திற்கு தொடர்பு கொண்டாள். கிடைத்தான் விசயத்தை கேட்டதும் பலமாய் சிரித்தான்.

"அவள் விளையாட்டுக்கு பயமுறுத்தி இருக்கிறாள். உண்மையில் ரொம்ப நல்லவள். பழகிப் பார்த்தால் தெரியும். எத்தனை மணிக்கு என்றாய்... சரி... காசிநாதரிடம் சொல்லி விருந்துக்கு ஏற்பாடு செய்... மறக்காமல் முலாம்பழம் வாங்கிவை. சியாமளாவின் கணவனுக்கு பிடித்தது. சீக்கிரம் வந்துவிடுகிறேன்..." என்று சொல்லி தொடர்பைத் துண்டித்தான்.

பிறந்த வீட்டில் விருந்தினர் என்றால் தாயின் பொறுப்பு. இது தான் முதல் தடவை... இல்லத் தலைவியாய் இருந்து விருந்தினரை வரவேற்பது... கையும் காலும் ஓடவில்லை. சமையல்காரரிடம் ஓடிப்போய் சொன்னாள்.

''எதற்கும் கவலைப்படவேண்டாம் அம்மா... சமையல் விசயமெல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். மற்றதை நீங்கள் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்று சொன்னதும் அவளுக்கு கொஞ்சம் துணிவு வந்தது.

வந்ததிலிருந்து அந்த வீட்டில் என்ன என்ன இருக்கிறது என்று சுற்றிலும் பார்க்க ஆர்வம் இன்றி இருந்தாள். இப்போது அவசரம் அவசரமாய் எல்லாவற்றையும் கவனித்து ஒழுங்கு படுத்தினாள். செய்தித்தாள்களை அடுக்கி வைத்து... அங்கும் இங்கும் விழுந்துகிடந்த துணிகளை மடித்து வைத்து... வேலைக்கார சிறுமியை விட்டுத் தரையை பளிங்காய் துடைக்கச் செய்து... சலவை செய்து வைத்திருந்த படுக்கை விரிப்புகளை தேடி விரித்து.தலையணை உறைகளை மாற்றி... தூசி தட்டி சுத்தம் செய்து... மரச் சாமான்களை பளபளக்க துடைத்து... டீபாயின் மீது புதிய மலர்களை கொண்டு வந்து குவளையில் செருகி.. வீடு முழுக்க அழகுப் படுத்தி நிமிர்ந்தபோது முதுகு கழண்டு விழுவது போல ஆனது.

தொடர்ந்து நடனங்களை ஆடினாலும் ஏற்படாத அயர்ச்சி வீட்டுவேலைகளை செய்து முடித்ததில் உண்டானது. அம்மாவோட நினைப்பு அப்போது வந்தது. ''நீ எதுவும் பண்ண வேண்டாம் வினயா... நான் பார்த்துக் கொள்கிறேன்.'' என்று கல்லூரிக்கு அனுப்பிவைப்பாள்...

கையில் காபி தந்து ''நீ உட்காரம்மா... நான் செய்துட்டேன்'' என்பாள். அம்மான்னா அம்மாதான். அந்த அன்புக்கு இணையேயில்லை. தாயின் நினைவில் கண்களில் ததும்பல்... ஒரு வழியாய் எல்லாம் முடிந்து, தன்னையும் அழகுப்படுத்திக் கொண்டு தயாரான போது மணி ஏழரை. காசிநாதர் சேப்பங்கிழங்கு வறுவல், வெங்காய



சாம்பார்... வெள்ளரி கொத்சு என்று அமர்க்களமாய் செய்து வைத்திருந்தார்.

''அவர்கள் வந்தவுடன் குக்கர் வைக்கிறேன். சுட சுட சாதம் இருந்தால் தான் ருசி'' என்றதும் சரியெனப் பட்டது.

அவர்கள் யாரோ... எவரோ... ஜெயசந்திரனின் மூலம் தனக்கும் சுற்றம். புது வருகை என்பதால் ஒரு இறுக்கம்.

வீட்டைப் பார்த்து ஜெயசந்திரன் வியந்துப்போனான்.

''என்னதான் இருந்தாலும் பெண் கைப்பட்டால் அதுவே ஒரு தனிய'ழகுதான்.'' அவனது பாராட்டு அவளுக்கு மன நிறைவு தந்தது.

மறக்காமல் முலாம் பழம் வாங்கி துண்டுகளாய் நறுக்கி, குளிர்பதனப் பெட்டியில் வைத்தாள். ஜெயசந்திரன் வரும்போது ஐஸ்கிரீம் பேக் வாங்கி வந்து வைத்தான்.

''குழந்தைகளுக்கு பிடிக்கும்.''

''எத்தனை?''

''ஐஸ்கிரீம் தானே... முழு பாக் இருக்கும் ஒரு...''

''அதில்லை... குழந்தைகள் எத்தனை என்று.''

''இரண்டு.. பெரியவன் சரண்... படுவால். சின்னவள் ரேகா படுவாய். பார்க்கத்தான் போகிறாய்.. சமாளிக்க முடியாது. அவ்வளவு குறும்பு.'' என்று பயமுறுத்துவது போல் சொன்னாலும் அவனது குரலில் பாசம் தெரிந்தது.

எட்டரை என்றவர்கள் ஒன்பது மணிக்குத்தான் வந்தனர்.

செவிப்பறை பிய்ந்து போகும்படி ஒரே கூச்சல். சியாமளா உள்ளே நுழையும்போதே கடுகாய் பொரிந்து கொண்டு வந்தாள்.

''என்ன... நாங்கள் எல்லோரும் உங்கள் பங்குக்கு இல்லாமல் போய் விட்டோமா... அது என்ன அப்படி மூடுதிரையில் திருமணம் வேண்டியிருக்கிறது. அம்மாவும் வரவில்லையாமே... மனைவி என்றானதும் யாருமே வேண்டாம் என்று தோன்றி விட்டதாக்கும். எங்கே அவள்... உன்னை வசப்படுத்தி, கட்டிப்போட்டவள்...'' துப்பாக்கியிலிருந்து விழும் தோட்டாக்களைப் போல சுட்டுத் தள்ளினாள் வார்த்தைகளை.

''அமைதி... அமைதி...'' என்று சமாதானம் செய்தான் அவளுடைய கணவன் பாஸ்கர். அதற்குள் சரண் 'கறீச்' என்று கத்த... ரேகா 'ஓ!'வென்று அழ சியாமளாவின் கவனம் அங்கு தாவியது.

''என்னடா உன் இராமாயணம். எங்கு போனாலும் உங்க இம்சை குறையாது. ஏய் ரேகா... அவன் கிட்டே ஏன் போகிறாய் வாடி இங்கே.'' கூவினாள் அதே நேரம் விரைந்து வந்து வரவேற்ற வினயாவை ஏற இறங்க பார்த்த சியாமளா ''ஆ அதுதானே பார்த்தேன். என்னடா கல்யாணம் என்றாலே தொட்டா சுருங்கியாய் ஒதுங்கும் என் தம்பி அத்தனை பல்டி அடித்தானே என்று, பார்த்தீர்களா... என் தம்பியின் தேர்வை'' பெருமையுடன் சொன்னாள்.

''கேட்க வேண்டுமா... உம்... என் தேர்வும் இருக்கே...''

''இந்தா... இந்தக் காலை வாரும் வியாபாரம் தானே வேண்டாம் என்கிறது எனக்கென்ன குறைச்சலாம்?''

''எதுவும் குறைவில்லாம கொழுக் மொழுக் என்று இருக்கே. இந்த லட்சணத்தில் ஜெய் டயட்டுன்னு பெருமையா சொல்கிறாள்... பார் யாராவது நம்புவார்களா என்ன?''



''அய்யோ... ஏதாவது சொல்லணும்... கேட்க ஆள் இருந்து விட்டால் அய்யாவுக்கு படு குஷி... என்னைப் பற்றி ஒரு மூட்டை கட்டிக்கொண்டு வந்திருப்பீர்களே பாவம் வந்த அலுப்பு இருக்கும். நிதானமாய் அவிழ்த்து விடுவீர்களாம். இப்போதைக்கு என் தம்பி மனைவியிடம் பேச அனுமதியுங்கள். அவள் குரல் இனிமையா என்று டெஸ்ட் பண்ணனும்.''

''அவள் பாட்டு போட்டியில் பர்ஸ்ட்'' ஜெயசந்திரன் சொன்னான்.

''வாயே திறக்கவில்லையே... பேசுவாளா... இல்லையா?''

''எல்லோரும் உன்னைப் போலவா... வாயைத் திறந்தால் மூடும் வழக்கம் இல்லையே'' கிண்டல் செய்தது பாஸ்கர்.

அதை காதில் போட்டுக் கொள்ளாதவள் போல ''என்ன வினயா... நீ மௌன கௌரி ராகமா?'' என்று கேட்டாள்.

''அவள் பேச்சு போட்டியிலும் முதல்'' மறுபடியும் ஜெயசந்திரன் தான்.

''ஏய் ஜெய்.. அவள் பேசட்டும்ப்பா... நீ என்ன அவளுக்கு 'மவுத் பீஸா'.. அப்புறமாய் உன் பீற்றலைக் கேட்கிறேன்... வினயா நீ என்னுடன் பேசும்மா. எங்கள் ஜெய் உன்னை நன்றாக வைத்துக் கொண்டிருக்கிறான் தானே... இல்லைன்னா சொல்.. அவனை ஒரு உலுக்கு உலுக்கிவிடுகிறேன்.''

''இது என்ன பேச்சு... ஏதோ அரக்கன் ராஜகுமாரியை கடத்திவைத்திருக்கிற மாதிரி... ஜெய் ஆசைப்பட்டு நடந்த திருமணம். நன்றாகத்தான் வைத்திருப்பான்...

பதிலுக்கு அவர்கள் திருப்பிக்கேட்டுவிட்டால் போச்சு..."

"என்னன்னு?" புரியாமல் கணவனைப் பார்த்தாள் சியாமளா.

"நீ என்னை நன்றாக வைத்துக் கொண்டிருக்கிறாயா என்று... ஜெய் பார்த்தாயா... போனதடவை பார்த்ததை விட இளைத்தது போல இல்லை... ஐந்து கிலோ... முழுசா ஐந்து கிலோ குறைந்து விட்டது. இதிலிருந்து தெரியவில்லை... உன் அக்கா என்னை எப்படி கவனித்துக் கொள்கிறாள் என்று..."

"ஜெய்... அதைக் காதில் போட்டுக் கொள்ளாதே. குறைந்தது அவரது தொப்பைதான். டாக்டர் உடம்பு குறையணும் என்றதால் கஷ்டப்பட்டு உடற்பயிற்சி செய்ததில் குறைந்தது வெறும் தொப்பை மட்டும்தான்... அதுதான் எடை ஐந்து குறைவு... போதுமா? வினயா... இங்கே எதுவும் பேச முடியாது வா தனியாக பேசலாம்..." என்று அவளை அறையினுள் அழைத்துச் சென்றாள்...

அவள் போனதும் தன் வழக்கமான "ஆகா...கா" என்று பலத்த சிரிப்பு சிரித்தான் பாஸ்கர்.

"சியாமளா மாறவேயில்லை பாஸ்கர்" என்றான் ஜெயசந்திரன்.

"அய்யோ... சொல்லாதே ஜெய்... மாறிவிட்டாள் என்றாலும் தப்பு... மாறவேயில்லை என்றாலும் தப்பு கண்டுபிடிப்பாள். அவளிடத்தில் என்பாடு நாய்பாடு தான். போய் பார்... உன் மனைவி அவளிடம் என்ன பாடுபடுகிறாளோ... சின்ன..." மனைவி வருவது கண்டு வாய் மூடினாள்.



"என்ன... என்னைப் பற்றிதானே..." என்று வந்தவள் பையிலிருந்த பூவையும், இனிப்பையும் எடுத்துக் கொண்டு வினயாவிடம் சென்றாள்...

அதை வாங்கிக் கொண்டு "சாப்பிடலாம் வாருங்கள்" என்று பொதுவாய் அழைத்தாள் வினயா.

"வினயா... இங்கே வா... இவர் சியாமளாவின் கணவர். எங்கள் வீட்டின் ஒரே மாப்பிள்ளை. அதனால் ராஜ மரியாதை" அறிமுகப்படுத்தினான் ஜெயசந்திரன்.

"அப்படியெல்லாம் இல்லைம்மா... பார்த்தாய் தானே.. உன் நாத்தனாரிடம் நான் படுகின்ற மரியாதை...."

"என்னங்க... உங்களைத்தானே..." அறையினுள் இருந்து கூவிய மனைவிக்கு "இதோ... வந்துவிட்டேன்" என்று சொல்லிவிட்டு வினயாவை பார்த்து கண் சிமிட்டினான்...

"இது தான் நான் சொன்னது" என்று சென்றார்... அவர்களிடையே இருந்த விளையாட்டு... வேடிக்கைப் பேச்சு உண்மையில் இருவரிடையே நிலவியிருந்த அந்நியோன்னியத்தை தான் காட்டியது.

சியாமளா வளவளவென்று பேச்சு தவிர உள்ளம் வெள்ளையென்று தெரிந்தது. அதுமட்டுமல்ல ஜெயசந்திரன் மீது கொள்ளைப் பிரியம் என்றும் தெரிந்தது ஏன் ஜெயசந்திரனும் தான். உடன் பிறக்காத போதிலும் சியாமளாவிடம் தனி வாஞ்சைத் தெரிந்தது.

குழந்தைகள் அத்தையிடம் அட்டையாய் ஒட்டிக் கொண்டனர்.

அனைவரும் சாப்பிட்டு முடிக்கும் போது மணி பத்தரை.

"புதிதாய் திருமணம் ஆனவர்கள்... பாவம். எங்களுக்காக விழித்திருக்க வேண்டாம். போய் படுத்துக் கொள்ளுங்கள்" சியாமளா சொன்னாள்...

"ஆமாம். நாம் இப்போது வந்திருக்கவே கூடாது.. வந்தாயிற்று. இவர்களுக்கு மத்தியில் கரடிகளாய் நம் குட்டிக்கரடிகளையும் அழைத்து வந்துவிட்டோம்.... பாவம் இவர்கள் உள்ளுக்குள் தவித்துக் கொண்டிருப்பார்கள். இவர்கள் ஏன் வந்தார்கள்" என்று பாஸ்கர் பாதி வேடிக்கையாக, பாதி உண்மையாக சொல்லவும் வினயா அதை மறுத்தாள்.

"அதெல்லாம் இல்லை... நீங்கள் வந்தது எங்களுக்கு ரொம்ப சந்தோஷம் தான்" - அடிமனதில் இருந்து வந்த சத்தியமான வார்த்தைகள்.

"ஆமாம் வராதவர்கள் வந்திருக்கிறீர்கள்... எங்களுக்கு அதில் ரொம்ப மகிழ்ச்சியாக்கும்" ஒத்து ஊதினான் அவன்.

அதற்கு பிறகு ஊர் - உலகக் கதைகளைப் பேசிவிட்டு படுக்கப் போனபோது மணி ஒன்று. குழந்தைகளை அக்கம் பக்கமாய் போட்டுக் கொண்டு தானும் ஒரு குழந்தை போல சுருண்டு படுத்திருந்தாள் வினயா.

சியாமளா வற்புறுத்தியும் குழந்தைகள் அத்தையை விட்டு வர முரண்டு பிடித்து மறுத்தனர்.

சியாமளா முகம் சுளித்தாள். "ஜெய்... நிச்சயமாக நீயும் வினயாவும் எங்களை உள்ளுக்குள் சபிக்கத்தான் போகிறீர்கள். இந்தப் பிசாசுக் குட்டிகளை தூங்கியவுடன் எடுத்து வந்துவிடுகிறேன்" என்று உறுதி தந்தாள்.

"பரவாயில்லை அண்ணி. இன்றைக்கு ஒரு நாள் என்னிடம் படுத்துக் கொள்ளட்டும். பாவம் சின்னக் குழந்தைகள்" என்று சொன்னாள் வினயா.



"கொஞ்சமாவது முகச்சுளிப்பு எரிச்சல் எதையாவது காட்டுகிறானா பாருங்கள் ஜெயசந்திரன் கொடுத்து வைத்தவன்... நல்ல மனைவியாய் அமைந்திருக்கிறாள்" என்று தம்பி மனைவிக்கு சான்றிதழ் தந்தாள் சியாமளா.

"ஆமாம்... ஜெயசந்திரன் கொடுத்து வைத்தவன் தான் ம்ம்" பெருமூச்சு விட்டான் பாஸ்கர்...

"குத்துவேன்... நான் உங்களுக்கு நல்ல மனைவியில்லையா?" என்று கணவனிடம் சண்டைக்கு போனாள்.

அறையினுள் வினயா குழந்தைகளை இன்னும் இறுக்கமாய் அணைத்துக் கொண்டாள்... "நன்றிடா... குட்டிகளா" என்று மனதினுள் நினைத்துக் கொண்டு முத்தமிட்டாள்.

## 12

**மீ**ண்டும் தனிமை... சியாமளாவின் குடும்பம் புறப்பட்டுப் போனதும் இன்னும் வாட்டியது.

நான்கு நாட்கள்... வீடு கலகலப்பாய் இருந்தது. குழந்தைகளின் கொட்டம்... பெரியவர்களிடையே பேச்சு... நேரம் ஓடியதே தெரியாது.

பகல் எல்லாம் வெளியே சுற்றிட்டு இரவு நேரம் கலந்து பேசி பொழுது கழித்தனர்.

குழந்தைகள் அத்தையை விட்டு அகலவில்லை.... இல்லை இல்லை... வினயா குழந்தைகளை விட்டு நகரவில்லை. நான்கு நாட்களும் குழந்தைகளுடன் விளையாடி... உண்டு.. அவர்களுடன் திரிந்து... அவர்களுடன் உறங்கவும் செய்தாள். அவளும் ஒரு குழந்தைதான் என்று எண்ணிக் கொண்டனர் சியாமளாவும் பாஸ்கரும்.

சியாமளா புறப்படும் போது உண்மையில் வருத்தத்துடன் விடை கொடுத்தவள் வினயா. தான் குழந்தைகளை லட்சுமண ரேகையாய் வைத்துக் கொண்டு நான்கு இரவுகளைத் தள்ளிவிட்டாயிற்று. இனி? அவனும் பொறுத்துப் போவானா? பொறுமையிழந்தால்...

அன்றைக்கு நீலசேகரன் வந்தது மனதிற்கு இதமாய் இருந்தது. அப்பாவைப் பார்த்து நீண்ட நாட்கள் ஆகி விட்டது போல இருந்தது. அவளுக்கு பிடித்த முல்லைப் பூவையும் ரசகுல்லாவையும் கொண்டுவந்து தந்தார்.

''ஏம்மா... அன்றைக்கு வந்திருந்தாயாம். முதலில் போன் பண்ணியிருந்தால் நான் வீட்டுக்கு வந்திருப்பேன் இல்லையா. மனசு கேட்காமல் லீவு போட்டு விட்டு வந்தேன்... உடனே வந்து பார்க்கலாம் என்றால் ஆபீஸ் வேலை... கல்யாணத்திற்கு ஓடியாடியதின் வேலைகள் அடுக்காய் தேங்கியிருந்தன இல்லாவிட்டால் வந்திருப்பேன். நீ இங்கே சந்தோஷமாய் இருக்கிறாயாம்மா?'' மனம் முழுக்க வாஞ்சையுடன் கேட்டார் தந்தை.

அவர் அருகில் அமர்ந்துகொண்டாள். ''என் சந்தோஷத்திற்கு எந்தக் குறையும் இல்லைப்பா. அம்மா எப்படி இருக்கிறார்கள் அதை முதலில் சொல்லுங்கள். அம்மாவுக்கு ஆப்ரேஷன் எப்போது...? நானும் அருகில் இருக்கவேண்டும் அப்பா.''

''இன்னும் பத்துநாட்களில் உன்னை அழைத்துப் போகவேண்டும் என்கிறாள் அம்மா. சீக்கிரம் உன்னை பார்க்கலாம்னு சந்தோஷப்படுகிறாள்.''

கேட்டதும் மனம் குதித்தது... தாய் வீட்டில் இருக்கப் போகிறோம்... ஆமாம்... எப்படி? எதுக்கு? கேட்டாள்.



''ஆடிமாதம் அம்மா... கணவரைப் பிரிந்து ஒரு மாதம் இருக்க வேண்டும் இருப்பாயா?''

உள்ளம் பச்சைக் குதிரையானது. ஒரு மாதம்... ஏய் வினயா... அடிச்சது யோகம். என்ன வழி... என்ன செய்யலாம் என்று தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டியதில்லை... வாழ்க அந்த ஆடிமாதம்!

அவளது மௌனத்தை தவறாய் புரிந்து கொண்டார் தந்தை.

''என்னம்மா யோசிக்கிறாய்... எப்படியப்பா ஒரு மாதம் பிரிந்திருப்பது என்றா... என்ன செய்வது. பெரியோர்கள் செய்து வைத்திருக்கின்ற சம்பிரதாயம். எங்களுக்கும், திருமணம் ஆன புதுசு... உங்களைப் பிரிக்க வேண்டுமே என்று தான் இருக்கு.... இன்னும் உன் கணவர் என்ன சொல்கிறாரோ பார்க்கணும்.''

''சம்பிரதாயத்தை விட்டு விட முடியாதேப்பா... அவரும் அனுசரித்துப் போவார். ஏம்ப்பா... ஒரு மாதம் அங்கே இருக்கப் போகிறேன் தானே. அம்மாவின் ஆப்ரேஷனை அப்போதே முடித்துவிட முடியுமா?'' ஆவலாய் கேட்டாள்.

''டாக்டரிடம் கேட்கணும் வினயா... அம்மா பயப்படுகிறாள்.... சரிம்மா... புறப்படட்டுமா? அம்மா சாப்பிடாமல் காத்திருப்பாள்'' என்று எழுந்தார்.

''சாப்பிட்டுவிட்டு போகலாமேப்பா... ஏதும் சாப்பிடாமல்.''

''வேண்டாம்மா.. இன்னொரு நாள் நானும் அம்மாவும் சேர்ந்து வந்து சாப்பிடுகிறோம் சரியா?''

''காபியாவது தரட்டுமா?''

''அம்மாடி... சாப்பிடும் வேளைடா... மாப்பிள்ளையை விசாரித்தேன்னு சொல்லம்மா.''

விருந்தினர் மாதிரி வந்து செல்லும் அவரைப்பார்க்க நெஞ்சில் அடைத்தது. இனி அவர் வீடு... இது தன் வீடு... வேறு வேறாகிவிட்டது... இதென்ன வாழ்க்கை.

தனிமை ரொம்பவும் கொடுமை செய்தது... சோர்ந் திருந்த மனதை தெளியச் செய்ய வெளியே புறப்பட் டாள். வீட்டிற்கு தேவையான... தனக்கு தேவையான சாமான்களை வாங்கி வரலாமே என்று புறப்பட்டாள்.

ஜெயசந்திரன் அவளிடமும் பணம் தந்திருந்தான். எது தேவையோ வாங்கிக்கொள் என்று... அதை செலவு செய்ய மனம் தயங்கி நின்றது. உரிமை கொண்டாட முடியாமல்... உள்ளுக்குள் ஒரு முள்ளாய் உறுத்தியது.

பெயருக்குத்தான் மனைவி. தான் அவன் பணத்தைத் தொடலாமா... என்ற உறுத்தல்தான். தன்னிடம் இருந்த வேறுபணத்தை எடுத்துக் கொண்டு சென்றாள்.

கடைத்தெருவை சுற்றிவிட்டு வீட்டுக்குவரும் போது மணி நான்கு தாண்டி முப்பது நிமிடங்கள்.

காய்கறிகளை எடுத்து அடுக்கி வைத்தாள். மனதில் ஒரு பளிச்... ஏன் இன்றைக்கு ஒரு மாறுதலாய் தான் சமைக்கக் கூடாது?

காசிநாதரிடம் ''இன்னிக்கு உங்களுக்கு ஓய்வு. நான் சமைக்கப் போகிறேன்'' என்றாள்.

அவர் சிரித்தார். ''எதற்கம்மா... நான் அதற்குதானே இருப்பது..''

''எனக்கும் உட்கார்ந்து உட்கார்ந்து ஒரே அலுப்பு... போர் அடிக்கின்றது. எனக்குத் தெரிந்த சமையலை



செய்து பரிமாறுகிறனே... நீங்கள் ஜாலியாக எங்கே யாவது ஒரு ரவுண்ட் சென்று வரலாம் இல்லையா?''

அரைமனதாய் ஒப்புக் கொண்டார் காசிநாதர். வாங்கி வந்த காய்கறிகளை நறுக்கி தந்துவிட்டு சென்றால் தான் கொஞ்சம் திருப்தி என்று அந்த வேலையில் ஈடுபட்டார். உருண்டைக் கத்தரிக்காயை பார்த்துவிட்டு ''இது எதுக்கும்மா?'' என்று கேட்டார்.

''ஒரு மாதிரி சட்னி செய்ய... ருசியாக இருக்கும்.''

''அய்யோ.. வேண்டாம்மா... அவருக்கு அலர்ஜி... சிறு குழந்தையிலிருந்தே கத்தரிக்காய் ஆகாது என்றார். நான் வேலைக்கு வந்த அன்றே தெரிந்து கொண்டது.''

''அலர்ஜி என்றால்?''

''உடம்பில் சிவப்பாய் தடிப்பு வந்துவிடுமாம். எரிச்சல் வேறு இருக்குமாம். ஊசிப்போட்டால் தான் குறையும்.''

''ஓ... அப்படியா விஷயம்... அப்போ... செய்து விட்டால் போச்சு'' மனதினுள் முடிவாயிற்று.

அதேசமயம் இது பாவம்.. கூடாது.. கணவனை இந்த விதமாய் பழிவாங்குதல் தவறு என்று மனசாட்சி ஓலமிட்டது.

கத்தரிக்காயை ஒதுக்கி வைத்தாள்.

போன் ஒலித்தது. ஜெயசந்திரன்தான்.

''வினயா.. உனக்கு என்ன இனிப்பு பிடிக்கும்... சொல் வாங்கி வருகிறேன்.''

''எதுக்கு இப்போது? உங்கள் பிறந்த நாளா?''

''ம்கூம்... உண்மையில் இன்றைக்கு நம் முதலிரவு என்பதுதான்... இன்றைக்கு நம்மை யார் பிரிக்க முடியும் என்று பார்த்து விடலாம்...''

அவனது குரலில் தெரிந்த உறுதியை கேட்டு மனம் படபடத்தது... இன்னும் ஜெயசந்திரன் வலுக்கட்டாயமாய் தன்னை மணந்தான் என்பது கணவனாய் ஏற்றுக் கொள்ள மறுத்தது உள்ளம்.

''ஏய் வினயா... பகல் கனவா... பேச்சையே காணோம்.''

''இல்லை... இனிப்பு என்றீர்கள் எதைச் சொல்வது என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்... எதுவும் தள்ளுபடி இல்லை... இருந்தும் கல்கத்தா ஸ்வீட் என்றால்...''

''குட்... வாங்கி வருகிறேன்'' போனை வைத்துவிட்டான்.

ஓ! காதலாய் வாங்கி வருகிறானாக்கும்... யோசித்தவாறே ஒதுக்கிவைத்த கத்தரிக்காயை கையில் எடுத்துக் கொண்டாள்.

'காதலா... கத்தரிக்காயா?' இப்போது பொருத்தமான வார்த்தைகள் தான்.

சமையல் வேலை முடிந்துவிட்டது. அழகாய் சாப்பாட்டு மேஜையில் வரிசைப்படுத்தியாகிவிட்டது.

அடுத்து... வீட்டை ஒழுங்கு படுத்திவிட்டு முக்கியமாக படுக்கை அறையை அழகுப் படுத்தினாள். புதிய விரிப்பு விரித்தாள். தலையணை உறையையும் மாற்றினாள்.

மல்லிகையைத் தூவினாள்.

மனதினுள் 'மல்லிகைப் பூவின் வாசனையை ரசிக்கும் நிலையில் இருப்பீர்களா ஜெய்...' எண்ணிக்கொண்டாள். ஆயிற்று... தன்னையும் அழகுப் பதுமையாய் அழகுப் படுத்திக் கொண்டு கணவனுக்காக காத்திருந்தாள்.



அவனுக்காக உருகுவது போல இருக்க வேண்டும்... அவன் விருப்பத்திற்காக காத்திருப்பது போல தெரிய வேண்டும். ஆனால் அவன் ஆசை நிறைவேற விடக் கூடாது... இன்னும் சில நாட்கள் சமாளித்துவிட்டால் போதும் அப்புறம் ஆடிமாதம் ஆடி வரும்.

அவன் வந்தான். பழங்களும் இனிப்புகளும் வாங்கி வந்திருந்தான்... மலர்ந்த முகத்துடன் பெற்றுக் கொண்டாள்.

வழக்கம் போல சேர்ந்தே சாப்பிட்டார்கள்.

''இன்று நானே சமைத்தது ஜெய்.. நன்றாக இருக்கிறதா? இதை இன்னும் கொஞ்சம் போட்டுக் கொள்ளுங்கள்'' வலிய உபசரித்து பரிமாறினாள். மனைவி கை சமையல் ஆயிற்றே ஆவலாய் உண்டான்.

''இனி சாப்பிட்டால் அவ்வளவுதான். வினயா.. உன் சமையல் பிரமாதம்.'' அவனது பாராட்டை பெருமையாய் ஏற்றுக் கொண்டாள்.

''எல்லாம் அப்படியே இருக்கட்டும். விடு வினயா. ஆமாம் காசிநாதன் எங்கே. உன்னை சமைக்க விட்டு விட்டு எங்கு போனார்?'' என்று கேட்டான்.

''நான்தான் அவரை அனுப்பினேன். என் கையால் உங்களுக்கு சமைத்து பரிமாறலாமே என்று தான்'' புன்னகையுடன் சொன்ன மனைவியை வியப்பும் திகைப்புமாய் பார்த்தான். உண்மையில் அவள் பழையதை துடைத்துப் போட்டு விட்டாளா? உண்மையில் அவளுக்கும் தன் மீது அன்பு துளிர்த்து விட்டதா? காதலாய் மாறிவிட்டதா?

அவளது கையை ஆசையுடன் பற்றினான். ''வினாயா'' குரலில் தாபம் தெரிய அழைத்தான்.

மெல்ல கையை விடுவித்துக் கொண்டு ''இதோ... எல்லாவற்றையும் உள்ளே வைத்துவிட்டு வந்து விடுகிறேன்'' சொல்லி விட்டு விரைந்தாள்.

அறையினுள் நுழைந்து விளக்கைப் போட்டவன் படுக்கை அலங்கரிப்பு கண்டு மெய் மறந்து போனான். கொஞ்ச நாட்களாய் அவனுக்கு சந்தேகம் இருந்தது. வேண்டும் என்றே தவிர்க்கிறாளோ... இன்று அடியோடு நீங்கியது... அவள் உண்மையில் மாறியிருக்கிறாள்... இல்லாவிட்டால் தன்னை அலங்கரித்துக் கொண்டு காத்திருப்பாளா? ஆசையாய் சமைத்து தனக்கு பரிமாறியிருப்பாளா? இல்லை... படுக்கையில் மல்லிகையை தூவியிருப்பாளா?

வினயா அவனுக்குத் தெரியாமல் போனில் ''செல்ஃப் டயலிங்'' செய்துவிட்டுக் காத்திருந்தாள்.

''ரிங்... ரிங்'' ரிசீவரை எடுத்தாள்.

''அலோ... அப்பா... எப்படிப்பா இருக்கிறீர்கள்... அம்மா... பரவாயில்லையா... ஆமாம்ப்பா... அண்ணாவை கேட்டேன்னு சொல்லுங்கப்பா... ஓ... கண்டிப்பா... வர்ரேன். மாப்பிள்ளை தானே... சொல்றேன்'' ஜெயசந்திரன் வெளிவருவது தெரிய... ''சரி... டாடி வச்சுடட்டுமா?'' என்று வைத்தாள்... எப்படி இன்னும் நேரத்தை இழுப்பது... கவலையுடன் கணவனைப் பார்த்தாள்.

அப்போது தான் ஆரம்பமானது... நமைச்சல்.. தடிப்பு... சிவப்புக்கோடுகளாய்.. சுர் என்று எரிந்தது.

''வினயா... சமையலில் என்ன சேர்த்தாய்'' திகைப்பாய் கேட்டான்.

''ஏன்.. கத்தரிக்காய்... வெண்டைக்காய்... அப்புறம்...'' அப்பாவி போல முகம் வைத்துக் கொண்டு சொன்னாள்.



''போதும்... கத்தரிக்காயை ஏன் சமைத்தாய்... காசிநாதரிடம் கேட்டுக் கொள்ளவில்லையா... கத்தரிக்காய் எனக்கு அலர்ஜி.''

''அய்யோ.. தெரியாமல் போனதே ஜெய்... இப்போது என்ன செய்வது ஜெய்'' கையை உதறினாள்.

''டாக்டரிடம் போய் 'அவில்' மருந்து ஊசிபோட்டுக் கொள்ள வேண்டும்'' என்று புறப்பட்டான். அதற்குள் பல இடங்களில் தடிப்புகள்.

அவன் சென்ற பின்பு வாய்விட்டு சிரிக்க வேண்டும் என்று நினைத்தாலும் சிரிப்பு வரவில்லை... மாறாய் கண்களில் கண்ணீர் தான் வந்தது. மனம் கரைந்து போனது.

நீள நீளமாய் சிவந்த தடிப்புகள்.. கண்களை மூடாமல் அவனுக்காக காத்திருந்தாள்.

அவன் வரும்போது மணி பதினொன்று. காசிநாதர் தூங்கிவிட்டார். அவரிடம் எதுவும் சொல்லாமல் மறைத்துவிட்டாள்.

வரும்போதே தூக்கத்தில்தளர்ந்து போயிருந்தான். கண்களில் உறக்கம் தெரிந்தது... தடிப்புகள் கொஞ்சம் மறைந்து போயிருந்தன. சிவப்பு திட்டுகளாய் தெரிந்தன. படுக்கையில் படுத்தான் ஜெயசந்திரன்.

''என்னவோ தெரியவில்லை வினயா நமக்கு இன்னும் நல்ல நேரம் அமையவில்லை'' என்றவன் சிறிது நேரத்தில் உறங்கிப்போனான்.

உறக்கத்தில் சிறுப்பிள்ளையாய் படுத்திருக்கும் அவனைப் பார்க்க இரக்கம் சுரந்தது... இதயம் வலியெடுத்தது. இனி எந்த உபாயமும் வேண்டாம். என்

தலையில் இவர் தான் கணவர் என்றால் இவர் மீது கோபம் கொண்டு என்ன பிரயோசனம். எந்த விதத்தில் இவர் குறைந்து போனார்... அழகு... படிப்பு... பணம்... பண்பு அனைத்திலும் சிறப்பாய் தானே இருக்கிறார்... தன்னை குறிவைத்து மணந்தவன் என்பது ஒன்றுதான் மனதை உறுத்தும் விஷயம்... தவிர எல்லாப் பெண்களும் பெருமையுடன் தன்னைப் பார்க்கும் அளவு கம்பீரமாய்... வசீகரமாய் இருப்பவராயிற்றே... வேண்டாம்... இந்த பாசாங்கு நடிப்பு இனி வேண்டாம். உண்மையாய் அன்பு செலுத்த வேண்டும்...

மின் விசிறியை போட்டுவிட்டு, அவனுக்கு போர்த்தி விட்டு அவன் அருகிலேயே படுத்துக் கொண்டாள்...

## 13

அடுத்த நாள்... பொழுதும் நன்றாய் விடிந்தது. அவனது அலர்ஜியும் போய் விட்டிருந்தது... எதுவும் நடக்காதது போல புறப்பட்டுக் கொண்டிருந்தான்.

புறப்படும்போது "சாரிம்மா... நேற்று இரவு உன்னிடம் சரியாக பேசவும் முடியாமல் அலர்ஜி வந்து தொல்லைப்படுத்திவிட்டது. மன்னிப்பாயா?" என்று வேண்டினான்.

உண்மையில் அவனிடம் மன்னிப்பு பெறவேண்டியது தான் தான். மனதினுள் குமைந்தாள்...

அந்த மௌனத்தை வேறு விதமாய் எடுத்துக் கொண்டான்.

"நேற்று நடந்ததை ஈடு செய்ய இன்றைக்கு மாலை இரண்டு பேரும் ஜாலியாய் வெளியே போய் சினிமா...



ஓட்டலில் சாப்பாடு முடித்துக் கொண்டு வரலாம். வந்தவுடன்..."

போன் ஒலித்தது. பேசியது அவனுடைய தாயார். தனக்கு வேலைகள் அதிகம் இருந்ததால் வரமுடியாமல் போனது. இன்னும் தனக்கு வேலை நிறைய காத்திருப்பதால் அவற்றை முடித்துக் கொண்டு புறப்படுவதாய் சொன்னான்.

"வினயா... இரண்டு நாளில் புறப்பட வேண்டும் என்று நானே நினைத்திருந்தேன். அம்மா உடனே உன்னைப் பார்க்க ஆசைப்படுகிறார்... தயாராய் இரு. வேலைகளை முடித்துக் கொண்டு வந்துவிடுகிறேன்... வரட்டுமா?"

அவளது கன்னத்தை லேசாய் தட்டிவிட்டுச் சென்றான். அவன் தொட்ட இடம் குறுகுறுத்தது... கன்னத்தை தடவியவாறே அவன் செல்வதைப் பார்த்துக் கொண்டு நின்றாள். கன்னத்தை தொட்டதற்கே இந்தக் கிறக்கமா? அவன் அன்புடன் அணைத்து... முகத்துடன் முகம் சேர்த்து... நினைப்பிலேயே உடம்பெல்லாம் அதிர்ந்தது. மின்சாரம் பாய்ந்து ஓடியது.

ஏதோ ஒரு பரவசத்துடன் பயணத்திற்கு ஆயத்தம் செய்ய ஆரம்பித்தாள்.

அவனது உடைகளையும், தன்னுடையதையும் பெட்டியில் எடுத்து வைத்துக் கொண்டிருக்கும் போது வாசல்கதவு தட்டப்பட்டது.

காசிநாதர் போய் கதவைத் திறந்தார்.

எட்டிப்பார்த்த வினயாவுக்கு ஆச்சர்யம்...

"ப்ரியாவா... அட மழை கொட்டத்தான் போகிறது..."

"இந்தப் பக்கமாய் வந்தேன். உன் நினைவு வந்தது. வந்துவிட்டேன்... எங்கே உன் கணவர்... இல்லையா?"

ப்ரியா.. பிரசாந்தின் தங்கை.

ஏறக்குறைய ஒரே வயது... அதனால் நெருங்கிய தோழிகள்.

தனக்கு அண்ணியாய் வரவேண்டியவள் இப்போது யாரோ ஒருவனுக்கு மனைவி என்பதை நினைத்துப் பார்க்க அவளால் முடியவில்லை.

பிரசாந்த் எப்படி இருக்கிறான் என்று விசாரித்தாள் வினயா.

''அவனுக்கென்ன... குஷாலாய் புதுமனைவியுடன் அமெரிக்கா போகிறான்.... கார்... பெரிய்ய வீடு எல்லாம் மாமனார் உபயம்...''

தன் கணவன் என்று ஒரு காலத்தில் நினைக்கப் பட்டவன். இப்போது இன்னொருத்திக்கு மணாளன்... வாழ்க்கை என்பது விசித்திரம்... விதியின் விளையாட்டு ஒரு வினோதம்.

''போகட்டும்... நீ எப்படி இருக்கிறாய் வினு... நீதான் என் அண்ணி என்று நினைத்து பழக்கப்பட்டு விட்டேனா... இப்போது அது இல்லை என்ற உண்மையை ஜீரணிக்க முடியவேயில்லை'' ப்ரியா பொருமினாள்.

''பிரசாந்த் திடீர் என்று 'பல்டி' அடிப்பார் என்று யாருக்குத் தெரியும் ப்ரியா... உண்மையில் என்னைவிட என் அப்பா அம்மாவுக்குத்தான் பலமான அடி... நொந்து போனார்கள் தெரியுமா?'' வினயா வேதனையுடன் சொன்னாள்.

''உண்மைதான் வினு. அதுவும் அத்தையின் நிலையில் அது பரிதாபம் தான். இந்த மாப்பிள்ளை கிடைத்ததில் சந்தோஷம் தானே.''



''ம்ம்... திருமணம் இனி ஆகாது என்று நினைத்து மறுகிய போது ஜெயசந்திரன் முன் வந்து கேட்டது தான் அவர்களுக்கு ஆறுதலாய் இருந்தது... திருமணம் ஆனால் போதும்... மாப்பிள்ளை நல்லவர் என்ற நினைப்பில் அவர்கள் வீட்டினர் திருமணத்திற்கு வரமாட்டார்கள் என்ற விசயத்தை சாதாரணமாய் எடுத்துக் கொண்டார் அப்பா... இல்லாவிட்டால் அப்பா சாமானியமாய் ஒப்புக்கொள்வாரா?''

''ஜெயசந்திரன் எதிர்பார்த்ததும் அதுதானே. ஆரம்பித்து வைத்ததும் அவரே... முடித்து வைத்ததும் அவரே... ம்ம்.''

''என்ன உளறுகிறாய்?''

''விசயம் உனக்குத் தெரியாதா என்ன? ஜெயசந்திரன் சொல்லியிருக்க வேண்டுமே... திருமணத்திற்கு பத்து நாட்கள் முன்பு உன் ஜெயசந்திரன் என் அண்ணனை சந்தித்து, உயர்ந்த வேலை.. இரண்டு லட்ச ரொக்கப்பணம்... பெரிய வீடு... கார் வசதி இத்தனையும் கிடைப்பதாய் இருந்தால் வினயாவை விட்டுவிட வேண்டும் என்ற நிபந்தனையிட்டார். என் அண்ணன் முதலில் மறுத்தான்... ஆனால் வசதிகள் இருந்தால் எப்படி சொகுசாய் வாழலாம் என்று ஆசையூட்ட கடைசியில் ஒத்துக் கொண்டுவிட்டான். அது மட்டுமா... புது பாஸின் பெண்ணையும் மணந்து கொண்டால் வெளிநாட்டுக்கும் போகும் பொன்னான சந்தர்ப்பமும் கிடைக்கும் என்று சொன்னால் கசக்குமா என்ன? பணம்... பெரிய பதவி... கார்... பங்களா என்ற சொகுசு வாழ்க்கை இத்தனையும் சேர்ந்து வந்தால் யார்தான் விழ மாட்டார்கள். உன்னையடைய ஒரே தடை என் அண்ணன். குதிரைக்கு

'காரட்' காட்டுவது போல இத்தனை காரட்டுகளை காட்டி இங்கிருந்து ஓட வைத்தாகிவிட்டது... உன்னையும் அடைந்தாகி விட்டது...''

வினயாவுக்கு அதிர்ச்சி... பிரசாந்த் மீது தவறில்லையா... இத்தனைக்கும் காரணம் என் கணவன் தானா? அய்யோ... எதுவும் தெரியாத அப்பாவியாய் இருந்துவிட்டோமே. செய்வதையும் செய்துவிட்டு... மூச்சே விடாமல் இருக்கிறாரே... என்ன கல்மனம் அவருக்கு... பின் விளைவுகள் என்ன வென்று நினைத்துப் பார்க்காமல் தன்னுடைய எண்ணம் நிறைவேறினால் போதும் என்று நினைத்து... என்ன சுயநல மனசு.

''ஏய் வினையா... சாரிடி... மனம் தாங்காமல் பேசி விட்டேன்... உனக்கு இது தெரியாது இல்லையா... மன்னித்துவிடு வினு..'' அவளுடைய பேயறைந்த முகத்தைப் பார்த்துவிட்டு தவித்துப் போய் சொன்னாள் ப்ரியா...

அதற்கு பிறகு ப்ரியா என்ன பேசினாள்... எப்போது போனாள் என்று புரிந்து கொள்ள முடியாத மந்த நிலையில் இருந்தாள். மனம் எரிமலையாய் கொதித்துக் கொண்டிருந்தது. பிரசாந்த் மனம் மாறிச் சென்றான் என்பது கூட மனதில் வலிக்கவில்லை. சதுரங்க காய்களை நகர்த்துவது போல ஒவ்வொன்றாய் திட்டமிட்டு செய்து அதில் வெற்றியும் பெற்றானே ஜெயசந்திரன்... பாதையில் இருக்கும் முள்ளை எடுத்து எறிந்துவிட்டு இலக்கை அடைந்து வெற்றிப்பரிசு பெற்றது போல... இடைஞ்சலாய் தெரிந்த பிரசாந்தை அகற்றி தன்னை அடைந்தது... இல்லை... தான் நினைத்ததை சாதித்தது. அதை நினைக்கும் போது உள்ளமே ரணகளமாகியது... பாவம் - பலியாடு ஆகிப் போன பிரசாந்த், சுமைதாங்கியாய் எல்லோர் கண்களில் குற்றத்தை சுமந்து நின்றான்...



இதில் அடிபட்டது தன்னுடைய மானம்... தன்மனம் வேதனைப்பட்டது பெற்றவர்களின் உள்ளம். காற்றில் பறந்தது குடும்ப மானம்... இதையெல்லாம் நினைத்தும் பார்க்காமல் செய்துவிட்டானே.

எத்தனை பேரை அழைத்தது... அத்தனை பேருக்கும் நடந்ததை மறைத்து ஏதோ சொல்லி சமாளித்து... வெளியே முகம் காட்டவும் தயங்கி... அந்த நினைவே விஷமாய் கசந்தது.

திருமணம நின்று போன காரணத்தால் தாய்க்கு நெஞ்சுவலி கண்டு துடித்ததை இன்னும் அவளால் மறந்து விட முடியவில்லை.

பெண்பார்க்க வந்தவர்களின் சந்தேகப் பார்வையில் பெற்றவள் உடல் குறுகி நின்றதையும் மனதில் இருந்து அழிக்க முடியவில்லை...

அத்தனையும் அனிச்சையாய் நடந்தது என்று நினைத்து சமாதானம் அடைந்தது தப்பு... அதன் பின்னணியில் இருந்தவன் ஜெயசந்திரன்...

நடந்த நிகழ்ச்சிகளுக்கெல்லாம் சூத்ரதாரி... எல்லாம் போகட்டும்... செய்ததையெல்லாம் மூடி மறைத்து நல்லவனாய் நடித்தானே... உண்மையை ஒத்துக்கொண்டிருந்தாலாவது மன்னித்திருக்கலாம்...

மன்னிப்பு என்பது வேறு விஷயம்... குறைந்த பட்சம் மறந்திருக்க முயற்சி செய்திருக்கலாம்.

ஆனால் அவன்... அத்தனையும் செய்துவிட்டு... ஏதும் செய்யாத அப்பாவி நடிப்பு... இவனுக்காக மனம் இளகியும் போனது. அவனது அன்பை எண்ணி ஏங்கியது என்பது தான் வெட்கக்கேடு.

உள்ளே கோபம் கனன்று அவளையும் எரித்தது. ஜெயசந்திரனைக் கண்டதும் இன்னும் கொழுந்து விட்டு எரிந்தது. காலையில் இன்முகத்துடன் வழியனுப்பிய வளுக்கு இப்போது முகம் சிவந்திருப்பது ஏன்? குழம்பினான் அவன்.

இருந்தும் ஏதும் கண்டு கொள்ளாமல், "என்ன வினயா... தயாரா?" என்று கேட்டான்... "ஆயிற்று" என்று ஒற்றை சொல்மட்டும் சொல்லிவிட்டு நகர்ந்தாள்...

அவள் கோபத்தில் இருக்கிறாள் என்று மட்டும் தெரிந்தது. எதற்கு என்று புரியவில்லை...

அவளே சொல்லட்டும்... அதுவரை பொறுமை காப்போம் என்று நினைத்து குளியலறைக்குள் சென்றான்.

## 14

மலைப்பாம்பு போல நீண்டு செல்லும் அந்த சாலையில் கார் சீராய் ஓடிக் கொண்டிருந்தது. சாலையில் கண்வைத்து ஓட்டிக் கொண்டிருந்த ஜெயசந்திரன் அவ்வப்போது ஓரக் கண்பார்வையில் மனைவியை கவனித்தான். அவள் முகம் 'உர்' ரென்று இருந்தது. என்னதான் நடந்தது... ஊருக்கு செல்வதில் மனமில்லையா... இல்லையே போகலாம் என்றதும் சிரித்து தலையசைத்தாளே... தன் மீது ஏதாவது கோபமா?

மெல்ல பேச்சுக் கொடுத்துப் பார்த்தான். ஆமாம். இல்லை என்பதுடன் முற்றுப் புள்ளி.

"பெண்கள் மனதில் ரகசியம் நிற்காதுன்னு தருமர் சாபம் கொடுத்தது தெரியுமா வினயா?"

"ம்ம்..."



"அது உன்னிடம் பலிக்காமல் போய்விட்டது" மெலிதாய் சிரிப்புடன் கூறினான்.

புருவங்களை சுளித்து அவனைப் பார்த்தாள்.

"உன் மனதில் ஏதோ ஒளிந்து இருக்கிறது. வெளியே சொல்லாமல் உள்ளேயே அடைத்து வைத்திருக்கிறாய்... சரியா?"

"ஏன்.. என் மனதில் மட்டும் தானா... உங்கள் மனதில் எதுவும் கிடையாதா?"

அவன் வியப்புடன் பார்த்தான்.

"என்னிடமா.. என்ன அது சொல்லேன்."

"என் வாயால் வேறு அதைச் சொல்ல வேண்டுமா என்ன? மனதை தொட்டுக் கேளுங்கள். பதில் கிடைக்கும்" அவனைப் பார்க்காமலே பேசினாள்.

அவன் சிரித்தான் "இதென்ன வார்த்தை விளையாட்டு... நேருக்கு நேர் பேசாலமே... உன் மனதை குடைவது எதுவென்று சொல்... அதற்கு விளக்கம் சொல்வது என் கடமை."

"சரி வெளிப்படையாகவே பேசுகிறேன்... பிரசாந்தை அனுப்பிவைத்தது நீங்கள் தானே" இப்போது அவனை நேராய் பார்த்துக் கேட்டாள்.

துடைத்துவிட்டது போல சிரிப்பு அவன் முகத்திலிருந்து மறைந்தது.

"ஓ... அந்த விஷயமா?"

"அதே விஷயம்தான்... பதில் சொல்லுங்களேன்."

"ஆமாம்... நானே தான்."

சொல்லும் போது அவன் குரலில் வெட்கமோ... முகத்தில் அவமானமோ இல்லை.. அது இன்னும் அவள் கோபத்தைக் கிளறிவிட்டது.

''ஏன்... ஏன் அப்படிச் செய்தீர்கள்... எதற்காக ஒரு திருமணத்தை நிறுத்த வேண்டும்... உங்களோட பண பலத்தைக் காட்டவா?'' குமுறும் குரலில் கேட்டாள்.

சாலையோரமாய் காரை நிறுத்தியவன் அவள் புறமாய் திரும்பினான்.

''நீ தான் என் மனைவி...''

''போதும்... என் காது புளிக்கும் வரை சொல்லி விட்டீர்கள்... அதைக் கேட்டு என் காதுகளும் வீங்கி விட்டது... வேறு ஏதாவது இருந்தால் சொல்லுங்கள்.''

''வினயா, எனக்கு நீ வேண்டும்... என் மனைவி என்று உன்னைத் தவிர வேறு யாரையும் நினைத்துப் பார்க்க முடியவில்லை.. அதற்காக எதுவும் செய்யத் தயாராக இருந்தேன். அவ்வளவுதான்.''

''எவ்வளவு எளிதாய் சொல்லி விட்டீர்கள். இன்னொருவர் துன்பத்தியில் குளிர் காய்வதில் அப்படி என்ன சந்தோஷம்? இது மனிதத் தன்மையில்லையே. உங்கள் ஒருவருடைய விருப்பத்திற்கு எத்தனை பேரோட சந்தோஷத்தை கொன்று போட்டு விட்டீர்கள்... ச்சே...''

முகத்தைத் திருப்பிக் கொண்டாள். ஆத்திரத்தில் முகம் கன்னிப் போய், மூக்கு நுனி சிவந்து இதழ்கள் துடித்ததைக் கவனித்தான். கோபத்திலும் அவள் அழகு கூடுவது கண்டான்.

சில நிமிடங்கள் அவளை உற்றுப் பார்த்தவன் ''சொல் வினயா... பிரசாந்த்தை காதலித்தாயா? இன்னும் அவன் மீது காதலா...?''

திடுக்கிட்டு அவனைப் பார்த்தவள் எதிரே வெறித்தாள். மனம் படபடவென்று அடித்துக் கொண்டது. என்ன கேள்வி கேட்டான்?



தன் மனதை அவளே தேடிப் பார்த்தாள்.

உண்மையில் பிரசாந்த் மீது காதலா... கல்யாணம் நின்றதில் எரிச்சலும் கோபமும் தான் ஏற்பட்டது. அவன் இன்னொருத்தியை மணந்தான் என்று அறிந்தபோது ஏமாற்றமோ பொறாமையே தோன்றி இருக்க வேண்டும். இல்லையே... சிறு வயதில் இருந்து அவன் தான் எனக்கு தாலிகட்டப் போகிறவன் என்று பெரியவர்களால் பேசப்பட்டதால் ''கணவன்'' என்று வைத்து பார்த்தாள். தவிர காதல் என்று சொல்ல முடியாது... அவன் மீது காதல் என்றிருந்தால் அவன் யாரோ ஒருத்தியை மணந்தது கேட்டு உயிரை விடலாமா என்று தோன்றியிருக்க வேண்டும்... இல்லையே...

ஜெயசந்திரன் மீது மனம் கனிந்திருக்க சாத்தியம் இருந்திருக்காது... இருந்ததே...

''என் கேள்விக்கு என்ன பதில்?'' விடாமல் கேட்டான்.

''அது தேவையில்லாத கேள்வி.''

''இல்லை. தேவைபடுகின்ற கேள்விதான்... ஏனென்றால் அவன் மீது உன் காதல் என்றால் இப்போதே என் மன்னிப்பை ஏற்றுக் கொள். வெறும் முறைப்பையன் என்று மணக்க இருந்தாய் என்றால் நான் செய்ததில் எந்தவித தவறும் இல்லைதான்.''

''ஓகோ... என் தாய் பட்ட வேதனை... தந்தை பட்ட அவமானம்.. எல்லாம் மறைந்து போகுமா?''

மெல்லப் புன்னகை நெளிய ''உண்மையை சொல் வினயா... இப்போது என்னை மாப்பிள்ளை என்று நினைத்து உன்னைப் பெற்றவர்கள் மனநிறைவுடன்

இருக்கிறார்களே... மறுக்கிறாயா என்ன... அவர்களுடைய மெச்சும் மாப்பிள்ளையாய் இருக்கிறேன் அது போதாதா?''

எல்லாவற்றிற்கும் தயாராய் பதில்... விளக்கம்... உண்மை என்றாலும் பொறுக்காமல் கேட்டாள்...

''மொத்தத்தில் நான் உங்களால் விலைக்கு வாங்கப் பட்டவள் இல்லையா... எனக்காக இரண்டு லட்சம்... வீடு... கார்... எல்லாமே கொடுத்து என்னை வாங்கி இருக்கிறீர்கள் இல்லையா?''

அவன் தாடை இறுகியது...

''ஏன் இப்படி நினைக்கலாமே... உனக்காக இதையெல்லாமே துச்சம் என்று விசியெறிந்து உன்னைப் பெற்றுக் கொண்டேன் என்று... அதுதான் உண்மையும்'' என்று சொன்னான்.

அப்படியும் சமாதானம் பொறாமல் ''பின் ஏன் என்னிடம் மறைக்க வேண்டும்... உண்மையைச் சொல்லி இருக்கலாமே...'' என்று கேட்டாள்.

''அது அவசியம் என்று எனக்குத் தோன்றவில்லை அவ்வளவுதான்.'' இனி பேசுவதற்கு எதுவும் இல்லை என்பதுபோல திரும்பி காரை இயக்கினான்.

அரைமணி நேரம் மௌனத்தில் கரைந்தது. அதற்கு பின் ''பார் வினயா... நடந்து போனது நடந்ததுதான். இனி இருப்பது நம் எதிர்காலம். அதை சந்தோஷமாய் நினைத்துப் பார்க்க வேண்டும். என் தாய் முன் சிரித்த முகமாய் இருப்பது நல்லது. இந்த மாதிரி இருந்தால் தாயும் தங்கையும் வேதனைப்படுவார்கள்...'' என்று இதமாய் எடுத்துக் கூறினான்.



வினயாவால் அவ்வளவு எளிதாய் எடுத்துக் கொள்ள முடியவில்லை. எல்லாம் செய்து விட்டு எளிதாய் எடுத்துக் கொள்ள வேண்டும் என்றால்... அதுவும் தான் செய்தது தான் சரியென்று வாதம் வேறு...

''என்ன வினயா... நான் சொன்னது காதில் விழுந்ததா?'' என்றான்.

''ஓ... நன்றாய்... உங்கள் வீட்டினர் முன் உங்களை காட்டிக் கொடுக்காமல், 'ஈ' என்று இளித்துக் கொண்டு இருக்கணும்... அவ்வளவுதானே... செய்கிறேன் சும்மாவா... அம்மாடி! இரண்டு லட்சம்... வீடு... கார்... இத்தனைக்கும் இன்னும் என்னென்ன செய்யலாம்.''

அவன் பெருமூச்சை விட்டு கோபத்தை அடக்கினான். அதற்கு மேல் ஏதும் பேசாமல் வேகமாய் காரை செலுத்த ஆரம்பித்தான்.

பயணம் நீண்டது...

## 15

ஜெயசந்திரனின் தாய் யசோதா மருமகளை இருகரம் நீட்டி வரவேற்றாள். அணைத்து நெற்றியில் முத்தமிட்டாள்.... காலில் விழுந்து வணங்கிய இருவரையும் மனம் நிறைந்து ஆசி வழங்கினாள்.

கனிந்த தாய்மைக்கு எடுத்துக் காட்டாய் விளங்கிய யசோதாவை பார்த்த மாத்திரத்தில் வினயாவிற்கு பிடித்து போனது.

சிந்துஜா - சக்கர நாற்காலியில் அமர்ந்து தன் அண்ணன் - அண்ணிக்காக வழிமேல் காத்திருந்தவள் அண்

ணியைக் கண்டு பூரித்துப் போனாள்... அண்ணி எத்தனை அழகு! விழி கொட்டாமல் பார்த்தாள் அவள்.

நேரில் சிந்துஜாவை பார்த்து இன்னும் நெகிழ்ந்தாள் வினயா... பாவம் வாழ்க்கையில் எத்தகைய சோதனையை இந்தக் குழந்தை சந்தித்திருக்கிறாள். இரக்கம் அன்பாய் உருவெடுத்தது.

ஜதி போட வேண்டிய கால்கள் உணர்ச்சியில்லாமல் இருந்தன. எத்தனைக் கனவுகளை இந்தச் சின்ன இதயம் கண்டிருக்கும்... பாவம்...

புன்சிரிப்புடன் அண்ணியைப் பார்த்தவள் அண்ணன் பக்கம் திரும்பினாள்... ஜெயசந்திரனும் புன்னகையுடன் தலையை அசைத்தான்.

''அண்ணி'' ஆசையுடன் வினயாவின் கையைப் பற்றினாள்.

''அலோ... சிந்து... உன்னைப் பற்றி உன் அண்ணா நிறைய்ய சொல்லி இருக்கிறார். எனக்கும் உன்னைப் பார்க்க கொள்ளை ஆசையாக இருந்தது. என்னைப் பிடித்திருக்கிறது தானே?'' என்று கேட்டாள் வினயா...

மறுபடியும் அண்ணன் பக்கம் பார்வையை ஓட்டினாள் சிந்து. அவன் இல்லை என்பது போல தலையசைத்தான். வினயா பக்கம் திரும்பி ''உங்களை எனக்கு ரொம்ப பிடித்திருக்கிறது அண்ணி. உங்களுக்கு பரத நாட்டியம் வரும் இல்லே... வீணை நல்லா வாசிப்பீர்களாமே... எனக்கு நடனம் ஆடிக் காட்டுவீர்களா?'' என்று கேட்டாள்.

யசோதா மகளின் தலையை தடவியவாறு ''சிந்தும்மா... அண்ணாவும் அண்ணியும் இப்போதான் வந்தது. ஓய்வு எடுத்துக் கொள்ளட்டுமே. இன்னும் நாள்



இருக்கிறது.. உன் அண்ணி ஆடிக் காட்டுவாள் போதுமா?''

வினயாவின் முகத்தை ஆவலுடன் பார்த்தாள் சிந்து...

''நிச்சயமாய் ஆடிக்காட்டுகிறேன்... போதுமா...?'' என்று உறுதி அளித்தாள் அவள்.

சமாதானம் அடைந்தாள் சிந்து.

அவர்களுடைய உடைமைகள் அனைத்தும் மாடி அறையில் வைக்கப்பட்டன.

''போம்மா.. போய் ஓய்வெடுத்துக்கொள். அப்புறம் பேசலாம். சூடாய் காபி அனுப்புகிறேன். குடித்துவிட்டு ஓய்வெடுத்துக் கொள்.'' அன்புடன் சொன்னாள் யசோதா.

வினயா மாடியேறிச் சென்றதும் மகன் பக்கம் திரும்பி புன்னகைத்தாள்.

''என்னம்மா... உன் மருமகளைப் பிடித்திருக்கிறதா?'' ஜெயசந்திரன் கேட்டான்.

''நல்ல தேர்வு தான். ஆனால் உங்கள் இருவரையும் சேர்த்து மாலையும் கழுத்துமாய் பார்க்க முடியாமல் போனது தான் வருத்தம்.''

''நீங்கள் தான் அப்பா போன பின்பு இந்த வீட்டை விட்டு நகருவதில்லையே... என்ன செய்வது?''

''அண்ணா... வீடியோ கேசட் எடுத்து வந்திருக்கிறீர்கள் தானே...'' சிந்து ஆர்வக்குரலில் கேட்டாள்.

''மறப்பேனா சின்னக்குட்டி... மறக்காமல் அதைத் தான் முதலில் எடுத்து வைத்துக் கொண்டேனாக்கும்'' என்றான் அண்ணன்.

"ஜெய்... போய் பார்.. புது இடம். வினயாவிற்கு ஏதாவது தேவையா என்று கேள்." மகனை அனுப்பி வைத்தாள் தாய். தன் மகனுக்கும் திருமணம் ஆகிவிட்டது என்ற திருப்தி அவளது முகத்தில் தெரிந்தது...

அது ஆனந்தமாய் மாறி கண்களைக் கலங்க வைத்தது.

## 16

வினயாவிற்கு மாமியாரின் வீடு மிகவும் பிடித்திருந்தது பெரிய வீடு... நாகரீக வசதிகளுடன்...

"இது பரம்பரை சொத்தும்மா.. திருமணமாகி நான் அடியெடுத்து வைத்து... என் செல்வங்களைப் பெற்று எடுத்து சீராட்டி வளர்த்த இடம்.. நானும் உன் மாமாவும் மனமொத்து சந்தோஷமாய் வாழ்ந்த இடம். இப்போதும் உன் கணவன் ஓடி ஆடி விளையாடிய நினைவு அகலாமலே இருக்கிறது. ரவிசந்திரனும் தான்? இந்த வீடு தான் என் சொர்க்கம். உன் மாமனார் போன பிறகு இந்த வீடு தான் எனக்கு கதி... என் பிள்ளையின் திருமணத்திற்கும் வராமல் இங்கு இருக்கிறேன் என்றால் பாரேன்... தவிர... கணவனையிழந்த பின்பு எங்கேயும் செல்லப் பிடிக்கவும் இல்லை."

"உன் மாமனார் இல்லையே என்று இப்போது வருந்துகிறேன் வினயா... உன்னை மருமகளாய் பார்க்க எத்தனை சந்தோஷப்பட்டிருப்பார் தெரியுமாம்மா?"

கூடத்தில் சுவரில் நடு நாயகமாய் மாட்டப்பட்டு இருந்த மாமனாரின் புகைப்படத்தைப் பார்த்தாள். ஜெயசந்திரன் போல... இல்லை... ஜெயசந்திரன் தந்தையின் ஜாடை... அகன்ற நெற்றி... கூர்மையான பார்வை...



எடுப்பான மூக்கு.. அழுத்தி மூடியிருக்கும் உதடுகள்... எல்லாம் அப்படியே.

அவளது எண்ண ஓட்டத்தை அறிந்தவள் போல தொடர்ந்தாள் யசோதா. "ஜெயசந்திரன் அவன் அப்பாவைப் போலத்தான். தோற்றத்தில் மட்டும் அல்ல... சுபாவத்திலும் தான். அதே பிடிவாதம் நினைத்ததை சாதிக்கும் துடிப்பு... அதற்காக எதையும் செய்யும் துடிப்பு. உடன் பிறந்தவர்களின் மீது பாசம்... தொழிலில் உச்சாணியைத் தொட வேண்டும் என்ற லட்சியம்... அதுமட்டுமா... மனைவி மீது அன்பும் ஆசையும் கொள்ளையாய்.. இதை நான் சொல்லியிருக்க வேண்டாம். நீயே புரிந்து கொண்டு இருப்பாய்..." யசோதா கொஞ்சம் குறும்பையும் சேர்த்துச் சொன்னாள்.

இருவர் இடையே அன்பும் இல்லை... மண்ணாங்கட்டியும் இல்லை.. தாமரை இலைத்தண்ணீர் போல ஒட்டி ஒட்டாமல் வாழ்கிறோம் என்று சொன்னால்... திகைத்துப் போவாரா... நினைத்தாள்... பதிலுக்கு போலி வெட்கத்தைக் காட்டி தலைகுனிந்தாள்.

அவளது முகத்தை நிமிர்த்தி "இனிப் பேரக் குழந்தையும் கொடுத்துவிட்டால் என் மனம் நிறைந்து போகும்" என்று சந்தோஷக் குரலில் கூறினாள் யசோதா.

கேட்கவே என்னவோ போல இருந்தது. மனக்கண்ணில் குட்டி உருவம்.. அப்பாவின் அப்பட்ட வார்ப்பாய் குறுகுறுவென்று நடந்து சிறுகை நீட்டி... யசோதா மகனைப் பெருமையுடன் பார்ப்பது போல தானும்... தலையை உலுப்பிக் கொண்டாள். கணவன் - மனைவி என சுமுகமான உறவு கிடையாது. 'குர்' என்று உள்ளே

உறுமிக் கொண்டு இருக்கிறோம்... அதற்குள் பிள்ளை வரைக்குமா?

மாமியார் இன்னும் ஏதோ சொல்லிக் கொண்டிருப் பது உணர்ந்து காதை அவர் பக்கம் திருப்பினாள்.

''ரவிசந்தரனும் அப்பாவை போலத்தான். ஆனால் சில விஷயங்களில் என்னைக் கொண்டிருக்கிறான்.... கொஞ்சம் மென்மையான குணம். விளையாட்டுத்தனம் வேறு. இன்றைக்கு பார்ப்பாய் பாரேன்.''

ரவிசந்திரனைப் பார்க்கும் ஆவலும் எழுந்தது.

இரவு உணவு விருந்தாய் இருந்தது... ரவிசந்திரனும் இருந்தான்.

''அலோ அண்ணி.. நான் ரவிசந்திரன். இந்த வீட்டு இளைய வாரிசு... என்னைப் பற்றி சொல்லியிருக்க வேண்டுமே என் அண்ணா'' என்ன சொல்லியிருந்தான் ஜெயசந்திரன். கோயமுத்தூர் பிசினஸை ரவிசந்திரன் தான் கவனிப்பது என்றான். அதைத் தவிர எதுவும் சொன்னதாய் நினைவில்லை. இருந்தும் அவனது மனதில் வருத்தம் எழக்கூடாது என்று நினைத்தாள்.

''ஓ... சொன்னார்... உங்களைப் பற்றி... அத்தையைப் பற்றி.. சிந்துவைப் பற்றிதான் எப்போதும் பேச்சு'' என்றாள்.

''அதுதானே பார்த்தேன். எங்கே என் அண்ணா மனைவியோட மதிமுகத்தில் மயங்கி குடும்பத்தையே மறந்து விட்டாரோ என்று நினைத்துவிட்டேன்.''

''மறந்தது அவரா... நீங்களா? திருமணம் என்றைக்கு என்பதை நீங்கள் தான் மறந்து... வராமலே இருந்து விட்டீர்களே... கூடப் பிறந்த அண்ணனின் திருமண நாள்கூடவா மறந்துவிட்டது.''



தம்பியை அவள் உரிமையுடன் தட்டிக்கேட்பது கண்டு வியப்புடன் பார்த்தான் ஜெயசந்திரன்.

பரவாயில்லையே... நினைத்ததுக்கும் மேலாய் தன் குடும்பத்துடன் அதிகம் ஒன்றுகிறாளே...

எங்கே தன் மேல் இருக்கும் கோபத்தில் தன் குடும்பத் தாரிடம் முகம் வீங்கி இருப்பாளோ என்று நினைத் தான்... அப்படியில்லை.

''க்ளீன் போல்டு... அண்ணியிடம் எதுவுமே பேசமுடி யாது போலிருக்கே அண்ணா... நான் சரணாகதி அண்ணி...'' என்றான் ரவி.

''நான் பார் அவள் முன் வாய் திறக்காமல் இருக்கி றேன். அவளிடம் வாதாடி ஜெயிக்க முடியாதுப்பா... பேச்சுப் போட்டியில் எப்போதும் முதல் பரிசு அவளுக்கு தான்'' இப்போது வினயா கணவனை கண்கள் விரிய பார்த்தாள். அவன் அப்படியா நினைக்கிறான். அதை பெருமையாய் நினைத்துப் பேசுகிறானா... இல்லை மனத்தாங்கலுடனா?

சிந்துவின் குரல் அவளைத் திருப்பியது. ''அண்ணி... மறந்து விட்டீர்களே... பரதநாட்டியம்...'' கெஞ்சும் குரலில் கேட்டாள்.

அவள் தயக்கத்துடன் கணவனின் முகத்தைப் பார்த் தாள்.

''பரதநாட்டிய உடை பாட்டு கேசட்... எல்லாம் அம்மா வீட்டில்... எப்படி...''

''அவ்வளவுதானே... என்ன பாட்டு சொல்லு.. தயா ராய் வந்துவிடும்... பிராக்டீஸ் பண்ணும்போது சுடிதார் போட்டுப்பாய் இல்லையா... அதுவே போதும்'' உறுதி யளிப்பது போல பேசினான் அவன்.

மறுநாள் பரத நாட்டியத் திறமையை காண்பித்தாள்.

சிந்துவின் கண்கள் விரிந்து... இமைகள் கொட்டாமல் பார்த்தாள்.

ஆடியது வினயா இல்லை... சிந்து... சிந்துதான் ஒரு காலைத் தூக்கி நடராஜனாய் நிற்கிறாள்.... சிந்து தான் முகத்தை வெட்டி திருப்புகிறாள்... கால்களில் ஜதி போடுகிறாள். கைகளை விரித்து... துள்ளியவளாய்... சிந்து... சிந்துவின் கண்களில் நீர் வழிந்தது. உணர்ச்சியில்லாத கால்களை அசைக்க முயன்றும் முடியாத நிலை... வினயாவின் பாதங்கள் உயிருடன் தாளம் போடுவதைப் பார்த்து தன் கால்களையும் வேதனையுடன் பார்த்துக் கொண்டாள். துக்கம் பீரிட்டது.

துப்பட்டாவினால் முகம் துடைத்துக் கொண்ட வினயா, சிந்துவின் கண்ணீரைப் பார்த்ததும் துடித்துப் போய் அருகில் வந்தாள் ''சிந்து... என்னம்மா...''

''அண்ணி... ரொம்ப அழகாய் ஆடினீர்கள். என்னால் முடியாமல் போனதே என்று தான்...''

அவளது வார்த்தைகளில் தெரிந்த சோகம் வினயாவின் மனதை கற்பூரமாய் கரைத்தது. அவளை இழுத்து அணைத்துக் கொண்டாள். அவளது கண்களும் ஈரமாயின.

''சிந்து... உனக்கு நாட்டியம் பிடிக்கும் என்றால் உட்கார்ந்த வாறே அபிநயம் பிடி... என்னைப் போல முகத்தை வெட்டிக் கண்களில் பாவம் காட்டலாமே. உன் மனதிற்கு இதமாய் நிறைவு தரும். சொல்லித் தரட்டுமா?''

''முடியுமா அண்ணி... அப்படியாவது பண்ண முடியுமா?''



''நிச்சயம் நாளையிலிருந்து புறப்படும் வரை உனக்கு பாடம்... சரிதானே...''

மகிழ்ச்சியுடன் தலையாட்டினாள் சிந்து.

யசோதாவிற்கு மருமகளின் நடனத் திறமையைக் கண்டு பெருமையென்றால்...தன் மகளை அரவணைத்து இதமாய் பேசியது பெருமிதத்தைத் தந்தது. நல்ல மருமகள் தனக்கு கிடைத்திருப்பது கண்டு மனம் பூரித்துப் போனாள்.

அன்று இரவு வீடு திரும்பிய மகனிடம் சொன்னாள். ''நல்ல பெண்ணாகப் பார்த்து எனக்கு மருமகளாக ஆக்கியிருக்கிறாய் ஜெய்... வினயா தங்கம் தான்'' ரவிசந்திரன் சான்றிதழ் கொடுத்து விட்டான்.

''அண்ணி என்றால் அண்ணிதான். உரிமையாய் பேசுவதில்... அன்போட கடிந்து கொள்வதில்... உண்மையில் அண்ணா... ஷி இஸ் வெரி கிரேட்'' சிந்துஜா சொல்லவே வேண்டாம்.... அவளுக்கு அண்ணி தேவதை... அவளுடைய கனவு நாயகி அண்ணி. அன்று தனிமையில் மனைவியிடம் கேட்டான் அவன்.

''ஏன் வினயா...நல்ல மருமகள் என்று என் அம்மாவின் மெச்சுதலை வாங்கி விட்டாய். நல்ல அண்ணி என்று என் தம்பி தங்கை சொல்லும்படி செய்துவிட்டாய்... என்னிடம் மட்டும் நல்ல மனைவியாய் இல்லாமல்... ஏன்?''

''ஏனா? அவர்கள் யாரும் என்னை ஏமாற்றவில்லை. நம்பிக்கை மோசம் செய்யவில்லை அதனால்தான்...'' என்றவள் தலையணையையும் போர்வையையும் எடுத்துக் கொண்டு அறையின் மூலைக்கு நடந்தாள்.

தனிமையில் படுக்கும் அவளைப் பார்த்து வருத்தத்துடன் பெருமூச்சு விட்டு, திரும்பிப் படுத்துக் கொண்டான் அவன்.

## 17

புறப்படுகிறேன் அத்தை காலில் விழுந்து வணங்கிய மருமகளைத் தூக்கி உச்சி முகர்ந்தாள் யசோதா.

''அடிக்கடி இருவரும் வந்துபோய் கொண்டிருந்தால் எங்களுக்கும் அது சந்தோஷம் தரும்'' என்றாள்.

''கண்டிப்பாய் அத்தை. ஆடி மாதத்திற்கு அப்பா அழைத்துப் போக வருகிறார். ஒரு மாதம் அங்கு இருந்து விட்டு அப்புறமாய் இங்கு வருகிறேன். சிந்தும்மா வரட்டுமா... நான் சொல்லித் தந்ததை தினமும் பயிற்சி செய்வாய் தானே. அடுத்த தடவை வரும்போது வீடியோ பண்ணிக்கொண்டு வருகிறேன். பார்த்து கற்றுக் கொள்வாயாம்... சரியா?'' விடைப் பெற்றாள் வினயா.

பெட்டியை காரில் வைத்துவிட்டு வந்த ரவியிடம்

''நீங்களும் நேரம் கிடைக்கும் போது வரவேண்டும்'' என்று அழைப்பு விடுத்தாள்.

''இனி விடுவேனா அண்ணி... சரிக்கு சரியாய் பேச நீங்கள் கிடைத்து விட்டீர்களே... வந்து கழுத்தை அறுத்து விடமாட்டேன்'' என்றான் வேடிக்கையாய்.

அவர்களிடம் விடைப்பெற்றுச் சென்றபோது, உண்மையிலேயே மன நெருக்கமானவர்களைப் பிரிந்து செல்வது போலத்தான் இருந்தது.... இவர்களுடன் பழகியதில் ஒருவாரம் ஓடியதே தெரியவில்லை.



''இப்போது உன் அபிப்ராயத்தை சொல்லேன்... என் குடும்பத்தினரைப் பிடித்திருக்கிறதா வினயா?''

''ரொம்ப...''

''நன்றி.''

''எதுக்கு?''

''என் உறவினர்களைப் பிடித்திருக்கிறது என்றதற்கு.''

''இப்போது எனக்கும் அவர்கள் நெருங்கிய உறவு தான்... தெரிந்து கொள்ளுங்கள்.''

''மறுபடியும் நன்றி.''

''இப்போ எதற்கு?'' புரியாமல் பார்த்தாள்.

''உன் உறவினர்கள் என்று ஏற்றுக் கொண்டதற்கு.''

''ச்சூ... உங்களையே கணவனாய் ஏற்றுக் கொண்டாயிற்று... உங்களுடையவர்களை ஏற்றுக்கொள்ள மறுக்க முடியுமா? மறுபடியும் இதற்கு நன்றி சொல்ல வேண்டாம். கேட்டு அலுத்துவிட்டது'' அவன் சிரித்து விட்டு வாகனத்தை ஓட்டினான்.

மறுநாள் எளிமையாய் உணவை முடித்துக் கொண்டு வீட்டை ஒழுங்குபடுத்தினாள்.

இன்னும் இரண்டு நாட்கள்... இரண்டு இரவுகள்... அதற்கு பின் தாய்வீடு...

இரண்டு இரவுகளைப் பற்றிய சிந்தனையும் இல்லை. உபாயத்தைத் தேடி அலைய வேண்டியது இல்லை.

கோபத்தில் அவள் விலகிச் செல்வது கண்டு ஜெயசந்திரனும் ஒதுங்கி நின்றான்....

அவனிடம் எதிரொலியாய் ஆத்திரமோ கோபமோ எதிர்பார்த்த வினயா, எப்போதும் போல இன்முகமாய் பேசுவது கண்டு அவளுக்கே பற்றிக்கொண்டு வந்தது.

ஒருவேளை... ஒரு சவாலுக்கு தன்னை மணந்து கொண்டானா என்ன? இல்லை... பரத கலைகளைத் தேர்ந்த மனைவி என்பதால் தனக்கு பெருமை என்று நினைத்தானா? அழகான கலைப்பொருட்களை சேர்ப்பதில் சிலருக்கு ஆர்வம் உள்ளதுபோல இப்படியும் ஒன்றா?

திருமணத்தின் போது தான் எடுத்துக் கொண்ட தீர்மானத்திற்கு இதுவும் அனுகூலம் தான். அதே சமயம் பொறுக்காமலும் கேட்டாள்.

அவள் அறையினுள் வரும்போது அவளது படுக்கை தரையில் விரிக்கப்பட்டு தயாராக இருப்பதைக் கண் டாள். எங்கிருந்தோ எரிச்சலும் சினமும் வந்து அவ ளுடன் ஒட்டிக்கொண்டது... எதற்கு என்று அவளுக்கே தெரியவில்லை.

"என்ன அப்படிப் பார்க்கிறாய் வினயா... உன் வேலையை குறைக்கலாமே என்று தான்..."

அவனது முகத்தில் தெரிந்த சிரிப்பை தன் கையால் வழித்து துடைத்து எறிய வேண்டும் போல இருந்தது.

"உங்களுக்கு கோபமே வராதா... தனிப்படுக்கை என்று எரிச்சலும் இல்லையா?"

"ஏன்... கோபம் வந்து உன்னை இழுத்துப் படுக்கை யில் தள்ளி... முரட்டுத்தனமாய் அணைத்து... அதைத் தான் எதிர்பார்க்கிறாயா வினயா?"

தான் கேட்ட கேள்வி எந்த அளவிற்கு அவனது சிந் தனையை இழுத்துச் செல்கிறது என்று அப்போது தான் உணர்ந்தாள்.



"உனக்கு இங்கு படுத்துக் கொள்ள விருப்பம் என்றால் சொல்... நான் விரித்ததை நானே மடித்து வைத்து விடுகிறேன்" சீண்டுவது போல இருந்தது அவனது பேச்சு.

கோபத்துடன் அவனை விழித்துப் பார்த்தாள்.

"எனக்காக விரிக்கவும் வேண்டாம். மடிக்கவும் வேண் டாம். பேசாமல் இருந்தால் அதுவே போதும்."

பொத்தென்று படுக்கையில் விழுந்தாள். அவளது கோபம் அவனுக்கு சிரிப்பைத் தந்தது.

திடீரென்று வந்து நின்ற ரவியைப் பார்த்து அவளுக்கு ஆச்சர்யம் "என்ன ரவி... திடீரென்று... எங்கிருந்து குதித் தீர்கள்....?" என்று கேட்டாள்.

"என் அண்ணி அன்போட 'வா' என்றதும் வராமல் இருந்தால் எப்படி ஓடிவந்து விட்டேன்."

"இந்த ஐஸ் வேலையெல்லாம் வேண்டாம். உண்மை யில் என்ன விஷயம்?"

"சத்தியமாய் அண்ணி" நெஞ்சைத் தொட்டு சொன்ன அவனை "சரி... சாப்பிட வாருங்கள்...நீங்கள் சொல்வதை நம்புகிறேன்" என்றாள்.

ரவி காரிலிருந்து கூடையை எடுத்து வந்தான்.

"தோட்டத்தில் விளைந்தது அண்ணி. ருமானி... மல்கோவா அம்மா கொடுத்து விட்டு வரச் சொன்னார்கள்."

அண்ணியிடம் தந்தான்.

"அண்ணி அண்ணன் வர லேட்டாகுமா அண்ணி?"

"தெரியவில்லை ரவி... வேலை அதிகம் என்றால் தாமதமாகும். ஏதும் இல்லையென்றால் வந்துவிடுவார். சிந்து எப்படி இருக்கிறாள் ரவி... அத்தை சௌக்கியம் தானே."

"நீங்கள் கேட்டதும் நினைவுக்கு வருகிறது. சிந்து உங்களுக்கு கடிதம் எழுதித் தந்திருக்கிறாள்... இதோ..." எடுத்துத் தந்தான்.

கடிதத்தில் சிந்து தன் அன்பையும் பாசத்தையும் கொட்டிக் காட்டியிருந்தாள். அதைப் பத்திரப் படுத்தி வைத்தாள்.

அன்று விரைவாக வந்தான் ஜெயசந்திரன்.

இரவு உணவு முடித்துக் கொண்டு அண்ணனும் தம்பியும் வியாபார சம்பந்தமாய் பேசினார்கள்.

தொழில் சம்பந்தமாய் தனக்கு எழும் எந்த ஒரு ஐயத்தினையும் அண்ணனுடன் கலந்து தெளிந்து பின் முடிவு செய்வது தம்பியின் வழக்கம். அன்று அதேபோல தனக்கு ஏற்பட்ட சந்தேகத்தை தெளிவுபடுத்திக் கொள்ள வந்திருந்தான்.

அங்கு தனக்கு வேலையில்லையென்று நினைத்தவளாய் தன் அறைக்குள் சென்றுவிட்டாள் வினயா... எப்போது உறங்கினாள் என்று அவளுக்கே தெரியாது.

இரவு ஒரு மணிவரை பேசி முடித்துவிட்டு இருவரும் எழுந்தனர். குளியலறையை நோக்கி அண்ணன் சொல்ல... தம்பி தன் சூட்கேசில் தனது டைரியை வைக்க நினைத்து அண்ணனின் அறைக்குள் நுழைந்தவன்... அறையின் ஓரம் தரையில் படுக்கை விரித்து குழந்தைப் போல படுத்திருந்த அண்ணியைப் பார்த்தான். பார்த்தவன் குழம்பி நின்றான்... எங்கேயோ நெருடுவது போல இருந்தது... ஏன்... ஏன்... இந்தத் தனிப்படுக்கை? பேசுவதிலும் பழகுவதிலும் விரிசல் இல்லையே... பின் ஏன்? அண்ணன் விரும்பி மணந்தது... எதில் குறை? அண்ண



னின் அழகு... ஆண்மை... திறமை.. பணம்... வசதி... மகிழாமல் ஒரு பெண் இருக்க முடியாதே... பின் எந்த விஷயத்தில்? தெளிந்த மனதுடன் வந்தவன் குழம்பிய குட்டையாய் ஊருக்கு புறப்பட்டான் அவன்.

## 18

ஆடிமாதம்... புதிதாய் திருமணம் ஆனவர்களை வில்லனாய் பிரித்து வைத்து அவர்களின் வயிற்றெரிச்சலைக் கொட்டிக் கொள்ளும் மாதம்...

அந்த மாதம் வந்தது. ஆனால் புருஷனைப் பிரியும் ஏக்கமோ வேதனையோ வினயாவுக்கு கிடையாது தான்.

ஆனால் வேறுபாட்டை அவளால் உணர முடிந்தது. அதே வீடு... அதே பெற்றவர்கள்... அதே சகோதரன்... ஆனால் அன்று இருந்த மனநிலை இல்லை... உணர்வும் வேறுபட்டு போயிருந்தது.... ஏதோ பிடிப்பு இல்லாத வாழ்க்கையாய் தெரிந்தது.

ஜெயம் ஆப்ரேஷனுக்கு ஒப்புக் கொண்டாள்... அந்த தினத்தில் ஜெயசந்திரனும் வந்திருந்தான். அருகில் இருந்து தைரியம் சொன்னான்... பணக்கட்டை நீல சேகரின் கையில் வைத்து "இன்னும் பணம் தேவையானால் கேளுங்கள்..." என்றான்.

அறுவை சிகிச்சை முடிந்து, மருத்துவர் உறுதியளித்து அனுப்பும் வரை மருத்துவமனையில் இருந்தாள் ஜெயம்... அதுவரை ஜெயசந்திரனும் வந்து போனான்.

அவன் பணம் கொடுத்து உதவியிராவிட்டால் தன் தந்தை திண்டாடியிருப்பார் என்று தெரிந்து கொண்டாள். கார்த்திக்கும் பொறுப்பில்லாமல் இருப்பது அவளுக்கு வருத்தம் தான்.

ஜெயசந்திரன் கொடுத்த பணம் தான் அவரை கடனிலிருந்து காப்பாற்றியது... தன் மாப்பிள்ளை பெரிய மனதுடன் தானே வந்து உதவியது அவரது மனதை தொட்டது. பெரிய இடம்.. பெரிய பணக்காரன்... ஒதுங்கியே இருக்க வேண்டும்... மகள் சந்தோஷமாய் இருந்தாப் போதும் என்று தான் நினைத்தார்... ஆனால் பணக்கார வர்க்கத்திற்குரிய கர்வமோ... அலட்சியமோ இல்லாமல் ''இன்னும் தேவையானால்...'' என்றானே... என்ன பெரிய மனம் அவனுக்கு.. தெய்வம் தான் தங்கமான மாப்பிள்ளையை பொறுக்கி எடுத்து தன்னோட சேர்த்து வைத்துள்ளது... மனம் பெருமையுடன் நினைத்தது.

அவர்மட்டுமா நினைத்தது... வினயாவும் தான். தாய் மருத்துவமனையில் சேர்ந்ததிலிருந்து அருகில் இருந்து, கலங்கும் மனதிற்கு ஆறுதலும் மனோதைரியம் தந்து அனைத்து பொறுப்பையும் தலைமேல் போட்டுக் கொண்டு... அவன் செய்த உதவி மனதை தொட்டது. தான் கோபத்தை காட்டினாலும், அதைப் பொருட்படுத்தாது ஓடி வந்து அவன் செய்தது வினயாவின் மனதைக் கரைத்தது... அவனுக்காக பாகாய் உருகியது.

ஜெயம் வீட்டிற்கு வந்த பின்புதான் ஜெயச்சந்திரன் தன் அலுவல்களை கவனிக்கத் தொடங்கினான்.

தாயை கவனிக்கும் பொறுப்பு வினயாவுக்கு... தாய்க்கு தானே தாய் ஸ்தானத்தில் இருந்து கவனித்தாள்.

''எதுக்குமா சிரமப்படறே...'' என்று பாசத்துடன் வினவிய தாயிடம் ''எனக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைத்திருக்கும்மா. நான் குழந்தையாய் இருக்கிறபோது நீ செய்ததற்கு நான் இப்போது செய்கிறேன் போதுமா?'' என்று சிரித்து விட்டுப் பணிவிடையைத் தொடர்ந்தாள்.



ஆடி மாதம் முடியும் வேளை வந்தது... அம்மாவுக்கு துணையாக இருந்து விடட்டுமா என்று மகள் கேட்டதும் மறுத்தார் தந்தை.

''கூடாதும்மா... எப்படியோ சமாளித்தால் ஆயிற்று. நீ உன் புருஷன் வீட்டிற்கு போயாக வேண்டும். நல்ல நாள் பார்த்துக் கொண்டு போய் விடுகிறேன்.'' என்றார்.

அதற்கு இடம் வைக்காமல் ஜெயசந்திரனே வந்து அவளை அழைத்துப் போனான்... ''சம்பிரதாயம் வேண்டாமே நானே அழைத்துப் போகிறேன்'' என்ற அவனது பெருந்தன்மையை மனதினுள் மெச்சிக் கொண்டார். நினைக்கும் போது மனம் விம்மியது...

பிரிவு மன வேறுபாட்டிற்கு நல்ல மருந்து என்பார்கள். காதல் எனும் நாடகத்தில் பிரிவு என்பது இடைவேளை என்பது உண்மைதான்... ஒரு மாதப் பிரிவில் வினயாவின் உள்ளமும் மாறுதல் அடைந்திருந்தது.

ஜெயசந்திரன் மீது அன்பு இல்லை என்று சொல்ல முடியாமல் அவளுடைய அடிமனதில் அவன் மீது ஒட்டுதல் விழுந்திருந்தது... ஒதுக்கினாலும், ஒதுங்கினாலும் முகம் சுணங்காமல் வந்து பேசும் அவனது குணம்... இவளுக்கு அழுததே தண்டம்... இவளுடைய பெற்றவர்களுக்குமா என்று நினைக்காமல் வாரிக் கொடுத்த பரந்த மனம்... அத்தனைக்கும் மேலாய் இன்னும் தன் மீது உரிமை காட்டி மனைவியாய் மதித்து அழைத்து வந்த பண்பு....

இத்தனைக்கும் தான் என்ன செய்தது... கணவனாய் வேண்டாம். நல்ல நண்பனாய் நினைத்திருக்கலாம்... இல்லையே எதிரியாய் அல்லவா பார்த்தது... தன் வாழ்வை நாசம் செய்தவன் என்று அவன் மீது விரோதத்தைக் காட்டியது நெஞ்சை அறுத்தது...

கடைக்கண்ணால் அவனைப் பார்த்தாள். எங்கோ எண்ணம் பதிந்திருக்க காரை செலுத்திக் கொண்டிருந்தான். அலையாய் தலைக்கேசம் காற்றில் அசைய செதுக்கி வைத்த கிரேக்க சிலை போல அமர்ந்து கொண்டிருந்த கணவனின் அழகில் கவரப்பட்டாள்.

வெண்மை நிற முழுக்கை சட்டையில் அவனது வனப்பு கூடித் தெரிந்தது... காற்றில் அலையோடும் அந்த கேசத்தை தொட்டு கலைக்கலாம் போலத் தோன்றியது.

அவனது தோளில் சாய்ந்து கொள்ள ஆசைப்பட்ட மனதின் தலையை குட்டினாள் மானசீகமாய்.

ஒன்று மட்டும் அப்போது நிதர்சனமாய் தெரிந்தது. தன் மனதில் அவன் குடியேறி விட்டான்... அவளையும் அறியாமல் காதல் வந்து விட்டது. எப்போது என்றுதான் புரியவில்லை. எதனால் என்பது மட்டும் தெரிந்தது. பொறுமை... எந்த ஆண்மகனிடமும் காண முடியாத பொறுமை... எட்ட நிற்க வைத்தும் அவன் காட்டிய பொறுமை. அதனால் தான் இந்த மனதின் மாற்றம்.

நினைவில் சட்டென்று மேகமூட்டம்.

ஒரு வேளை... அவனுக்கு தன் மீது காதல் இல்லையோ... பின் ஏன் வலுக்கட்டாயமாய் தொடர்ந்து வந்து தன்னை மனைவியாக்கிக் கொண்டது...?

இருக்காது... தன் மனம் மாற வேண்டும் என்று காத்திருக்கிறான்... இப்போது தன் மனநிலையை எடுத்துச் சொன்னால்... நிச்சயம் அவனும் அன்பை பொழிவான். அந்த நினைவில் கண்களை மூடிக் கொண்டாள்.

கணவனுக்காக வழிமேல் விழிவைத்து காத்திருந்தாள் வினயா...

அவள் மனதினுள் மானின் துள்ளல். இதயத்தில் பல பட்டாம் பூச்சிகள். கண்களில் ஆயிரம் கனவுகள். தன்னை



கருத்துடன் அழகாய் அலங்கரித்துக் கொண்டாள். உடலைத் தழுவிய நீல நிற சிபான் புடவை... அதற்கு ஏற்ற சோளி... தங்கத்திற்கு மெருகூட்டியது போல இருந்தது அவள் அழகு.

அழகான நீண்ட பின்னலில் நிறைய மல்லிகையை சூடியிருந்தாள்.

ஒவ்வொரு வினாடியும் மணியாய் நீண்டது... வெளியே வந்து நின்றாள். கணவன் எப்போது வருவார்... ஆவலில் மனம் பரபரத்தது.

வானத்தில் திரிந்தபட்டம் அவளது கவனத்தை ஈர்த்தது. சிறுவர்கள் பட்டம் விட்டுக் கொண்டிருந்ததை ரசிக்க ஆரம்பித்தாள்.

கண்பட்டது போல நூல் அறுத்துவிட... பட்டம் காற்றில் சுழன்று அசைந்து கீழே இறங்க ஆரம்பித்தது சுற்றுச் சுவர் ஒட்டிய செண்பக மரத்தில் சிக்கிக் கொண்டு விட "ஓ" வென்று கூவினர் சிறுவர்கள். அதைப் பார்த்து அவளுக்கு சிரிப்பு வந்தது. அவர்களின் ஏமாற்றம் அவளுக்கு சிரிப்பைத்தான் தந்தது.

ஒரு சிறுவன் மட்டும் முன் வந்து "ஆன்ட்டி... கோல் வேண்டும்" என்றான்.

நான்கடியில் இருந்த கோலைக் கொண்டு வந்து கொடுத்தாள்.

ஒருவர் மாற்றி ஒருவர் முயற்சித்து விட்டுத் தோல்வியடைய... அவர்கள் அழாத குறைதான்.

"மறுபடியும் அந்த மாதிரி பட்டம் வராதுடா..."

"போடா... மாஞ்சா தடவலாம்னேன்... கேட்டியா... உன்னால்தான்"

''ஆமாம்... நோஞ்சான் நூலை கட்டினால் இப்படித் தான் ஆகும்.''

''இப்ப என்ன செய்வது?''

''ஆன்ட்டி.... நீங்க எடுத்துத் தாங்களேன்... ப்ளீஸ்''

''நானா?'' கேட்டாள் அவள்.

''ப்ளீஸ் ஆன்ட்டி... கஷ்டப்பட்டு, ஒரு நாள் முழுசா செய்த பெரிய பட்டம்... அங்கிள் இருந்தால் கூப்பிடுங் களேன் ஆன்ட்டி...'' கெஞ்சும் பாவத்துடன் கேட்ட சிறுவர்களைக் கண்டு மனம் இரங்கிப் போனது உள்ளே சென்று முக்காலியை கொண்டு வந்து ஏறி பட்டத்தைத் தொட முயன்றாள்.

''மெல்ல... ஆன்ட்டி.... கிழிந்து விடப் போகிறது''

உயரம் தொடாமல் எம்பி நின்று முயன்றாள்... காம்பவுண்ட் சுவர் மேல் ஏறி எம்பினாள். கோல் பட்டத்தைத் தொட்டு விட.... சிறுவர்களின் கும்மாளம். மெல்ல மெல்ல நகர்த்தி பட்டத்தை கிளையிலிருந்து தள்ள... மகிழ்ச்சியில் குதித்தனர் சிறுவர்கள். அதைப் பார்த்து அவளும் மகிழ்ந்தாள்.

அந்த நேரத்தில் கார் வந்து நின்று... ஜெயசந்திரன் இறங்கினான்...

அவனைக் கண்ட ஆனந்தத்தில் கால்கள் துவள... தடுமாறி... கீழே சாய்ந்தாள்.

அதிர்ச்சியில் நின்று விட்ட ஜெயசந்திரன் ''வினு...'' என்று ஓடி வந்தான்.

அதற்குள் சுவரை ஒட்டிய பள்ளத்தினுள் நிலை குலைந்து விழுந்தாள் அவள்... கண்கள் மங்கி விட அதற்கு பின் நடந்ததை அறியாமல் மயங்கி விட்டாள் வினயா.



## 19

கண்விழித்த வினயா எங்கே இருக் கிறோம் என்று குழம்பினாள்... டெட் டால் மணம்... மருந்து நெடி அது ஆஸ்பத்திரி என்று உணர்த்தியது.

எழுந்திருக்க முயன்று முடியாமல் போனது. காலில் பலமாய் கட்டு... இதயத்தினுள் தீக்குச்சி உரசி விட்டது போல 'பக்'கென்றது. ''என் காலுக்கு என்ன? இனி நாட்டியம் ஆட முடியாமல் நொண்டியாகி விட்டேனா?...'' கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தது. நடந்தது நினைவுக்கு வந்தது.

பாழாய் போன அந்தப் பட்டம்.... விதியை நொந்து கொண்டாள்... தன் ராசி அத்தனை மோசமா...

கணவனின் அன்பை நோக்கி... அவனுடன் வாழ்வை ஆரம்பிக்க நினைத்த நேரத்தில் இந்த விபத்து நடக்க வேண்டும் என்றால்...

இதுதான் விதியின் விளையாட்டா? இது தான், தான் ஒன்று நினைக்க தெய்வம் ஒன்று செய்யும் என்று சொல்வதா? மனமும் சேர்ந்து அழுதது...

இடுப்பின் வலபக்கம் 'பளிச்' சென்று வலித்தது... ''அம்மா'' என்று தாளாமல் கண்களை மூடிக் கொண் டாள்... ஜெயசந்திரன் அருகில் இல்லையே... ஏன்?

''அம்மா... வினாயா...'' தாயின் குரல் கேட்டு விழித்தாள்.

''அம்மா... நீ.... எங்கே...''

''மாப்பிள்ளை போன் பண்ணினார்... கார் அனுப்பி வைத் தார் அப்பாவும் வந்திருக்கிறார்... எப்படிம்மா ஆயிற்று?''

''தெய்வம் எனக்கு தந்த தண்டனைம்மா...'' மன தினுள் நினைத்தாலும் வெளிப்படையாய் அதைச் சொல் லாமல் நடந்ததைச் சொன்னாள்.

''நீ எதுக்கும்மா சுவர் மேலே ஏற வேண்டும்... என்னவோ இன்னும் சின்னக் குழந்தையாய் இருக்கிறாய் போ... மாப்பிள்ளை பாவம்... ஆடிப் போய் விட்டார்...''

நீலசேகரன் வந்தார். ''ஜெயம்... குழந்தைக்கு என்ன கொடுத்தாய்... ஏதாவது கலந்து கொடேன். நாக்கு வரண்டு போயிருக்கும்... ஏதோ நேரம் சரியில்லை... இப்படி ஆகிவிட்டது... விடு...'' என்றார்.

''அப்பா... அம்மாவை ஏன் அழைத்து வந்தீர்கள்... இப்போதுதான் ஆப்ரேஷன் ஆன உடம்பு... இன்னும் ரெஸ்ட் வேண்டும்...'' என்றாள் மகள்.

''நீ இங்கே படுக்கையில் கிடக்க அங்கே நான் நிம்மதியாய் இருக்க முடியுமா வினு. அங்கே உட்கார்ந்து இருப்பதற்கு இங்கேயே ஓய்வெடுத்துக் கொள்கிறேன். இந்த அறையில் இன்னொரு படுக்கையும் இருக்கிறது... உன்னையும் கவனித்து கொண்டாற் போல் இருக்கும்'' தாய் விடாமல் சொன்னாள்.

''அம்மா சொல்றதும் சரிதான் வினு... இங்கேயே இருக்கட்டும்.'' என்று நீலசேகரும் மனைவிக்கு பரிந்து பேசினார்.

''அப்பா... அவர் வரவில்லையா?'' வினயா கேட்டு விட்டாள்.

''வருவார் கண்ணா... நேற்று முழுவதும் அவர் இங்கே தான் நகரவே இல்லை... தலையிலும் அடி என்பதால் பதைத்துப் போனார். நல்லவேளையாய் டாக்டர் எதுவும் இல்லை என்றார்... கேட்டு விட்டு எங்களிடம் உன்னை கவனிக்கும் பொறுப்பை ஒப்படைத்து விட்டு தன் வேலைகளை கவனிக்கச் சென்றிருக்கிறார்'' என்றார் நீலசேகரன்.

''ஏம்ப்பா... என் காலுக்கு ஏதாவது...''



''கால் சதை கிழிந்து விட்டது அவ்வளவுதான். தையல் போட்டிருக்கிறார்கள். எல்லாம் சரியாகி விடும்...'' காலை அசைக்க முடியாமல் வலி... அடி அவ்வளவுதானா?

''டாக்டர் பயமில்லை என்று சொல்லிவிட்டார் வினு. பரதநாட்டியத்திற்கு எந்த வித குந்தகமும் இல்லை. கொஞ்சம் ஓய்வு தந்தால் போதும் என்றார். இன்னும் எதுக்கும்மா யோசனை'' தாயார் தைரியம் சொன்னாள்... அதைக் கேட்டதும் நிம்மதி ஏற்பட்டது.

செய்தி அறிந்து ஓடி வந்தான் ரவிசந்திரன். நெற்றியில் பிளாஸ்டர். கையில் சிவந்தவரிகள்... காலில் கட்டு... இந்த கோலத்தில் அண்ணியைப் பார்த்து கண்கலங்கிப் போனான்.

இருந்தும் சுதாரித்துக் கொண்டு ''என்ன அண்ணி பட்டம் விட ஆசையென்றால் அண்ணாவிடம் சொல்லியிருக்கக் கூடாதா? வாங்கி வந்து குவித்திருப்பாரே... சின்னப் பையன்களோட பட்டத்திற்கு ஆசைப்பட்டு இப்படி விழ வேண்டுமா'' என்றான் சீண்டுவது போல... அவன் கேலி செய்வதை உணர்ந்து சிரித்தாள்.

''சிந்து அங்கே பயந்து விட்டாள்... அவளைப் போல நீங்களும் பரத நாட்டியத்திற்கு லாயக்கில்லாமல் போய் விட்டீர்களோ என்று... அப்படி ஏதும் இல்லை என்று தெரிந்ததும்தான் அழுகையை நிறுத்தினாள்...''

''ரவி... அவளுக்கு சொல்லுங்கள். என் காலுக்கு ஏதும் இல்லை. மறுபடியும் அங்கு வரும்போது புது நடனங்களை ஆடிக் காட்டுவேன் என்று.''

''சரி... நான் புறப்படுகிறேன்...'' விடைப் பெற்றுக் கொண்டான் ரவி.

யோசனையில் மூழ்கினாள் அவள்... தன் கணவன் வரவில்லை... ஏன்... தன் மீது கோபமா?

கோபமே வராதா என்றாளே... வந்து விட்டதோ. தனக்கும் அவனுக்கும் இடையே இடைவெளி ஏற்

படுத்திக் கொள்ளத்தான் அவள் விழுந்ததாய் நினைத்து விட்டானோ... உண்மையில் பல வழிகள் கையாண்டது இப்போது வினையாகிப் போனது. விளையாட்டு விபரீதமாய் முடிந்தது. ஆங்கிலத்தில் தான் படித்த கதையின் நினைவு வந்தது... அதுபோலத்தான் தன் வாழ்க்கையிலும் நடந்திருக்கிறது உழைக்காமல் வாழ பல குற்றங்கள் செய்ய நினைத்து பிடிபடாமல், கோயில் மணி ஓசையில் மனம் மாறி உழைத்து வாழ விரும்பும் போது போலீசிடம் பிடிபடுகிறான்... கருத்து அதே தான்... நிகழ்ச்சிகள் தான் வேறு... விதியின் விளையாட்டு!

மனம் மாறி அவனுடன் வாழ ஆரம்பிக்க நினைத்த போது விதியின் சதி...

அவன் மனம் வெறுத்துப் போயிருந்தாலும் ஆச்சர்யப் படுவதற்கு இல்லை... இது நாள் வரை பொறுமையை கடைப்பிடித்ததே அதிசயம்... இனி...

அவனுடைய அன்பை இழந்து விட்டோம்... அன்பையா... காதலையா?

காதல் என்றால் மாறாது. அன்பு சூழ்நிலையில் மாறலாம்.

ஏதோ ஆசைப்பட்டு மணந்தவன் ச்சீ புளிக்கும் பழம் என்ற கதையாய் விலகிவிட்டான்... இனி அழுது என்ன பிரயோசனம்?

அன்றிரவு தலையணை நனையும் வரை அழுது தீர்த்தாள் அவள்.

## 20

கணவனின் தோளை ஆதரவாய் பற்றிக் கொண்டு மெல்ல நடந்து கட்டிலில் அமர்ந்தாள் வினயா...



''விண்'' ணென்ற வலி... முகம் சுளித்தாள். அடிபட்ட காலை மென்மையாய் தாங்கி கட்டில் மீது வைத்தான் ஜெயசந்திரன்.

எந்த வித உணர்ச்சியையும் காட்டாமல் கல் போல இருந்தது அவன் முகம்... மனம் வலித்தது.

என் திட்டத்தில் வெற்றி என்று கொக்கரித்தேன்... உண்மையில் தோற்றது தான் தான்.

''ஊடலில் தோற்றவர் வென்றார்'' என்றாரே வள்ளுவர். இந்த விஷயத்தில் வென்றவள் தோற்றுப் போனேன். மனம் ஏங்கியது...

குழந்தை போல அவளைப் பார்த்துக் கொள்வதிலும், தோள் கொடுத்து தாங்கிக் கொள்வதிலும் அவன் குறை வைக்கவில்லை...

வீட்டினுள் வரும் போது அவளை நடக்க வைக்காமல் அள்ளி எடுத்துக் கொண்டு சென்றதும் அசட்டு மனம் கிளுகிளுத்துப் போனது... அதற்கு பின் அருகில் நின்று பேசாமல் போனதுதான் ஏமாற்றம்.

அவ்வளவு தூரம் வேண்டாதவளாய் போய் விட்டேனா... என்னை இன்னும் ஏன் வைத்துக் கொண்டு இருக்கிறாராம்... கொண்டு போய் விட்டு விடட்டுமே.

தன் பெற்றோர் முன் கணவன் பாத்திரத்தை சரியாக செய்கிறார் போலும்.

எழுந்த அழுகையை உதட்டைக் கடித்து அடக்கிக் கொண்டாள்.

கால் காயம் சரியாய் ஆறும் வரை பொறுமையாய் அவன் உதவியை சகித்துக் கொண்டாள்.

திருமணம் ஆன புதிதில் 'ஓ... மனைவியாயிற்றே' என்று தான் அவனுக்கு பணிவிடை செய்த நினைவு

வந்தது. இன்றைக்கு அவன் தனக்கு செய்வது நினைத்து வெட்கினாள்.

அன்று யசோதா அவளுடன் தொலைபேசியில் பேசினாள். சிந்துவும் அவளை விசாரித்து விட்டு முத்தம் தந்தாள். மாமியாரும் நாத்தினியும் மச்சினனும் கூட தன் மீது உயிரையே வைத்திருக்கிறார்கள். அது போதும்.

"என்னம்மா... இருக்கிறாய்தானே" ஓ... அத்தையின் குரல்... சிந்துவிடமிருந்து போனை வாங்கிக் கொண்டார் போலும்.

"என்ன அத்தை..."

"சிந்துவைப் பற்றிச் சொன்னேன். அது என்னவோ தெரியவில்லை. உன் மீது அவ்வளவு பாசம் என்கிறேன். விட்ட குறை தொட்ட குறை என்பது போல ஏதோ ஒரு தொடர்பு இருந்திருக்க வேண்டும்."

"எனக்கும் அவள் மீது ரொம்ப பிரியம் அத்தை. எனக்கு தங்கையில்லாத குறையோ என்னவோ அவள் மீது ஒட்டுதல் என எனக்குத் தோன்றுகிறது"

"இருக்கலாம் வினயா... ஏதோ ஒரு பந்தம்... சேர்த்து வைத்திருக்கிறது. இல்லாவிட்டால் ஏதோ ஒரு பத்திரிகையில் வந்த உன் படத்தை பார்த்து விட்டு அண்ணா இவள்தான் என் அண்ணி என அத்தனை உறுதியாய் சொல்லியிருப்பாளா?" என்று சொல்லிக் கொண்டிருந்த மாமியாரை இடைமறித்தாள் வினயா.

"என்ன சொல்கிறீர்கள் அத்தை. என் படம்... எந்த பத்திரிகை..."

"ஏதோ ஒரு பத்திரிகைம்மா. நினைவில் இல்லை. உன் பரதநாட்டிய போட்டோ தான்... ஏதோ ஒரு கலை நிகழ்ச்சிக்கு ஆடியது என்று நினைக்கிறேன். உன்னைப் பற்றி அதில் எழுதியிருந்தார்களே... ம்ம்... கல்லூரி



மாணவி... பாட்டு, வீணை... நாட்டியம் எல்லாவற்றிலும் முதல் என்று அதைப் பார்த்து விட்டு தான் சிந்து சொன்னது. அதுவரைக்கும் அவனுக்கு தெரியாது."

வினயா குழம்பிப் போனாள்... இது என்ன புதுச் செய்தி.

"என்னம்மா... பேச்சையே காணோம்... நம்ப முடியவில்லையா என்ன... உண்மையை தான் வினயா சொல்கிறேன். சிந்துஜா எந்த பெண்ணை தேர்ந்து எடுக்கிறாளோ அவளைத்தான் மனைவியாய் ஏற்றுக் கொள்வேன் என்று ஒரே மனதாய் இருந்தான் என் பிள்ளை. சிந்து உன்னைச் சுட்டிக் காட்டியதும் நீ தான் மனைவி என்று முடிவு செய்துவிட்டான்... தங்கையோட சந்தோஷம் தான் தனதும் என்று இருந்தவன்... சிந்து மீது அத்தனை பாசம்... சிந்துவின் தேர்வும் சோடை போகவில்லை வினயா... இந்த வீட்டுக்கு ஏற்ற மருமகள் நீ..."

பேசி முடித்த பின் யோசனையில் ஆழ்ந்தாள் வினயா. தங்கைக்காக வாழ்கின்ற அண்ணன்... உடன் பிறந்தவள் இதோ என்று சுட்டிய பெண்ணை மணப்பது? சாத்தியமா... முடியும் என்று செய்து காட்டியிருக்கிறானோ... தன் அண்ணன் ஒரு நாளாவது தங்கைக்கு என்று வாழ்ந்திருக்க வில்லையே... ஏதோ இரண்டு முறை எட்டிப் பார்த்து ஓடியவன் தான்.

ஜெயசந்திரன் போல இருப்பது தங்கைக்கு பெருமை தான்... கொடுத்து வைத்திருக்க வேண்டும்.

அது சரி... தன் புகைப்படம்... எந்தப் பத்திரிகையில் எப்போது வந்தது... தனக்குத் தெரியாமல்... அவனையே கேட்டு விட்டாள்.

அருகில் வந்து நின்று அவளை நிமிர்ந்து பார்த்தான்.

"இன்றைக்கு அத்தை போன் பண்ணினார்கள்"

''அப்படியா... என்னவாம்...?'' கையில் இருந்த கடிதத்தில் கண் பதித்தவாறே கேட்டான்.

''அவர் சொன்ன விஷயம் பற்றி உங்களிடம் கேட்டுத் தெரிந்து கொள்ளத்தான்...''

''என்ன அது வினயா''

''சிந்து என் போட்டோவைக் காட்டி இதுதான் அண்ணி என்று சொன்ன பின்பு என்னை மனைவியாய் தேர்ந்தெடுத்தீர்கள் என்றார். உண்மையா?''

தன் கையிலிருந்ததை கீழே வைத்து விட்ட அவள் புறம் திரும்பினான். ''உண்மைதான்... அப்புறம்.''

''அந்தப் போட்டோ எந்தப் பத்திரிகையில் வந்தது? அதுதான் தெரியவேண்டும்... ஏனென்றால் என் கவனத்திற்கு வரவில்லையே என்றுதான்...''

''ஞாயிறு செய்தி தாளில்... அதுவும் கோயமுத்தூர் எடிஷனில் மட்டும் தான்'' என்றவன் தன் பர்ஸை திறந்து பத்திரமாய் மடித்து வைத்திருந்த அந்த பேப்பர் துண்டை தந்தான்.

வண்ணப்படம் நடன அசைவில் எடுத்தது. படத்தின் கீழ் இரண்டாம் ஆண்டு மாணவி... வினயா... பரத நாட்டியம் வீணை... பாட்டு அனைத்திலும் முதல் பரிசினை தட்டிச் செல்லும் மாணவி... படிப்பிலும் சுட்டி...

புருவங்கள் சேர அவனைப் பார்த்தாள்.

''யார் தந்தது...''

''நான் தான்... வேறு யாரும் இல்லை.''

திகைத்துப் போனாள் ''நீங்கள்...? ஏன்... எதற்காக?''

''உட்கார்ந்து கொள்... ஒவ்வொன்றாய் ஆரம்பத்தில் இருந்து சொல்கிறேன்.'' அருகில் அமர்ந்து கொண்டாள்.

''உனக்கு தெரிந்ததுதான். என் தங்கை என்றால் எனக்கு உயிர்... இந்த உலகில் அவளுக்கு அடுத்துதான்



யாரும் என்று நினைப்பு... அவள் சிரித்தால் மனம் மலர்ந்து அவள் வாடி நின்றால் உள்ளம் சோர்ந்து விடுவேன். அவள் கனவு நசுங்கி சக்கர நாற்காலியே கதியென்று ஆனதும் அவளை எவ்வளவு சந்தோஷப்படுத்த வேண்டுமோ அவ்வளவும் முயற்சி செய்தேன்... எனக்கு பெண் பார்க்க ஆரம்பித்தார் என் அம்மா...பேச வந்தவர்களிடம் பெண்ணிற்கு நாட்டியம் வருமா, வீணை வருமா... பாட்டு வருமா என்று கேள்வி கேட்பாள் சிந்து. ஏதாவது ஒன்று குறைந்தாலும் வேண்டாம் என்று கத்துவாள்... தான் விரும்பிய கலைகளில் அண்ணி தேர்ந்தவளாய் இருக்க வேண்டும் அதாவது தன்னை தன் அண்ணியில் காண ஆசைப்பட்டாள் என்று சொல்லலாம்... அவளைத் தட்டிப் பேசவும் முடியாமல்... எனக்குத் திருமணம் முடிக்க வழி இல்லாமல் அம்மா தவித்ததும் பரிதாபமாய் இருந்தது. எனக்குத் திருமணமே வேண்டாம் என்று சொல்ல ஆரம்பித்தேன். ஆனால் அம்மா வற்புறுத்தலில் மறுபடியும் பெண் பார்க்கும் படலம்... முற்றுப் புள்ளி வைக்க ஒரு வழி தேடினேன்... நானே ஒரு பெண்ணைத் தேட ஆரம்பித்தேன். என் தங்கை விரும்பியதைப் போல உன்னைப் பார்த்தேன்.'' நிறுத்தினான் அவன்.

வினயாவிற்கு எல்லாமே புதுமையாய் தெரிந்தது. அத்தை சொன்னதுக்கு வேறாய் இவர் சொல்கிறாரே... தாய்க்கும் தெரியாமலா இத்தனையும்.

அவன் தொடர்ந்தான் ''ஏதோ கலை நிகழ்ச்சியில் தலைமை வகிக்க அழைத்த போது தான் ஆடும் மயிலாய்... பாடும் குயிலாய்... வீணை மீட்டும் சிலையாய் உன்னைப் பார்த்தது. ''கண்டேன் சீதையை'' என்று மனதினுள் கூவினேன். அன்றையிலிருந்து கல்லூரிச் செலவு

எல்லாம் நானே முன் வந்து ஏற்றுக் கொண்டேன். நானில்லாமல் எந்த நிகழ்ச்சியும் இல்லை என்ற நிலைக்கு கொண்டு வந்தேன். ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் உன்னை கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தேன்... தங்கைக்காகத்தான் என்று முதலில் சமாதானம் செய்து கொண்டேன். மெல்ல மெல்ல உன் அழகில்... உன் திறமையில்... நாட்டிய கண் அசைவில் என்னையே இழக்க ஆரம்பித்தேன்...''

அவன் சொல்லச் சொல்ல அவள் மனம் பறவையாய் சிறகடிக்க ஆரம்பித்தது. ஆகாயத்தில் மிதப்பது போல ஒரு உணர்வு.

''என் தங்கைக்கு மோசம் செய்யவில்லை. என்ற நம்பிக்கை என் மனதிற்கு உறுதியளித்தது. ஏன் என்றால் சிந்து என்னவெல்லாம் தகுதிகளாக விரும்பினாளோ அத்தனையும் உன்னிடத்தில் இருந்தது தான்... காலேஜ் போட்டோகிராபரிடம் உன் படத்தை வாங்கி எனக்குத் தெரிந்த பத்திரிகை ஆசிரியரை சந்தித்து வெளியிடும்படி செய்தேன்... அதை சிந்துவின் கண்ணில் படும்படி வைத்தேன்... வெற்றியும் கிடைத்தது...''

காதில் வார்த்தைகள் தேனாய் விழுந்தன. அவள் நினைத்தது போல ஏதோ மூர்க்கத்தனமாய் சுற்றி வந்து சவாலுக்காக மணக்கவில்லை... தங்கைக்கு என்று கடமைக்காக கட்டவில்லை. அவளை மனதார விரும்பி திருமணம் செய்து கொண்டிருக்கிறான்... அது போதும்... தேன் குளத்தில் அவளது உள்ளம் திளைத்துக் கொண்டிருந்த போதுதான் தேனீ கொட்டியது போல அவனது அடுத்த வார்த்தைகள் கொட்டியது...

அந்த வேதனையில் அவள் துடித்துப் போனாள்.



## 21

விழியோரம் கசிந்த நீரை சுண்டி விட்டாள் வினயா... அவள் மனம் முதல் நாள் தன் கணவன் பேசியதை அசை போட்டது...

என்னவெல்லாம் பேசி விட்டான்...

முதல் முதலில் அவனுடைய பேச்சில் சிறகடித்து பறந்தவள் அவனது பேச்சின் முடிவுரைக் கேட்டு ''தொப்'' பென்று விழுந்தது போல ஆனாள்.

காசிநாதர் அழைத்தும் சாப்பிடாமல் இருந்தாள். எதுவும் பிடிக்காமல் போனது எல்லாம் கசந்தது.

இது தனக்கு வேண்டியது தான். வேண்டிச் சென்றால் விலகிப் போகும்... என்பார்கள் அது சரிதான்.

கணவனின் வார்த்தைகள்...

''என் எண்ணத்தை செயலாக்குவதில் மும்முரமாய் இருந்ததால் ஒரு பெண்ணின் மனம் என்ன பாடுபடும் என்பதை நினைக்கவே மறந்து போனேன் வினயா. என் பணம்... செல்வாக்கு... அழகு எல்லாம் ஒரு பெண்ணைக் கட்டி இழுக்கும் என்று தப்புக் கணக்கு போட்டு விட்டேன். உன்னையே மனைவியாய் அடைய வேண்டும் என்ற வெறியில் உனக்கும் ஒரு மனம் இருக்கின்றது என்பதை உணரவில்லை... உன்னை வலுக்கட்டாயமாய் மணந்தேன்... அதற்கு காலம் கடந்து மன்னிப்புக் கேட்டுக் கொள்கிறேன்... ஒவ்வொரு வழியாய் தேடி என்னை விட்டு விலகிப் போனது தான் எனக்கு, என் வெற்றி மதர்ப்பிற்கு சவுக்கடியாய் அமைந்தது. ஆரம்பத்தில் உன்னைப் புரிந்து கொள்ளாமல், போகப் போக நீ என்னை மறுத்து ஒதுக்கத் தான் அப்படி நடக்கிறாய் என்று அறிந்த போது.. எல்லாம் போகட்டும்... கடைசியில் கீழே விழுந்து உன் உயிருக்கு ஆபத்தைத் தேடிக் கொள்ள

இருந்தாய் பார் அப்போது தான் நான் தோற்றுவிட்டேன் என்று முற்றிலுமாய் அறிந்து கொண்டேன்... இனியும் உன்னை என்னுடன் கட்டிப் போட்டு வைக்க விரும்பவில்லை... இதிலிருந்து கூடிய சீக்கிரம் உனக்கு விடுதலை கிடைக்க ஏற்பாடு செய்கிறேன் சிந்துவுக்காகவோ... என் அம்மாவிற்காகவோ உன்னை வதைப்பதில் நியாயமில்லை வினயா...''

அவனது கண்களில் தெரிந்தது இதயம் பட்ட வேதனை.

''ஜெய்... நான்...'' என்று ஆரம்பித்த அவளை கை உயர்த்தி நிறுத்தினான்.

''இப்போது எது சொன்னாலும் பொய்யாகத்தான் தோன்றும். நான் சொன்னதை நன்றாய் ஆலோசித்து விட்டு முடிவை சொல் போதும்.''

மறுபடியும் தன் வேலையில் ஆழ்ந்த அவனிடம் என்ன பேசி தீர்க்க முடியும்... இயலாமல் போய் படுத்துக் கொண்டாள்.

அன்று காலை அவள் விழிக்குமுன் எழுந்து சென்று விட்டான்... அவளை தவிர்க்கும் எண்ணத்தினாலோ என்னவோ.

அன்று இரவு வரத் தாமதமாகும் என்றும் வேண்டும் என்றால் அவள் தாய் வீட்டுக்குப் போய் வரலாம் என்றும் தொலைபேசியில் அழைத்துச் சொன்னான்.

அவளுக்கு போக விருப்பமில்லை...

கணவனிடம் மனம் விட்டுப் பேச வேண்டும்... தன் மனதின் மாற்றத்தை அவன் புரிந்து கொள்ள வேண்டும். அவனது சந்தேகத்தை போக்க வேண்டும் என்ற முடிவுடன் காத்திருந்தாள்.

வெகு நேரம் கழித்து வந்தான்... காசிநாதர் படுத்து உறங்கி விட்டார்.



அவள் காத்திருப்பதைக் கண்டு ''தூங்கவில்லையா வினயா'' என்றான்.

''தூக்கம் வரவில்லை ஜெய்...''

ஏன் என்று கேட்பான் என்று நினைத்தாள் கேட்கவில்லை. சாப்பாடு வேண்டாம் என்று சொல்லி விட்டு குளியலறைக்குள் சென்றான்.

அறைக்குள் வந்ததும் ''வினயா... ஒருவருடம் ஆகும் வரை நாம் காத்திருக்க வேண்டும்... அதற்கு பின்தான் முடியும் என்றார் வக்கீல்... உன்னால் முடியுமா...? என்னுடன் இருப்பது என்பது உனக்கு கஷ்டம் என்றால்... உன் வீட்டுக்குச் சென்று...''

''இது என் வீடு ஜெய்... அந்த உரிமையை விட்டுக் கொடுத்து போவதற்காக என் பெற்றவர்கள் அவ்வளவு செலவு பண்ண தேவையில்லையே...''

''வெறும் உரிமை மட்டும் போதாதும்மா... அன்பும் இருந்தால் தான் வாழ்க்கை இனிக்கும்...''

அதற்கு பதில் சொல்லும் முன் பேச்சை மாற்றினான்.

''உன் பெயரில் பாங்கில் எஸ்.பி. அக்கவுண்ட் ஆரம்பிக்க வேண்டும் வினயா. நாளை தயாராய் இரு...''

''எதற்கு இப்போது அவசரம்...''

''உன் பெயரில் பணம் போட வேண்டும்''

''எதற்கு அந்தப் பணம்?''

''என் மனத்திருப்திக்காக என்று வைத்துக் கொள்ளேன்''

''நீங்கள் செய்ததற்கு பிராயசித்தம் செய்வதாய் நினைப்பா ஜெய்...'' கோபத்துடன் கேட்டாள் அவள்.

''இல்லை... இத்தனை நாள் என் மனைவியாய் நடித்தாய் என்ற நன்றிக்காக...''

பற்களை கடித்துக் கொண்டு ஆத்திரத்தை மென்று தின்றான்.

மனதில் போட்டு வைத்த கற்பனைகள் தவிடு பொடியாயின. மனப்பாடம் செய்து வைத்த பேச்சு மறந்தே போனது. என்ன சொல்லிப் புரிய வைப்பது...

''ஏன் வினயா... ஐந்து லட்சம் போதுமா... இன்னும் தேவையென்றாலும் கொடுக்கத் தயார்... எதுவாக...''

அங்கிருந்து ஓடினாள் அவள்... அவன் அவள் செல்வதையே வெறித்து நின்றான்....

அரை மணி கழித்தும் அவள் வராதது கண்டு அவளைத் தேடிச் சென்றான்...

அங்கே... சன்னலை பார்த்தவாறு நின்றிருந்தாள் அவள்... மேனி அதிர்வில் அவள் அழுகிறாள் என்று தெரிந்தது. எதற்காக என்றுதான் புரியவில்லை... நிச்சயம் தன்னை பிரிந்து செல்வதற்காக இருக்காது என்று நினைத்தான்.

அதே சமயம் அவள் அழுவது அவனால் தாளமுடியாமல் தவிக்கச் செய்தது...

''வினயா...'' அவளது தோளைத் தொட்டான். அவள் விறைத்து நின்றாள்... கையை விலக்க நினைக்கும் போது அவள் திரும்பினாள்.

கண்கள் சிவந்து முகமும் சிவந்து போயிருந்தது.

''இந்த அழுகைக்கு காரணம் நான்தானே வினயா?'' என்று வருத்தத்துடன் கேட்டான். ''ஆமாம்'' என்றாள் அவள்.

''செய்த தவறுக்கு மன்னிப்பு இல்லையா வினயா?... என்னை இன்னும் மன்னிக்கவில்லையா?'' நொந்த குரலில் கேட்டான்.

''செய்த தவறுக்கு என்றோ மன்னித்தாகி விட்டது ஜெய்... இப்போது செய்கிற தவறுக்குத்தான் கிடையாது...''



''புரியவில்லையே வினயா... விளக்கிச் சொல்லேன்'' என்று கேட்டான் அவன்...

''கேட்கின்ற பொறுமை இருக்கிறதா உங்களுக்கு''

அவளை அழைத்துச் சென்று கட்டிலில் அமர்த்தினான்.

''இப்போது சொல்... பொறுமையாய் கேட்கிறேன்.''

''நானும் தவறு செய்து விட்டேன் என்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும் ஜெய். சொன்னதை செய்து விட்டீர்கள் என்ற கோபத்தில், உங்களை தள்ளி வைக்க நினைத்தது நிஜம் தான்... அதற்காக ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு உபாயம் தேடினேன் நிஜம். என் அதிர்ஷ்டம் அது கிடைத்தது. ஆனால் கத்தரிக்காய் உங்களுக்கு ஆகாது எனத் தெரிந்தும் உங்களுக்கு சமைத்து போட்டேனே. அன்று உண்மையில் என் மீதே எனக்கு கோபம் வந்தது. ஆனால் பிரசாந்தின் தங்கையின் வாயிலாக நீங்கள் எனக்கு செய்த மோசம்... சாரி... அப்போது எனக்கு அப்படித்தான் பட்டது ஜெய்... அதை அறிந்து மறுபடியும் உங்கள் மீது குரோதம் கொப்பளித்தது... ஆனால் உங்கள் குடும்பத்தினர் காட்டிய அன்பில் அதுவும் குறைந்து போனது. ஆடி மாதத்தின் பிரிவினால் என் மனதிலும் பெரும் மாற்றம். என் தாய்க்காக நீங்கள் பட்ட பாடு... செலவழித்த பணம் என் மனதில் இருந்த அழுக்கை துடைத்துப் போட்டது. அத்தையும் நீங்களும் சொன்னது... அதாவது என்னை விரும்பி ஏற்றுக் கொண்டது அறிந்து என் சந்தோஷம் இன்னும் அதிகமானது... இனி ஆனந்த வாழ்க்கையைத் தொடங்க வேண்டும் என்று தான் என்னை அலங்கரித்துக் கொண்டு உங்கள் வரவுக்காக காத்திருந்தேன்... மரத்தில் சிக்கிய பட்டம் அன்றைக்கு என் ஆசைக்கு எதிரியாய் இருக்கப் போகிறது என்று நான் அறியவில்லை... நீங்கள்

உண்மையை சொல்லும் முன்னமேயே என் மனம் என்னையும் கேட்காமல் உங்களை மன்னித்து உங்களை ஏற்றுக் கொண்டு விட்டது... என்னை நம்புங்கள் ஜெய். வேண்டும் என்றே நான் விழவில்லை... உங்களைப் பார்த்த சந்தோஷத்தில் தடுமாறி கீழே விழுந்தேன் என்பது தான் சத்தியம்.''

அவள் சொல்வதை ஏற்றுக் கொள்ள சில நிமிடங்கள் தேவைப்பட்டது...

அதற்கு பின் அவளை இறுக அணைத்துக் கொண் டான்... ''வினு... என் வினயா...'' மந்திரமாய் அவன் பெயரை உச்சரித்தான். ''நீ வேண்டுமென்றே விழுந்தாய் என்ற நினைப்பில் என் உயிரே கழண்டு போனது போல எப்படித் தவித்துப் போனேன் தெரியுமா வினு.'' முகத் துடன் முகம் வைத்துப் பேசினான்.

''அவ்வளவு தவித்தவர் ஆஸ்பத்திரி பக்கம் வராமல் இருந்தது ஏனாம்?''

''என்னைத் தவிர்க்க இந்த வழி தேடினாய்... என்னைப் பார்க்காமல் இருப்பதே நல்லது என்று தான் ஒதுங்கியது.''

''இப்போது என் மீது கோபம் இல்லை என்பது நிச்சயம் தானே...'' என்றான் சீண்டுவது போல.

''இப்படியே சொல்லிக் கொண்டிருந்தால் தான் எனக்கு கோபம் வரும்... கோபத்தில் என்ன செய்வேன் தெரியுமா? உங்களை கடித்து விடுவேன் ஆமாம்'' என்றாள் வேடிக்கையாய்...

அதைக் கேட்ட அவன் சிரித்தான்...

22

இரண்டு மாதங்கள் வேகமாய் ஓடி போனதும் கோயமுத்தூரில் சிந்துவின்



முன் தான் வாக்குத் தந்தபடி புது நாட்டியம் ஒன்றை ஆடிக் காட்டிக் கொண்டிருந்தாள் வினயா.

முடிந்ததும் கைத்தட்டிய சிந்து ''அண்ணி, நான் சொல்லும் பாட்டுக்கு ஆடுவீர்களா? ப்ளீஸ்'' என்று கேட்டாள்.

''என்ன பாட்டு அது?''

சொன்னாள்... சினிமா பாட்டு என்றாலும் நடனப் பாட்டுத்தான்... ஆடிப் பழக்கம் இல்லையென்றாலும் சிந்துவுக்காக ஆடினாள்.

''காத்திருப்பான் கமலக் கண்ணன்... கனிந்து கனிந்து நெஞ்சம் நினைத்து நினைத்து...''

பாடிக் கொண்டே ஆடுவது கஷ்டமாக இருந்தது. சுழன்று திரும்பும் போது தலைச் சுற்றிக் கொண்டு வர சரிந்தாள்.

யசோதா ஓடி வந்து அவளை மடி மீது போட்டுக் கொண்டாள்.

பயந்து போன சிந்து ''அண்ணி'' என்று அலறிக் கொண்டு அருகில் சக்கர நாற்காலியை ஓட்டினாள்.

''என்னம்மா... வினயா... ஏதாவது'' என்று மாமியார் கேட்டவுடன் பதில் சொல்லாமல் தலை குனிந்து கொள்ள... சிவந்து போன முகம் கண்டு யசோதா புரிந்து கொண்டாள்.

''ஏம்மா... அண்ணிக்கு உடம்பு சரியில்லையா... பரத நாட்டியம் ஆட முடியாதா?'' என்று கேட்டாள் சிந்து. அவ ளுடைய மூக்கை செல்லமாய் திருகிவிட்டு ''இனி உன் அண்ணி எங்கே ஆடப் போகிறாள்'' என்றாள் யசோதா.

''ஏன்?'' அழுது விடுவது போலக் கேட்டாள் மகள்.

''அண்ணியின் வயிற்றில் குட்டிப் பாப்பாதான் குதித்து ப்போகிறது. உன்னை அத்தை என்று அழைக்கப் கிறது''

எல்லாம் மறந்து போய் புது மகிழ்ச்சியில் குதித்தாள். சக்கர நாற்காலியில் அமர்ந்த வாறே... "ஹைய்... நான் அத்தையா... ஏன் அண்ணி... அதுக்கும் நாட்டியம் கத்துக் கொடுக்கலாமா?" என்று ஆரம்பித்து விட்டாள்.

கேட்டுக் கொண்டு வந்த ரவி "என்னோட வாழ்த்துக்கள் அண்ணி. இனியும் ஏன் தயக்கம். உங்கள் கமலக் கண்ணன் அங்கு காத்திருக்கிறான்... போய் இந்த இனிப்பான செய்தியைச் சொல்லுங்கள்" என்றான் குறும்புடன்... உண்மையில் இந்த விஷயம் அவன் உள்ளத்தை குளிர வைத்தது. அண்ணன் அண்ணியின் தாம்பத்திய வாழ்க்கையின் சந்தோஷத்தை அடையாளம் காட்ட வந்திருக்கிறதே இந்தக் குழந்தை. அது போதும்.

அனைவரின் கேலிப் பேச்சைக் கேட்டு இன்னும் வெட்கப்பட்டு எழுந்து அவள் செல்ல... சிரிப்பலை எழுந்து அவளைத் துரத்தியது...

அந்தச் சத்தத்தை கேட்ட ஜெயசந்திரன் முகத்தில் கேள்விக் குறியுடன் அறையிலிருந்து வெளி வந்தான்.

அவள் அவனது காதில் ரகசியம் பேச... அவன் முகம் மலர்ந்து மனைவியைக் காதலுடன் பார்த்தான்.

"சரியில்லையே அண்ணா... அண்ணியைத் தூக்கி ஒரு சுற்று சுற்ற வேண்டாமா... அதைத் தானே நாங்கள் எதிர் பார்த்தோம்..." என்று பரிகசித்தான் ரவி.

"அப்படியா... உங்களுக்கு எதற்கு ஏமாற்றம் இதோ..." என்றவன், மனைவியை தூக்கி சுற்றினான்.

"போதுமா?"

தலை இன்னும் சுற்ற அவனை இறுக கட்டிக் கொண்டு "போதும் போதும்" என்று வினயா கூவ...

அதை மற்றவர்கள் கை தட்டி ரசித்தனர்.

❀